குத்தூசி

மாத வெளியீடு

KUTHOOSI: HIGH CLASS THAMIZH MONTHLY

ஆசிரியர்: சா. குருசாமி



H. G. வெல்ஸ்

ஊசி 2 குத்து 11

★ ஆகஸ்ட் 1964 ★

இதனுள் :

செய்யாமல் கெடும்

மதில் சுவர்: 10 லட்ச ரூ.

இராகுகாலம், சோதிடம்

அவநம்பிக்கையின் இன்பம்

ஆமையும் காதலும்

கோயில்கள் எதற்காக?

கபிலர் நாடகம்

புத்தரும் லிங்கனும்

— இன்னும் ப

அன்புடையீர்,

வணக்கம். நாங்கள் இதுவரை தமிழ் நாட்டுப் பொதுக்கல்வி இயக்குநர்

திரு. நெ. து. சுந்தரவடிவேலு

அவர்கள் எழுதிய 12 நூல்களை வெளியிட்டிருக்கிறோம்.

அவை :

1. தம்பீ நில்
2. நஞ்சு உண்டவர்
3. சிலுவையில் மாண்டவர்
4. குண்டுக்கு இரையானவர்
5. மின் விளக்கு
6. தங்கத் தாத்தா
7. வானொலி வழங்கியவர்
8. தோற்றும் வென்றவர்
9. பாக்கு வெட்டி
10. ஆறு
11. விளக்குப்பாவை
12. செஞ்சிலுவை தந்தவர்

அவற்றில் அரிய பெரிய கருத்துக்களை எளிய நடையில், தெளிவான முறையில், இளைஞர் முதல் பெரியோர் வரை ஆர்வத்தோடு படித்து இன்புறும் வகையில் தெரிவித்துள்ளார்கள். அவற்றைப் பெருமளவில் வாங்கிப் பயன் படுத்தியது எங்களுக்கு மகிழ்ச்சியையும் ஊக்கத்தையும் அளித்துள்ளது.

ஆகவே,

"எண்ண அலைகள்"

என்ற தலைப்பில் அவர்கள் எழுதிய 24 கட்டுரைகளின் தொகுப்பை இப்போது வெளியிட்டுள்ளோம். 240 பக்கங்கள் கொண்ட இந்நூலின் விலை ரூ. 2-40. நூலின் படிகள் வேண்டியவர்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதினால் அனுப்பப்பெறும்.

விற்பனைக்குத் தயார்!

முருகன் & கம்பெனி,

32, வெங்கடேச கிராமணி தெரு,

சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2.

குத்தூசி

[ஆசிரியர் : சா. குருசாமி]

— கட்சி சார்பற்ற பகுத்தறிவுக் கொள்கை ஏடு —

ஒவ்வொரு மாதமும் 4-ந் தேதியன்று வெளிவரும்.

தனி இதழ் : விலை 50 காசு ;

ஆண்டுக் கட்டணம் :

உள் நாடு : ரூ. 5 கொழும்பு : ரூ. 6

வெளி நாடு : ரூ. 9

ஓராண்டுக்குக் குறைந்த கட்டணம் இல்லை.

விற்பனையாளர் இல்லாத ஊர்களில்
ஆண்டுக் கட்டணம் அனுப்புவதே நல்லது.

விளம்பர விகிதம் :

பக்கம் ஒன்றுக்கு, ஒரு தடவைக்கு, 50 ரூபாய் ;
அட்டைப் பக்கத்துக்கு 75 ரூபாய் ;
இரு வர்ண அட்டைப் பக்கத்துக்கு 100 ரூபாய்.
(அரைப் பக்கம் : 25 ரூபாய்)

குறிப்பு :- நீடித்த விளம்பரத்துக்கு 50% கழிவு.

84, ஷெனாய் நகர் :: சென்னை-30.

குறிப்பு:—"குத்தூசி"யில் வரும் கட்டுரைகள் அனைத்தும் பதிப்புரிமை பெற்றவை ; முன் அநுமதியின்றி எவரும் வெளியிடக்கூடாது. கட்டுரையாளர் கருத்துக்கு ஆசிரியர் பொறுப்பாளியல்ல.

பணிமனையா? பஜனை மடமா?



''மெய்ப்பொருள் காண்பது அறிவு

ஊசி

ஊசி 2 ஆகஸ்ட் 1964 குத்து 11

செய்யாமையாலும் கெடும்!

இன்று இந்நாட்டின் அரசுத் தலைமையிலுள்ள பெரியார்கள் நல்லவர்கள்; உயர் நோக்கம் கொண்டவர்கள்; நாட்டின் உடனடி வளர்ச்சியில் நாட்டங் கொண்டவர்கள்; பொதுப் பணிக்காகப் பல்வேறு இழப்புகளுக்குள்ளானவர்கள். இந்த உண்மையை உலகமே ஒப்புக் கொள்கிறது.

ஆனால் இது போதுமா? நல்லான் ஒருவன் கண்களை மூடிக் கொண்டு தெரு ஓரத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தால் என்ன நடக்கும்? பித்தன் அல்லது சோம்பேறி என்று தானே பலரும் கூறுவர்?

இன்று இந்நாட்டிலுள்ள உடனடித் தொல்லைகள் இரண்டு. உணவுப் பொருள் விலை ஏற்றம்; லஞ்சமும் பதுக்கலும் மலை உச்சி.

சரி! இவ்விரண்டைப் பற்றிப் பேசாத நா இல்லை; எழுதாத ஏடில்லை. இதே குற்றத்தை இங்கு நாமும் செய்கிறோம்! உண்மை.

இவ்விரு பெருங்கேடுகளையும் ஒரே மாதத்தில் ஒழிக்க முடியும், அரசாங்கத்துக்குத் துணிவிருக்குமானால்!

குழந்தைக்குப் "பூச்சாண்டி" காட்டுவது போல், "அதோ புலி வருகிறது; இதோ வருகிறது", என்று சொல்லிக் கொண்டேயிருந்தால் போதுமா? செயல்திறன் வேண்டும்; அப்போது தான் தீயோர் நடுங்குவர்.

எதற்குமே சட்டமும், சாதியும், மதமும், கட்சியும், மொழியும் குறுக்கே நின்று தடுப்பதென்பது இந்நாட்டின் நீண்ட காலத் தீமையாகி விட்டது. நல்ல செயல்களை உடனடியாகச் செய்து சமுதாயத்தை நல்ல பாதையில்—அறிவுப் பாதையில்—அழைத்துச் செல்ல முடியாமலிருப்பதற்கு இதுதான் முற்ற காரணம்.

திடீரென்று ஒரு நள்ளிரவில் இந்தியா வெங்கும் ஏறத்தாழப் பத்தாயிரம் பதுக்கல்காரர்களைக் கைது செய்து பதுக்கல் பொருள்களைக் கைப்பற்றுவதென்றால் எப்படியிருக்கும்? உணவுப் பொருள் உற்பத்தியாளர்—மொத்த வியாபாரிகள்—ஆகியோர் பல்லாயிரக்கணக்கில் சிக்கி விட்டார்கள் என்ற செய்தி மறுநாள் காலையில் காட்டுத்தீப் போலப் பரவியதுமே, விலைவாசிகள், மலை மீதிருந்து உருட்டிவிட்ட பந்து போல் கீழ்நோக்கி ஓடி விடுவதைக் காணலாம். இம்மாதிரி நடவடிக்கைக்கு கட்சி பாசம் கூடாது; சாதி-மதப்பற்றுக் கூடாது. பற்றற்ற நடத்தை வேண்டும்.

நம் நாட்டில் கடந்த 17 ஆண்டுகளில் புதுப்புது நீர்ப்பாசனங்களின் விளைவாக நல்ல விளைச்சல். போதாக் குறைக்கு அடிக்கடி வெளி நாட்டு அரிசி—கோதுமை இறக்குமதி. அப்படியிருந்தும் விலை ஏறுவானேன்? ஏறிக்கொண்டே யிருப்பானேன்? உண்மையான பஞ்சமென்றால் என்ன பணம் கொடுத்தாலும் உணவுப் பொருள் கிடைக்கவில்லை என்றல்லவா இருக்க வேண்டும்? இன்றைய நிலை அப்படியல்லவே! லாரி லாரியாகப் பணத்தை அள்ளிக் கொட்டினால் அடுத்த நாளே, மலை மலையாக உணவுத் தானியங்களைக் குவித்து வைக்க முடியுமே!

ஆதலால், பதுக்கல் பெருச்சாளிகள் அல்லவா இந்த விலையேற்றத்துக்குக் காரணம்?

அரசாங்கம் விரும்பினால், அதாவது துணிவு பெற்றால், கட்சிக் கொடிகளின் திரைக்குப் பின்னால் பதுக்கப்பட்டுக் கிடக்கும் லட்சக் கணக்கான உணவுத் தானிய மூட்டைகள் ஏழை—நடுத்தர மக்களை நோக்கி ஓடி வருமே! நாள்தோறும் நாட்டில் ஆயிரம் இடங்களில் கைப்பற்றினாலும், தொடர்ந்து ஒரு மாதத்துக்கு மலை மலையாகக் கிடைத்துக் கொண்டிருக்குமே!

இது மட்டுமல்ல. "அன்னியச் செலாவணி" என்ற பெயரால் சர்க்கரை போன்ற உணவுப் பொருள்களை வெளி நாட்டுக்கு ஏற்றுமதி செய்து கொண்டிருப்பதையும் அரசாங்கம் உடனடியாக நிறுத்த வேண்டும்.

இனி, உணவுப் பொருளுக்கு அடுத்தபடி லஞ்சமும் பணப் பதுக்கலும்.

இதற்கும் இதே மருந்து தான். லஞ்சத் திமிங்கிலங்களில் தினசரி நூற்றுக்கணக்கானவை பிடிபட வேண்டும். இரண்டாண்டுகளுக்கு மேல், ஒரே இடத்தில் அரசாங்கப் பெரும் பணியாளர்கள் நீடித்துப் பணியாற்றவிடக் கூடாது.

அடுத்தபடியாக, வருமான வரி ஏமாற்றம், கள்ளக் கடத்தல், விற்பனை வரி ஏமாற்றம். இவற்றைத் தீவிரமாகக் கண்டு பிடிப்பதற்கு முன்பு, குறிப்பிட்ட ஓர் இரவில் திடீரென்று நாடெங்கிலுமுள்ள பாது காப்பு அறைகளை (safety vaults) அரசாங்கம் முத்திரை (seal) வைத்து விட்டு இவற்றிலுள்ள நகைகள், வைரங்கள், பதுக்கல் கரன்சிகள், பவுன்கள்—முதலியவற்றிற்கு அவரவர் வரவுக் கணக்குக் காட்டுமாறு கட்டளையிட வேண்டும். ஒரே மாதத்தில், நம்பக்கூடிய கணக்குக் காட்டாவிடில் இவற்றை அரசாங்கம் கைப்பற்றிக் கொள்ள வேண்டும். இதன் மூலம் பல பல கோடிக்கணக்கான ரூபாய் பதுக்கப்பட்டுக் கிடப்பதை மக்கள் நலனுக்காகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இம்மாதிரி நடவடிக்கைகளுக்கு — அதிர்ச்சி மருத்துவத்துக்கு — இன்று பெருந்தடையாயிருப்பது, அரசியல் சட்டம். "அடிப்படை உரிமை" என்ற பெயரால் கொள்ளையடிப்பவர்கள் பாதுகாப்பு அறைகளில் இடம் பெற்று விட்டனர். ஆதலால் முதலில் சட்டத் தடையை எடுத்தெறிய வேண்டும். இரண்டாவது தடை, மேலே கூறியதுபோல், கட்சி–சாதி–மத–மொழி–பாசம்! இந்தப் பாசம் உள்ள வரையில் இந் நாட்டிலுள்ள கேடுகளை ஒழிக்கவே முடியாது. உலகில் 'நீதி' என்பதன் கண்கள் கட்டப்பட்டிருப்பது போல் இங்கு 'நிர்வாகம்' என்பதன் கண்களும் கட்டப்பட்டிருக்க வேண்டும்.

அரசாங்கத்துக்கு ஒன்று கூறுகிறோம். "செய்தக்க செய்யாமை யாலும் கெடும்." இன்று சமுதாய ஊழல்கள் பெருகிக் கொண்டே யிருப்பதற்குக் காரணம், அரசாங்கம் செய்யத்தக்க செயல்களை சூட்டோடு சூடாக், சுறுசுறுப்பாக, உடனடியாக, செய்யாமல் விட்டுக் கொண்டிருப்பது தான்.

நல்லவர்கள் ஆட்சிபீடத்தில் இருப்பது மட்டுமே போதாது. நல்ல செயல்களைத் தள்ளிப் போட்டுக் கொண்டே யிராமல் துணிவுடன் நடவடிக்கையில் இறங்கவேண்டும்.

பேச்சும், எழுத்தும் போதும்! உடனடி நடவடிக்கை தான் தேவை! போர்முனையில் எதிரியின் துப்பாக்கிக்கு எதிரில் நின்று கொண்டு பேச்சிலும் எழுத்திலும் ஈடுபடக் கருதுபவன் போர் வீரனாகமாட்டான்.

மதில் சுவர்: பத்து லட்சம்!

உணவுப் பொருள் விலை ஏறினாலென்ன? குடும்பம் நடத்த முடியாவிட்டாலென்ன? குடியிருப்பதற்குக் குடிசை கூட இல்லாதவர் கோடிக்கணக்கில் இருந்தாலென்ன? நான் உண்டாக்கிய மக்கள் நாசமாய்ப் போனாலென்ன?

எனக்குக் கொண்டு வா, வேளா வேளைக்கு நெய்ச் சோறு! தலை முழுகப் பாலும் எண்ணெயும்! ஊர் சுற்றுவதற்கு வாகனமும் தேரும்! அணிந்து கொள்வதற்குப் பட்டாடையும் பவுன்—வைர நகைகளும்!

இம்மாதிரி உலகிலுள்ள எந்தக் கடவுளும் சொல்லாது; சொல்ல மாட்டார்: சொல்ல மாட்டாள்! இப்படிச் சொல்பவர் கடவுளல்லர்.

ஆனாலும் இதெல்லாம், தொடர்ச்சியாக இன்று தமிழகத்தில் நடந்து கொண்டேயிருப்பதன் காரணமென்ன?

கடவுள் கேட்கவில்லை; கள்ளச் சந்தைப் பணமும், பதுக்கல் பணமும் கடவுள் பெயரால் வெளி வருகின்றன. ஆம்! திருப்பதி உண்டியலில் கொட்டுவது போல!

இதுவும் நல்லது தானே,—என்று கேட்கலாம், சிலர்! அல்ல; நல்லதல்ல. மக்களுக்குப் பயன்படாத பணம் பதுங்கிக் கிடந்தாலென்ன? பவுன்—வைர நகையாக உருவெடுத்தாலென்ன?

ஒரு தமிழ்த் தினசரியில், மேலே தமிழ்நாடு அரசாங்கத்தின் கடன் கேட்கும் விளம்பரம். அதற்கடியில் இந்த விளம்பரம்:—

> "சிதம்பரம் ஸ்ரீ நடராஜர் கோயிலில் திருமதில் பழுதடைந்திருக்கும் நான்கு வெளி மதில்களையும் இடித்துப் புதிதாக 36 அடி உயரம் 5½ அடி அகலமுள்ள கருங்கல் சுவர்கள் எழுப்பத் தீர்மானித்து வேலையும் நடந்து வருகிறது. இதற்கு சுமார் ரூ. 10 லட்சம் செலவாகலாமென மதிப்பிடப்பட்டிருக்கிறது. இத்திருப்பணி வேலை பொதுஜனங்களின் நன்கொடையினால் நடத்தப்பட்டு வருவதால் பக்தர்கள் யாவரும் தங்களால் இயன்ற காணிக்கையை......என்ற விலாசத்துக்கு அனுப்பி வைத்து இப்புனித கைங்கரியத்தை விரைவில் முடி

வுடைய உதவி ஸ்ரீமந் நடராஜப் பெருமாள் அருளுக்கு பாத்திரராகுமாறு வேண்டுகிறோம்.

—ஸ்ரீ தில்லை திருமதில் திருப்பணி சபையார்

தில்லை நடராசன் உலகப் புகழ் பெற்றவரா யிருக்கலாம்! இவர் வீட்டையும் இவரையும் இவர் குடும்பத்தையும் பாதுகாப்பதற்காக அந்தக் காலத்தில் வேறு தொழில், வேறு தேவை—இல்லாத போது, 36 அடி உயரத்திலும், 5½ அடி அகலத்திலும் மதில் சுவர் எழுப்பி அதன் மூலம் ஏராளமான கல் தச்சர்களுக்கும், கட்டட வேலைக்காரர்களுக்கும் அக்கால மன்னர்கள் உடையும் உணவும் அளித்திருக்கலாம்.

இக்காலத்தில் 'திருமதில்' தேவைதானா? இரும்பு முள் வேலி போதாதா? அல்லது செடி முள் வேலியே போதாதா? கல் சுவர் தான் நடராசனின் விருப்பம் என்றாலும், ஆறடி உயரத்தில், ஒரு செங்கல் அகலத்தில் 'திருமதில்' இருந்தால் போதாதா?

திருத் தில்லையின் திரு நடராசப் பெருமானின் திருப் பெயரால் திருச் சிதம்பரத்தின் கண்ணே திரு ஆஸ்பத்திரி ஒன்றையோ, திருத் தொழிற்சாலை ஒன்றையோ நிறுவக் கூடாதா, திரு பக்தர் குழாம்?

குடிசைக்கு முன்பாகக் கோபுரம் எழும்புவது எந்தக் கடவுளுக்குத் தான் இன்பம் தரும் காட்சியாகும்?

ஸ்ரீ தில்லையின் ஸ்ரீ நடராஜனின் ஸ்ரீ மதில் சுவர் எழும்புவதை நம்மால் தடுக்க முடியாது; கள்ளக்குடியை அரசாங்கத்தினால் தடுக்க முடியாததுபோல்! ஆனாலும் நம் நாட்டு பக்தி உணர்ச்சி போய்க் கொண்டிருக்கின்ற அழிவுப் பாதையை—மக்களை மடமைப் படுகுழியில் தள்ளிக் கொண்டிருக்கின்ற போக்கை—அரசாங்கத்துக்கும் பொது நலத் தலைவர்கள் என்று கூறப்படுவோருக்கும் சுட்டிக் காட்டவே இதை எழுதுகிறோம்.

"நாடு முற்றும் கோயில் மயமாக்குதற்கும் நாட்டிலுள்ள சாத்திரங்கள் சம்மதிக்கும்;

பாடுபட்டுப் பார்ப்பனர்கள் பார்த்தாலன்றோ, பாரதத்தார் செல்வத்தில் பொறுப்பிருக்கும்?"

என்று பாடினார், பாரதிதாசன்!

ச. செந்தில்நாதன்

தமிழ் இலக்கியம்: இன்றைய நிலை

[எழுதப்படும் குப்பைகளெல்லாம் இலக்கியமாகி விடாது. என்றும் அழியாதது இலக்கியம். இன்று தமிழில் கவிதைத் துறை வளர்ந்திருப்பதுபோல் உரை நடைத்துறை வளரவில்லை. கலை நூல் துறையோ வளரவேயில்லை. கையும் காலும் சூம்பிப்போன உடல் மாதிரி இருக்கிறது, இன்றுள்ள தமிழ் இலக்கியம். படிப்பவர்களை நல்வழியில் கொண்டு போவது தமிழ் எழுத்தாளர் கடமை; அவர்கள் ஆசைக்கேற்ப எழுதித் தள்ளுவது அடிமை எழுத்தாகும். தமிழ் எழுத்தின் இன்றைய நிலையை சுட்டிக் காட்டுவது இக்கட்டுரை.]

தமிழ் இலக்கியத்தின் இன்றைய நிலை எப்படி இருக்கிறது? இந்த வினாவை எழுப்பிச் சற்று எண்ணிப் பார்ப்பது நல்லது. போற்றக் கூடிய அளவிலும் இல்லை; தூற்றக் கூடிய அளவிலும் இல்லை. பெரும் வளர்ச்சி என்றும் கூறமுடியாது; வளரவே இல்லை என்றும் கூறிவிட முடியாது. இப்படித்தான், பொதுவாக எண்ணுபவர்கள் முடிவுக்கு வருவார்கள்.

முன்னைவிட, இந்நாளில் தமிழ் என்னும் பேருணர்ச்சி பெருகி நிற்கின்றது. "எனக்குத் தமிழில் பேச வராது" என்று "பெரிய மனிதர்களும்" பெரும் பதவிக்காரர்களும் சொல்லிய நிலை மாறி, "தமிழ் எவ்வளவு பெரிய மொழி, வள்ளுவனும் கம்பனும் என்ன, சாதாரணமானவர்களா?" என்று சொல்லும் நிலை வந்துவிட்டது. பாரதியார் கவிதையில் ஒரு வரியையாவது நினைவுபடுத்தி ஒப்பிக்கவும் அவர்கள் தயங்குவதில்லை. பொதுவாக, "தமிழ்! தமிழ்!!" என்று எல்லோரும் சொல்லும் நிலை வந்து விட்டது.

இந்த நிலையை எண்ணி நாம் பெருமைப் படலாம். வளராத துறைகள் வளர்வதை எண்ணி மகிழ்ச்சியடையலாம். உரைநடையின் விரைவான வளர்ச்சியை எண்ணி வியப்பும் அடையலாம். எனினும், கவிதையைத் தவிர மற்றப் பிரிவுகள் போதிய வளர்ச்சியைப் பெறவில்லை; தமிழ் இலக்கிய உலகம், சரியாகப் பண்படவில்லை என்றே சொல்ல வேண்டும்.

தமிழ் இலக்கியத்தின் பல்வேறு நிலைகளையும், தனித் தனியே பிரித்து ஆய்வோம். அப்போதுதான் தெளிவான சில முடிவுகளுக்கு வர இயலும். முதலில், தமிழ்நாட்டு இலக்கியச் சுவைஞர்கள் — படிப்பவர்கள் — எவ்வாறு இருக்கின்றார்கள் என்று பார்ப்போம். எவ்வளவு

எழுதிக் குவித்தாலும், படிப்பவர்கள் பண்பட்டு இல்லையானால் பயன் என்ன? எனவே, அவர்களை முதலில் சந்திப்பதுதான் பொருத்தமுடையதாகும்.

இன்றைய எழுத்தாளர்கள்

தமிழ் ஏடுகளையும் நூல்களையும் விரும்பிப் படிக்கின்றவர்கள் பெரும்பாலும் குழம்பிப் போய் இருக்கிறார்கள் என்று சொன்னால் மிகையாகாது. போலிகளையும் உண்மைகளையும் அடையாளம் கண்டு கொள்ள முடியாமல் தவிக்கின்றார்கள். எந்தெந்த எழுத்துக்கள் இலக்கியம், எந்தெந்த எழுத்துக்கள் இலக்கியம் அல்ல என்பதைப் பகுத்துணர முடியாமல் இடர்ப்படுகிறார்கள்.

புகழ் பெற்ற நாலு கிழமை ஏடுகளில் கதை எழுதி விட்டால், அவர்களைப் பெரிய "ஆள்" என்று கருதி விடுகிறார்கள். அக்கதைகளைப் பெரிய இலக்கியம் என்றும், அது பெரும் இலக்கியப் பணி என்றும் எண்ணி விடுகிறார்கள். எந்தக் கதைகளுக்கு இலக்கிய மதிப்பு (Literary value) உண்டு என்பதை உணரும் ஆற்றல் இன்றி, எல்லாக் கதைகளையும் ஒன்றாகவே நினைத்து விடுகிறார்கள்.

மேலும், இலக்கியம், கலை, பொருளியல், அறிவியல் இவைகளைப் பற்றிக் கட்டுரை எழுதுகின்றவர்களெல்லாம் சாதாரண எழுத்தாளர்களாம். 'அம்மாமி' நடையிலும், 'ஆங்கிலோ-தமிழ்' நடையிலும் குப்பைக் கதைகள் எழுதுபவர்களெல்லாம் படைப்பு எழுத்தாளர்களாம்! இந்த எண்ணம் படிப்பவர்களிடையே மட்டுமல்ல, பல எழுத்தாளர்கள் மத்தியிலும் இருக்கிறது. எழுத்தாளர்கள் சங்கங்களிலெல்லாம், இந்தக் குப்பைக் கதையாசிரியர்கள் நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு நடக்கின்றார்களாம். இவர்களே அறியாமையில் மூழ்கிக்கிடக்கும் போது, இந்தப் 'பேராசிரியர்களின்' கதைகளைப் படிக்கின்றவர்களைப் பற்றி என்ன சொல்ல முடியும்?

அடுத்து, மேடைப் பேச்சாளர்களின் சில சொற்பொழிவுகள் நூல் வடிவைப் பெற்று விடுகின்றன. அதனால், பேச்சாளர்களைக் கூட எழுத்தாளர்கள் என்று சிலர் நினைத்து விடுகின்றனர். வானொலியில் "உப்பில்லா" நாடகங்கள் சில ஒலி பரப்பப்படுகின்றன. அதனால், அதை எழுதியவர்களையெல்லாம் பெரிய நாடக ஆசிரியர்கள் என்று நம்பி விடுகின்றனர். திரையுலகில் புகுந்து ஒரு படத்திற்கு உரையாடல் எழுதி விட்டவர்களெல்லாம் எப்படி மதிக்கப்படுகின்றனர் என்பதைச் சொற்களால் சொல்ல இயலாது.

பொழுது போக்குக்காக எழுதப்படுபவைகளையெல்லாம் "இலக்கியம்" என்று எண்ணி ஏமாந்து போகிறவர்களின் எண்ணிக்கை இன்னும் குறையவில்லை. இதனால் எழுதப்படும் எல்லாச் சிறுகதைகளையும் புதினங்களையும் இலக்கியம் என்று நம்பி, போலிகளைத் தூக்கி வைத்துப் 'பூசை' செய்கின்றனர்.

ஒரே வரியில் சொல்ல வேண்டுமானால், பொன் எது, பித்தளை எது என்பது அவர்களுக்குத் தெரியவில்லை. பித்தளையினின்றும் பொன்னை வேறுபடுத்திக் கொள்ள அவர்களிடம் உரைகல் இல்லை. அந்த உரைகல்லை —இலக்கியம் எது என்று பகுத்துணரும் அடிப்படை இலக்கிய அறிவைப் படிக்கின்றவர்களுக்கு அளிக்க வேண்டியது இன்றை

யக் கட்டுரையாளர்களின் கட்டமையாகும்; திறனாய்வாளர்களின் ஒரு தொழிலுமாகும்.

போலியும் உண்மையும்

படிப்பவர்கள், படித்து முடித்ததைப் பற்றிச் சிந்திக்கும் பழக்கத்தை வளர்த்தால் ஒழிய—திறனாய்வை வளர்த்து விட்டாலொழிய, உண்மை எழுத்துக்கள் உயர்வைப் பெற முடியாது. இலக்கியம் என்றால் என்ன? அதன் சிறப்பு யாது? கவிதை, கதைகளின் தன்மை என்ன? அவை காட்டும் வாழ்க்கை யாது? என்பன போன்ற கேள்விகள் படிப்பவர்கள் உள்ளத்திலே எழ வேண்டும்; திறனாய்வாளர்கள் எழுப்ப வேண்டும்.

படிப்பவர்களின் தரம் உயர்ந்தால்தான், படிக்கப்படும் நூல்களின் தரம் உயரும். அப்போதுதான் போலி எழுத்துக்கள் விலகி நிற்க, ''உண்மை எழுத்துக்கள் பயணத்தைத் தொடர முடியும். இவற்றை எல்லாம் செய்து முடிக்கும் ஆற்றல் திறனாய்வுக் கலைக்கு மட்டும்தான் உண்டு. அக்கலை வளர்ந்தால் தான் இலக்கிய வயலிலுள்ள களைகள் நீங்கும்.

தமிழ்நாட்டில் இன்று நூல்களைப் படிக்கும் ஆர்வம் வளர்ந்தோங்கி வருகின்றது. அந்த ஆர்வத்தைச் சரியாகப் பயன்படுத்திக் கொண்டால் தான், இலக்கிய உலகில் சில புதிய முயற்சிகளைத் தொடர முடியும். இலக்கியப் பசி நிறைந்த மக்களுக்கு நல்ல சத்துள்ள உணவை அளிப்போம்; அப்போதுதான் அவர்கள் வலுவுள்ளவர்களாக இருப்பார்கள். கண்டதைப் போட்டு வயிற்றை நிரப்ப வேண்டாம்; அது நோய் தரும்.

''மக்கள் ஆட்சியில் (ஜனநாயகம்) முரட்டுத்தனமான நம்பிக்கை வைத்திருப்பது மக்கள் ஆட்சியின் அமைப்புக்களை நடக்க முடியாமல் செய்துவிடும்.''

—பர்ட்ரண்டு ரஸ்ஸல்.

x x x

'' சிரிப்பும் கண்ணீரும் ஒரே மனோ உணர்ச்சி சக்கரத்தைச் சுற்றச் செய்வதற்காக ஏற்பட்டவை. ஒன்று காற்றுசக்தி; மற்றொன்று நீர்சக்தி. இதுதான் வேற்றுமை.''

—O. W. Holmes

x x x

'' திராட்சைக் கொடி உரிய காலத்தில் மீண்டும் மீண்டும் காய்த்துப் பழுப்பதுபோல் நல்லவர்கள் தாங்கள் செய்யும் நன்மைபற்றி விளம்பரஞ் செய்ய மாட்டார்கள்; மீண்டும் பிறருக்குச் செய்து கொண்டேயிருப்பார்கள்.''

—Marcus Aurelius

உலகப் பெரியார் வரலாறு:

எச். ஜி. வெல்ஸ்

[சா. கு.]

உலகப் பெரியோர்களில் மிகச் சிலருக்குத்தான், சாக்ரட்டீஸ், லிங்கன், காந்தி, கென்னடி, நேரு-போன்றோருக்குக் கிடைத்த மாதிரி மரணம் கிடைக்கும். மற்றவர்கள் எரிந்து முடிந்து அவிந்து அடங்கிய எரிமலைபோல், தங்கள் தொண்டு முடிந்து பல ஆண்டுகள் கழித்து செல்வாக்கிழந்து, உணர்ச்சி இழந்து, படுக்கையில் கிடந்து அவதிப்பட்டு முடிவெய்துவர்.

இத்தகையவர்களில் ஒருவரே, எச். ஜி. வெல்ஸ். 1946 ஆகஸ்ட் 13ந் தேதி பிற்பகல். தனியே படுக்கையில் மரணமாகிக் கிடந்தார், உலகப் புகழ்பெற்ற சோஷலிச—பகுத்தறிவு வாதி எச். ஜி. வெல்ஸ். சாகும்போது வயது எண்பது.

இறப்பதற்குப் பதினைந்து ஆண்டுகட்கு முன்பு, அவரது ஒவ்வொரு சொல்லையும் உலகம் படித்துப் படித்து இன்புற்றுக் கொண்டிருந்தது. அமெரிக்க இங்கர்சால் நாத்திகராயிருந்தும் அவரது பேச்சையும் எழுத்தையும் அன்று அமெரிக்கா எப்படி அள்ளியள்ளிப் பருகிக் கொண்டிருந்ததோ, அதே போல் அறிவியல் வாதியான வெல்சின் நூற்றுக்கு மேற்பட்ட நூல்களைப் படித்துப் பரவசமடைந்து கொண்டிருந்தது, இங்கிலீஷ் படித்த உலகம்.

ஆனல் இன்றே (1946) பல்லாயிரம் பேர் வரவேண்டியதற்குப் பதிலாக குறிப்பிட்ட பெரியவர்கள் மட்டுமே இவரது சவ ஊர்வலத்தில் கலந்துகொண்டனர்.

இல்வாழ்க்கையிலும் இன்பமில்லை; உடல் நிலையும் சரியில்லை. பெற்றோரும் ஏழைகள். என்ருலும் வெல்ஸ் இடைவிடாத எழுத்துத் தொண்டில் மூழ்கிக் கிடந்தார். பல நாவல்கள்; சிறு கதைகள்; பொருளாதாரக் கட்டுரைகள்; வரலாறுகள்; அறிவியல் (பகுத்தறிவு) நூல்கள். எல்லாம் ஏறத்தாழ நூற்றைம்பது!

எழுத்துச் சிறப்பு

இவருடைய நூல்களிலெல்லாம் மிகச் சிறந்தது, "வரலாற்றின் சுருக்கம்" (The Outline of History) என்பதாகும். குறுகிய நாட்டுப்பற்றைவிட்டு உலக மனித சமுதாயத்தைக் குறிக்கோளாகக் கொண்டே வரலாற்றைப் படிக்க வேண்டும், கற்பிக்க வேண்டும், என்பதே இந்நூலின் கருத்து.

இவரது நாவல்களில் டிக்கன்ஸ் நாவல்களைப் போல், நகைச்சுவை மிகுந்திருக்கும்; அந்நகைச்சுவைக்குப் பின்னுல் அறிவுரைகள் ஒளிந்து கொண்டிருக்கும்.

வெல்ஸ் மத நம்பிக்கையற்றவர்; கடவுள் நம்பிக்கையற்றவர். லண்டன் பகுத்தறிவு சங்கத்தில் பல ஆண்டுகள் தலைவராயிருந்து பணியாற்றியவர்.

ஆண்-பெண் தொடர்பு பற்றிய இவரது கருத்துரைகள் புரட்சிகரமானவை; பர்ட்ரண்டு ரஸ்ஸல், பர்னார்ட்ஷா இவர்களின் கருத்தை ஒட்டியவை. (இவர்கள் இவரது நெருங்கிய நண்பர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.) புதுமை நிறைந்த இவரது பொருளாதார-சமுதாய கருத்துக்களை வன்முறை மூலமோ, புரட்சி மூலமோ திணிக்கக் கூடாதென்றும், ஆண்களும் பெண்களும் பகுத்தறிவைப் பயன்படுத்தி அவற்றைக் கடைப் பிடிக்க வேண்டுமென்றும் கூறி வந்தார்.

வெல்சுக்கு—மற்ற சீர்திருத்தவாதிகளைப் போன்ற—தலைமைப் பதவியில் ஆசையே கிடையாது. மன்னர்கள், மன்னர் ஆட்சி இரண்டிலும் மகா வெறுப்பு. "புகழ் வாய்ந்த சான்றோர்" என்ற கருத்தோட்டத்தையே வெறுத்தார். தனித்தலைமை என்பதையும் தலைமை வணக்கத்தையும் அழுத்தமாகக் கண்டித்தார். எல்லா மக்களும் சரிசமமாகப் பழக வேண்டும் என்பதே அவர் கருத்து. பாமர மக்களுக்கு எல்லாத்துறைகளிலும் புத்துணர்ச்சி உண்டாக்கிக் கைகொடுத்துத் தூக்கிவிட வேண்டுமென்பதே அவரது வாழ்க்கைக் குறிக்கோள்.

குடும்ப நிலை

தந்தையார் கிரிக்கெட் விளையர்ட்டைத் தொழிலாகக் கொண்டவர்; (பிள்ளைக்கும் கிரிக்கெட்டில் நல்ல தேர்ச்சி உண்டு.) தாயார் பணக்காரக் குடும்பம் ஒன்றில் பணியாற்றியவர். எனவே 'செல்வக் குடும்பங்கள் வெல்ஸ் குடும்பத்தைக் கீழாக நினைத்ததிலும், வெல்ஸ் செல்வச் சீமான்களையும் மன்னர் வாழ்க்கையையும் வெறுத்ததிலும் வியப்பென்ன? செல்வர்களிலும் நல்லவர்கள் சிலருண்டு என்பதை இவர் மறுத்ததில்லை.

ஏழ்மைக்கிடையிலும் வெல்ஸ் விஞ்ஞானத் துறையில் படித்து கல்லூரிப் பட்டத்தையும் பெற்றார். பிறகு எழுத்துத் துறையில் புகுந்தார்.

எழுத்துத் துறையில் விரைவாக முன்னேறி, உலக கவனத்தை ஈர்த்தார். நாற்பதாவது வயதிலேயே பணமும் புகழும் குவிந்தன. இரண்டும் சேர்ந்தவுடனே செல்வர்கள் இவரை நாடி வந்தனர். இயற்கை தானே!

செல்வர்களிலும் பலர் விஞ்ஞானத் துறையிலும், அறிவுத்துறையிலும், கலைத்துறையிலும் முன்னணியிலிருந்ததைப் பாராட்டிப் புகழ்வார். வர்க்கப் போராட்டம் என்பது இவருக்கு வேம்பு. மனிதராய்ப் பிறந்த எவரும் அவரவர் அறிவையும் திறமையையும் வெளிப்படுத்துவதற்கு உரிமை கொண்டவராயிருக்க வேண்டும் என்பதே இவர் கருத்து.

கிருஸ்து மதத்தையும் அது பற்றிய மூட நம்பிக்கைகளையும் கடுமையாக எதிர்த்து வந்தார்.

பெண் உரிமைக்காக வாதாடிய நூலாசிரியர்களில் வெல்சுக்கு சிறப்பான இடமுண்டு. பெண்களே எதிர்க்கும் அளவுக்குக்கூட அவர்களின் உரிமைக்காகப் போராடிக் கொண்டிருந்தார்.

வெல்ஸ், ஷா, பெல்லக், செஸ்டர்டன்; இந்நால்வரும் இலக்கியப் புலிகள். நால்வரும் சேர்ந்து ஒரே இடத்தில் பல சமயங்களில் உரத்த குரலில் வாதிட்டுக் கொண்டும், உரக்கச் சிரித்துக் கொண்டுமிருப்பார்களாம். வெல்ஸ், எழுத்தாளரேயொழிய

(தொடர்ச்சி 14-ம் பக்கம்)

ரா. பிச்சை

முத்தொள்ளாயிரப் பாடலில் காதல் காட்சிகள்

மூப்பெரும் முடியுடைய சேரன், சோழன், பாண்டியன் ஆகிய இவர்கள் மீது பாடப் பெற்ற மூன்று தொள்ளாயிரப் பாடல்களும் சேர்ந்து ஒரு நூலாகி முத்தொள்ளாயிரம் என்ற பெயரோடு வழங்கி வருகின்றன. இரண்டாயிரத்து எழுநூறு பாடல்களுள் நமக்குக் கிடைத்துள்ள பாட்ல்கள் புறத்திரட்டில் கண்டுள்ள ஒரு நூற்றெட்டுப் பாடல்களேயாம். இப்படிக் கிடைத்துள்ள பாடல்களும் வெண்பாக்கள்தாம். கவிஞர் தம் உள்ளத்தில் தோன்றிய எல்லா உணர்ச்சிகளையும் ஒரு முகப்படுத்தி உணர்வு குன்றுமல் தமிழ்ப்பண்புடன் காப்பியப் பண்பு மிளிர முத்தொள்ளாயிரப் பாடல்களை இயற்றிப் போந்தார்.

காதலனது நாடு, நகரம், சேனை முதலியவற்றின் சிறப்புக்களைத் தலைவியின் வாயிலாகச் சொல்வதோடு தலைவி தலைவன் மேல் கொண்டுள்ள காதற் சிறப்புக்களை அழகுற விளக்குகின்றது இந்நூல். முத்தொள்ளாயிரப் பாடல்களில் கண்டுள்ள வருணனைகளைத் தனித்தும் காதற்றுறையொடு நோக்கியும் பார்க்க அழகிய சுவையுடையன வாய்ப் புலப்படும். இங்ஙனமே வருணனைப் பகுதிகளையும், வீரச்சுவை செறிந்த பகுதிகளையும் ஒப்புநோக்கிக் கவி நலத்தை இன்புறலாம்.

காதற்றுறையின் சிறந்த பகுதிகள் நான்கு. அவைகள் முறையே தலைவி, நற்றுய், செவிலித்தாய், தோழி என்பனவாகும். இந் நான்கு உறுப்புக்களும் பேசும் முறை நாடக நிலையாகும். நாடக உறுப்புக்களை இம்முறைப்படி அமைத்துக் கொண்டு நோக்கின் காதற் கவிகளின் உண்மை வேகமும், சுவையும் நன்கு தெரிய வரும்.

முத்தொள்ளாயிரப் பாடல் ஒவ்வொன்றையும் நோக்க மிகவும் அற்புதமான உணர்ச்சிகளுடன் கூடிய காட்சிகளைக் கண்டு இன்புறலாம். இனி ஒரு சில காதல் காட்சிகளை ஈண்டு காணலாம்.

பெரிய குதிரைகள் பூட்டிய தேரில் சேரன் உலாப் புறப்பட்டு விட்டான். தாயும் மகளுமாக உள்ள ஒரு வீட்டில் உலாவாக வரும் அரசனைத் தன் மகள் கண்டுவிட்டால், காதலால் உழன்று விடுவாள் என்பதனைத் தாய் உணர்ந்து, தன் வீட்டு வாயிற் கதவை அடைத்து விட்டு உள்ளே செல்கிருள். தாய் சென்றவுடனே மகள் கதவைத் திறந்து சேரன் உலா வருவதை எதிர் நோக்குகிருள். சிறிது நேரங் கழித்துக் கதவு திறக்கப் பட்டிருப்பதைக் கண்ட தாய் மீண்டும் அடைத்துவிட்டு உள்ளே செல்கிருள். இவ்விதமாகவே கதவு அடைக்கப்பட்டும் திறக்கப்பட்டும் தேய்ந்து நிற்கிறது. காதல் வயப்பட்ட இள நங்கை ஒருத்தியின் காதலுணர்வு எத்தகையது என்பது இக்காட்சியில் விளங்கும்:

"தாயர் அடைப்ப
மகளிர் திறந்திட,
தேயத் திரிந்த
குடுமியவே! ஆய்மலர்
வண்டுலாஅம் கண்ணி
வயமான்தேர்க் கோதைமை
கண்டுலாஅம் வீதிக் கதவு."

அரசன் உலாவைக் காணத் தெருவின் பல வீடுகளிலும் கதவுகள் திறக்கப்பட்டும் அடைக்கப்பட்டும் இருக்கும் நிலையைத் 'தேயத் திரிந்த குடுமியவே' என்ற தொடரால் குறிக்கின்றார்.

காதல் தலைவனாகிய சோழன் ஊடும்போதெல்லாம் திரும்பி நின்று கொள்வாள்; தலைவன் கட்டி அணைக்கும்போது, நாணத்தினால் தலைகவிழ்ந்து நிற்பாள்; கலவியிலோ புலன்களனைத்தும் மயங்கி நிற்கும்; விழித்திருந்தாலும் கண்ணுக்குத் தெரியாது. இம்முறையில் தோழியினிடம் தலைவி எக்களிப்புடன் பேசுவதைக் காணலாம்.

"புலவி புறக்கொடுப்பன்,
புல்லிடின் நாண் நிற்பன்,
கலவி களிமயங்கிக்
காணேன்; நிலவியசீர்
மண்ஆளும் செங்கோல்
வளவனை, யான்ஈதன்றோ,
கண்ணாரக் கண்டறியா ஆறு."

மதுரைமா நகரின் இருமருங்கிலும் உயர்ந்த மாளிகைகள். தலைவர்கள் தத்தம் தலைவிகளிடம் வந்து இங்கிதமாகப் பேசுகிறார்கள். தலைவிகளோ ஊடல் மேற்கொள்கிறார்கள். ஊடலையுந் தணித்துக் கூடுதற்கு வழிகண்டு, பன்னீரில் சந்தனத்தைக் கரைத்துக் கிண்ணத்தோடு நெருங்குகிறார்கள். கிண்ணத்தை அப்படியே பற்றிப் பன்னீரில் கரைத்திட்ட சந்தனக் குழம்பைச் சாளரம் வழியாகத் தலைவியர் கொட்டிவிடுகிறார்கள். இவ்வாறு ஒவ்வொரு மாளிகையினின்றும் ஊடலின் காரணமாகச் சந்தனக் குழம்பு வீதியில் பொழிய சேறு நிறைந்து காணப்படுகின்றது.

"மைந்தரோ(டு) ஊடி,
மகளிர் திமிர்ந்திட்ட
குங்கும ஈர்ஞ்சாந்தின்
சேறிமுக்கி, எங்கும்
தடுமாறல் ஆகிய
தன்மைத்தே—தென்னன்
நெடுமாடக் கூடல் அகம்!"

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சாளரல்லர். சாதாரணமாகப் பெரும்பாலான எழுத்தாளர்களின் நூல்களில் இரண்டு மூன்று தான் தனிச்சிறப்புடையனவாக இருக்கும்; மற்றவை வெறும் குப்பை—கூலங்களாயிருக்கும்! ஆனால் இவர் எழுதியுள்ள நூல்களில் ஏறத்தாழ இருபது நூல்கள் முதல்தரமானவை; அழியாமல் நிற்கக் கூடியவை.

இவர் பத்திரிகைகளுக்கு எழுதிய கட்டுரைகளுக்கெல்லாம் ஆயிரம் சொற்களுக்கு நூறு பவுன் வீதம் (ஒரு சொல்லின் விலை ஒன்றரை ரூபாய்!) ஊதியம் பெற்றார். "Mr. Britling" (பிரிட்லிங்) என்ற நூலுக்கு அமெரிக்கர் மூலம் 20,000 பவுன் கிடைத்தது! "Mr. Belloc Objects" ("பெல்லக் மறுக்கிறார்") என்ற நூல் மட்டும் 20 லட்சம் பிரதிகள் விற்றன; இதன் பதிப்புக்கள் மூலம் வெல்சுக்குக் கிடைத்த தொகை 60,000 பவுன்!

வெல்ஸ் தம் கொள்கைக்கு எதிரிகளாயிருந்த எவரையும் விட்டுவைக்காமல் கடுமையாகத் தாக்கி வந்தார். இதனால் நெருங்கிய நண்பர்களைக்கூட எதிரிகளாக்கிக் கொண்டார்.

பிரிட்டிஷ் எழுத்தாளர் உலகில் நாத்திகர் எச். ஜி. வெல்ஸ் தனியிடம் பெற்றுவிட்டார். அழியாப் புகழ்பெற்று விட்டார். ★★

மூட்டைப் பூச்சிகள்

[த. சலாவுத்தீன், B.SC., B.T.]

['மூட்டைப்பூச்சி' என்றால் ஒருவகைதானே நமக்கெல்லாம் தெரிந்தது? இதோ, இத்தனை வகைகள் இருக்கின்றனவாமே?]

மூட்டைப் பூச்சி என்று சொன்னவுடன் பலர் பயப்படுவார்கள். நம்மெல்லோருக்கும் தெரிந்த மூட்டைப்பூச்சி நாம் படுக்கும்போது நம்மைக் கடித்து தூங்க விடாமல் துன்புறுத்துகின்ற வீட்டிலுள்ள மூட்டைப் பூச்சிக்கள்தான். இவைகளை ஒழிப்பதற்காக உள்ள மருந்தை நம் நாட்டில் சிலர் தாங்களே குடித்து தற்கொலை செய்து கொள்கிறார்களே தவிர மூட்டைப் பூச்சிகளை ஒழிக்க உபயோகிப்பதில்லை. நாம் நினைப்பதுபோல் மூட்டைப்பூச்சியில் ஒரே ஒரு வகைதான் இருக்கிறது என்று எண்ணிவிட வேண்டாம். பல வகையான மூட்டைப் பூச்சிகள் இருக்கின்றன.

மூட்டைப்பூச்சிகள் 'ஹெமிப்டீரா' (Hemiptera) வரிசையைச் சேர்ந்தவை. இந்த வரிசையைச் சேர்ந்த பூச்சிகளுக் கெல்லாம் நான்கு சிறகுகள் இருக்கும். இதில் முன்னே உள்ள இரண்டு சிறகுகளின் நடுவில் தோல் இருக்கும். பின்னே இருக்கும் இரண்டு சிறகுகளின் நடுவில் சவ்வு இருக்கும். வாய்ப்பக்கத்தில் உறிஞ்சி அலகுபோல் இருக்கும்.

மூட்டைப்பூச்சிகளை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்:— (1) இலைகளை உணவாகக் கொள்பவை. (2) பூச்சிகளையும், மற்ற மூட்டைப்பூச்சிகளையும் உணவாகக் கொள்பவை.

இலைகளை உணவாகக் கொள்பவை

இந்த வகையைச் சேர்ந்த எல்லா மூட்டைப் பூச்சிகளும் கெட்ட நாற்றத்தை உடையவை (Stink Bugs) இந்தக் கெட்ட நாற்றத்துக்குக் காரணம் இதன் உடலில் கெட்ட நாற்றமுள்ள திரவத்தை சுரக்கும் சுரப்பிகள் இருப்பதுதான். இவ்வகையைச் சேர்ந்த மூட்டைப்பூச்சிகள் எல்லாம் பலவிதமான நிறங்களைக் கொண்டவை.

'ஹார்லிகுயின் பூச்சி' (Harlequin Bug)

இதனுடைய சிறகுகள் பளபளப்பானவை. கரும் ஊதா கலந்த நிறத்தில் சிகப்புப் பட்டைகள் இதன் உடலில் காணப்படும். இது விரும்பி உண்பது முட்டைக் கோசைத்தான். இது நம் நாட்டிலும் இருக்கின்றது. இது அதிகமாக இருக்கும் நாடு மெக்சிகோ,

'ஸ்குவாஷ் பூச்சி' (Squash Bug)

இவைகளை பூசனிக்காய் கொடியில் அதிகமாகக் காணலாம்.

இவைகள் இருந்தால் கொடி நாசமாய்ப் போய்விடும்.

'சின்ச்பூச்சி' (Chinch Bug)

இவைகள் மிகவும் சிறியவை. இவைகள் கோதுமை மற்ற தானியங்களை அழிக்கும். இது தன் இறக்கைகளை அதிகமாக உபயோகிப்பதில்லை.

பூச்சிகளை உணவாகக் கொள்பவை

இவ்வகையைச் சேர்ந்தவை அளவில் பெரியதாக இருக்கும். இவ்வகையைச் சேர்ந்தவைகள் நீரிலும் வாழும்; நிலத்திலும் வாழும். இவ்வகையைச் சேர்ந்த சில மூட்டைப் பூச்சிகளைக் கீழே காண்போம்:—

'நீர்மூட்டைப்பூச்சி' (Water Bug)

இவை மிகவும் பெரியவை; மூன்று அங்குல நீளமுடையவை; மிகவும் முரட்டுத்தனமானவை. இவைகள் நீரில் இருக்கும் பூச்சிகளின் இரத்தத்தை உணவாகக் கொள்கின்றன. இவை தங்கள் பக்கமாக வரும் நீர் வாழும் பூச்சிகள் வந்தால் அவைகளைத் தம் முன்னங் கால்களால் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு தன் உறிஞ்சியால் அதன் இரத்தத்தை உறிஞ்சிக் கொண்டு விட்டுவிடும். தவளைகள், நீர்ப்பாம்புகள், மீன்கள் முதலியன இவைகளுக்கு இரையாகின்றன. இவை நீருக்கு மேல் வந்து பறப்பதும் உண்டு. இவை நல்ல வேகத்தில் பறக்கும் தன்மையுடையவை. ஒரு முறை ஒரு நீர் மூட்டைப்பூச்சி ஒரு பறவையையே தாக்கி அதன் இரத்தத்தை உறிஞ்சியதாம். இந்த வகையைச் சேர்ந்த பெண் மூட்டைப்பூச்சிகள் ஆண்களை விட மிகவும் வலிமை பொருந்தியவை. இவை ஆண் பூச்சியை வலிய இழுத்து அதன் முதுகின் மேல் தன் முட்டைகளை இட்டு விடும். அவைகளை ஆண் பூச்சி, சிறு பூச்சிகளாக வெளிவரும் வரை தன் முதுகில் தாங்கிக் கொண்டு திரியும்.

பின் பக்கமாக நீந்தும் மூட்டைப் பூச்சி (Back Swimmers)

இது நீரைவிட இலேசானது. இது சிலசமயம் நீரின் மேலும் சிலசமயம் நீருக்குள்ளும் இருக்கும். இது நீருக்குள் செல்லும் போது பிராண வாயுவைத் தன் வயிற்றுப் பாகத்தில் சேகரித்துக் கொண்டு செல்லும். இரவு நேரத்தில் இது நீருக்குமேல் வந்து விளக்கொளியில் சுற்றிக்கொண்டிருக்கும்.

நீர்த்தேள் (Water Scorpion)

இதுவும் மூட்டைப்பூச்சி இனத்தைச் சேர்ந்தது. இது அதிகமாக நீருக்குள்ளேயே இருக்கும். எப்பொழுதாவது பறப்பதுண்டு. இதன் உணவு, மற்றப் பூச்சிகளின் முட்டைகள், மீனின் முட்டைகள் முதலியன.

இவைபோல் இன்னும் பல விதமான மூட்டைப் பூச்சிகள் இருக்கின்றன. அவைகளின் பழக்க வழக்கங்கள் வியப்பாயிருக்கும்.

கவிதைப் பகுதி

நாத்திகர்களான ரஷ்யர்கள் வானவெளிக் கப்பலில் முதன் முதலில் உலகைச் சுற்றிவந்து விட்டார்கள் என்ற சேதி கேட்ட பாரத நாட்டுப் பக்தர் ஒருவர் மனம் நொந்து பாடிய

வசை புகழ்!

"காஞ்சித்தலைவன்"

1

ஏ, இறைவா! நீவந்துஆட் கொள்வாய் என்றே
எங்களவர் சொல்லிவைத்த அதனா லன்றோ
கோயிலுக்கும் வீட்டுக்கும் நடைப யின்று
கொண்டிருந்தேன், வானவெளிக்கு ஏறி டாமல்!
நீயளிக்கப் போகின்ற புட்ப 'மான
நினைவினிலே நானிருக்கப், பிறநாட் டார்கள்
போயிறங்கி வந்துவிட்டார்;-நானி ருந்து
புத்தகத்தில் படிக்கின்றேன், வழக்கம் போலே!

2

உன்னருளுக்கு ஏங்காத அவனை எல்லாம்
ஒருதூக்காய்த் தூக்கியங்கே உலவ விட்டாய்;-
நின்னருளை, நின்புகழைப் பாடிப் பாடி
நெஞ்சுதமும் பேறியநான் முடவ னானேன்!
தென்னையிலே முடத்தெங்கு போலே நீ, (நான்
தினந்தினமும் பூசைநீர் வார்த்துப் போற்ற)
என்னைமறந்து அவன்வீட்டில் நெற்றைப் போட்டாய்!-
ஈதென்ன புதுநன்றி மறந்த செய்கை!...

3

உலகத்தில் உயர்ந்தமலை மீதி லேநீ
உட்கார்ந்து பார்க்கின்றுய் யாவும் என்றே,
கலசங்கள் பொன்னுக்கிக், கோபு ரத்துக்
காரைகளுக்கு உயிரேற்றி, (மிகப்ப டித்த
புலவர்க்கு நாமத்தைப் போட்டென் ருலும்)
புராணங்கள் பாடுவித்து, நின்பே ராலே
கலகங்கள் விளைவித்துப் புகழ்ப ரப்பிக்
காத்திருந்தேன்;-என்தேவே! மறந்த தேனே?

4

"நீ வருவாய், ஒருமுறுவல் தருவாய்,-அந்தத்
திருமுறுவல் மீதேறி அண்ட மெல்லாம்
போய்வருவேன்,-பாதாளத் துள்நு ழைந்து
புறப்படுவேன்!" என்றெல்லாம் கனவு கண்டு,
வாய்வெருவும் போதினிலும் உனது நாமம்
மறவாமல் உச்சரித்த ஏழை என்னைத்
தீயவர்கள் வென்றுவிட்டார்;-பார்த்துக் கொண்டே
நீஇன்னும் ஊமையாய் இருக்கின் ருயே!...

"சான்ருேர்களும் நல்லவர்களும் இந்த உலகில் கூட சாவதில்லை. அவர்களின் உடல்கள் புத்தகங்களில் பதனப்படுத்தப்பட்டு, உயிர்கள் உலகில் நடமாடிக் கொண்டிருக்கின்றனை. புத்தகம் உயிருள்ள குரல். அதன் அறிவுரையை எல்லோரும் விரும்பிக் கேட்கின்றனர்.

—**ஸாமுவல் ஸ்மைல்ஸ்.**

கோயில்கள் எதற்காக?

[சா. குருசாமி]

தமிழ் நாட்டிலுள்ள அளவுக்குக் கோயில்கள் வடநாட்டில் இல்லை. இவ்வளவு பெரிய கோயில்களும் இல்லை. இவ்வளவு சொத்துக்களை உடைய கோயில்களுமில்லை. இவ்வளவு சிறப்பான சிற்ப வேலைகளைக் கொண்ட கோயில்களுமில்லை.

இவைகளெல்லாம் தமிழர்களின் பண்டைய நாகரிகத்தையும், செல்வத்தையும், சிற்பத் திறனையும், ஓவியத் திறமையையும் காட்டுவதாயிருக்கலாம். இவைகளுக்காகவே முன்னோர்கள் இக்கோயில்களை இவ்வளவு பெருவாரியாக எழுப்பியிருக்கலாம். அக்காலத்தில் மக்கள் எண்ணிக்கை இவ்வளவில்லை. தமிழ் நாட்டில் இன்று ஏறத்தாழ நான்கு கோடி மக்கள் இருக்கிறார்கள். பிறப்பைக் கூட்டி இறப்பைக் கழித்தால் ஆண்டு ஒன்றுக்கு ஐம்பது லட்சம் மக்கள் வீதம் இந்திய மக்கள் தொகை பெருகிக் கொண்டிருப்பதாகக் கணக்கிட்டிருக்கின்றனர். நிமிஷத்துக்குப் பதினன்கு குழந்தைகள் பிறந்து கொண்டிருப்பதாகவும் கணக்கிட்டிருக்கின்றனர். ஆகவே பயங்கரமான மின்னல் வேகத்தில் மக்கள் எண்ணிக்கை பெருகிக் கொண்டிருக்கிறது. இனி வெளிநாடுகளிலும் குடியேறுவதற்கு வழியில்லை.

இக்கோயில்கள் எழும்பிய காலத்தில், அதாவது சுமார் 10-12 நூற்றாண்டுகளுக்கு முன்பு தமிழ்நாட்டின் மக்கள் தொகை 5-6 லட்சம் கூட இருந்திருக்க முடியாது. பிறப்பைக் காட்டிலும் இறப்புத்தான் மிகுதியான விகிதமாக இருந்திருக்க முடியும். எனவே, தேவைக்குமேல் மிதமிஞ்சிய உணவுத் தானியங்கள் விளைந்து குவிந்தன. இவற்றை ஏற்றுமதி செய்யவும் வழியில்லை. நாணயச் செலாவணியுமில்லை. வெறும் பண்டமாற்று முறை ஒன்றுதான். ஆகவே விளைபொருள்களை வாரிக் கொடுத்துப் பல்வகைத் தொழிலாளர்களைக் கொண்டு கோயில்களை எழுப்பினர். அக்காலத்தில் பெரிய பெரிய கல்விக்கூடங்கள், பாங்குகள், தொழிற்சாலைகள், ஆஸ்பத்திரிகள், நீதிமன்றங்கள், ஆட்சிப் பணிமனைகள், உண்டிச்சாலைகள், வாணிப நிலையங்கள், ஆகிய எதுவுமேயில்லை. ஆதலால் நாடுமுழுவதும் கோயிலும் சத்திரமுமாகவேஎழும்ப வேண்டியதாயிற்று. ஆனால் இக்காலத்தில் மேலே கூறிய பல்வேறு பெரிய கட்டடங்கள் நாள்தோறும் எழும்பிக் கொண்டிருக்கின்றன. இவற்றில் தமிழர்கள் தமது சிற்பத் திறமையையும், கட்டடத் திறமையையும் வெளிப்படுத்தலாம். ஆதலால் இனி ஒருசிறு புதுக்கோயில் கூட கட்டத் தேவையில்லை. மதுரையிலும், காஞ்சியிலும், குடந்தையிலும் போட்டி போட்டுக் கொண்டு கோபுரங்களைப் புதுப்பிக்க வேண்டியதில்லை.

இதே போல் கோயிலுக்கான நிலங்கள், வாகனங்கள், நகைகள், உண்டி வசதிகள் யாவும் இன்று கல்விச்சாலைக்கும், தொழிற்சாலைக்கும், மருத்துவச் சாலைக்கும் ஏராளமாகத் தேவைப்

படுகின்றன. ஆதலால் இவை களும் இனி எந்தக் கோயிலுக்கும் தேவையில்லை.

ஆனால் இன்றுள்ள கோயில் சொத்துக்களை என்ன செய்வது? இவற்றை ஏன் மக்களின் நல் வாழ்வுக்காகப் பயன்படுத்தக் கூடாது? அரசியல் சட்டம் இதை அனுமதிக்காது என்றால், ஏன் அச்சட்டத்தைத் திருத்தக் கூடாது? திருத்துவதற்கான நேர்மையும் அறிவும் இன்றைய ஆட்சிக்குக் கிடையாது. "மதச் சார்பற்ற ஆட்சி" என்ற பெயரால் மத ஒழிப்பில் ஈடுபடாதது டன், மறைமுகமாக மதத்தை வளர்த்துக் கொண்டும் இருக் கிறது.

கோயில் சொத்துக்கள்

பத்தாயிர ரூபாய்க்கு மேற்பட்ட மதிப்புக் கொண்ட நகைகளையும் மற்றப் பொருள்களையும் கொண்ட கோயில்கள் தமிழ்நாட் டில் சுமார் 400 (நானூறு) இருக் கின்றன.

முதன் முதல் கோயில் நகை மதிப்பீடு-கணக்கு-முயற்சி ஓமந் தூர் திரு. இராமசாமி ரெட்டியார் அவர்கள் முதலமைச்சராயிருந்த போதுதான் செய்யப்பட்டது. அது வரையில் கோயில் பெருச்சாளி கள் வைத்ததுதான் சட்டம்! ஆயி ரக்கணக்கான கோவில் டிரஸ்டி களும், அர்ச்சகர்களும், நிர்வாகி களும், பெரும் பணம் திரட்டியது, இக்கோயில் நகைகளைத் திருடி யும், விலைபொருள்களைக் கை யாண்டும், பொய்க்கணக்கு எழு தியும் தான். இன்றும் அடிக்கடி கோயில் சிலைகளின் நகைகள், தாலிகள்-திருட்டுப் போகின்றன என்றால், அச்சிலைகளைக் கழுவித் தேய்த்துக் குளிப்பாட்டுகிறவர் களைத் தவிர, வேறு யாராக இருக்க முடியும்?

நீதிக் கட்சியின் ஆட்சிக்காலத் தில் (திரு. பனகல் அரசர் முதல மைச்சராயிருந்த போது) தான் அறநிலைப் பாதுகாப்புச் சட்டம் இயற்றப்பட்டது. இதற்கு அக் காலத்தில் இருந்த அக்கிரகார எதிர்ப்பு வர்ணித்துக் கூறமுடி யாததாகும். "இந்து"வும் "சுதேச மித்திரனும்" அச்சடித்த மனுத் தாள்களை நாள்தோறும் தங்கள் பத்திரிகை அனுபந்தமாக வைத்து அனுப்பி, பக்தர்களின் கையெழுத்துக்களைப் பெற்று டில்லி சர்க்காருக்கு அனுப்பின. அக்கிரகாரம் இதில் முழுமூச்சாக வேலை செய்தது. காங்கிரஸ் கட்சி யும் அன்று இந்த எதிர்ப்புக் கிளர்ச்சியில் முன்னணியில் நின் றது. "மதத்தில் தலையிடுகிறார் களே, மந்திரிகள்!' அந்தோ! அந்தோ! விக்டோரியா மகா ராணியின் வாக்குறுதி காற்றில் பறக்கிறதே!" என்று ஓலமிட்டார் கள், ஆரியர்கள் அனைவரும் ஒரே கட்டுப்பாடாக! ஆனாலும் அன் றைய நீதிக் கட்சித் தலைவரின் விடாப்பிடியால் அறநிலைச் சட்டம் உருவாயிற்று. இதனால் ஏதோ ஓரளவு நற்பயன் ஏற்பட் டது. கோயில் பெருச்சாளிகளின் சுரண்டலில் மிகச் சிறுபகுதிதான் நின்றது. கணக்கு எழுதிவிட்டா வது திருடலாம் என்ற கட்டுப் பாடாவது ஏற்பட்டது!

கோயில் நகைகள், பொருள் கள் ஆகியவற்றின் மதிப்பைக் கணித்துக் குறிப்பதும் பாதுகாப் பதும் மட்டும் போதாது. இவற்றை விற்றுவிடவும் வழி செய்ய வேண்டும். அதற்கேற்ற படி விதிகளைத் திருத்தவேண்டும்.

"உங்கள் நகைகளைக் கொடுங் கள்; விற்று அணைகட்டித் தரு கிறோம். ஆஸ்பத்திரி கட்டித் தரு கிறோம்," என்று மக்களை நோக் கிக் கேட்கின்ற மத்திய ஆட்சி யாளர், தமிழ்நாட்டுக் கோயில் களிலுள்ள 100—200 கோடி ரூபாய்க்குமேல் மதிப்புள்ள நகை

களையும், வாகனங்களையும், சுமார் 400—500 கோடி ரூபாய்க்கு மேல் மதிப்புள்ள நிலங்களையும் விற்று இத்தமிழ் நாட்டிலுள்ள மக்களுக்கான தொழிற்சாலைகள், தொழில் கல்லூரிகள், மருத்துவசாலைகள், ஆரம்பப் பள்ளிகள் ஆகியவற்றை அமைத்துத் தரக்கூடாதா? மனிதனுக்கே நகைகள் தேவையில்லை; ஆடம்பரப் பொருள்கள் தேவையில்லை... என்னும் போது "கடவுள்"களுக்கு இவை ஏன்? இவை இல்லாவிட்டால் "கடவுள்கள்" அத்தனையும் செத்துப்போய் விடுமா? போய்விட்டால் தான் என்ன மோசம்? ஏழை நாட்டுக்கேற்ற ஏழைக் 'கடவுள்', மரத்தடிக் கடவுள், போதுமே!

தமிழ்நாட்டில் மட்டும் பெரிய கோயில்கள், பெரிய மடங்கள், அறநிலையங்கள், சத்திரங்கள் என்பவை, 13,618 இருக்கின்றன. இவற்றிற்கு சுமார் எட்டு லட்சம் ஏக்கர் நிலம் இருக்கிறது. இதன் ஆண்டு வருமானம் மட்டும் சுமார் மூன்றரைக் கோடி ரூபாய். ஆண்டு ஒன்றுக்கு ஒரு லட்ச ரூபாய்க்கு மேல் வருமானமுள்ள கோயில்கள் மட்டும் தமிழ்நாட்டில் பதினறு கோயில்கள் இருக்கின்றன.

இதையெல்லாம் "கடவுளா" அனுபவிக்கிருர்? 'சாமி'யின் பெயரால் சோம்பேறி ஆசாமிகள் தானே தின்று கொழுத்துக் கொண்டிருக்கின்றனர்? எங்கும் நிறைந்ததாகக் கூறப்படும் கடவுளுக்கு எதற்காக நகையும், வீடும், உணவும், உடையும், ஊர்வலமும் மற்றவைகளும்?

ஆதலால், ஆத்திகர் என்பவர்களும், அவர்களுக்காகப் பரிந்து பேசுகின்ற ஆட்சியாளரும் கோயில் சொத்துக்களையெல்லாம் மக்களின் நலனுக்காகப் பயன்படுத்த வேண்டும்.

★

குழந்தையும் பாதிரியாரும்

புகழ்பெற்ற எழுத்தாளரும் ரேடியோ – டெலிவிஷன் பேச்சாளருமாகிய பெளல்டன் ஷின் பாதிரியார், வாஷிங்டனில், ஒரு கோயிலில் சொற்பொழிவு நிகழ்த்திக் கொண்டிருந்தார். முதல் வரிசையில் கைக் குழந்தையோடு ஒரு பெண் உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருந்தாள். திடீரென, குழந்தை அழத்தொடங்கியது. பலமுறை, தாய், நயத்தாலும், பயத்தாலும், அடக்கிப் பார்த்தாள். குழந்தை அழுகையை நிறுத்த மறுக்கவே, வேறு வழியில்லாமல், குழந்தையைத் தூக்கிக்கொண்டு கோயிலை விட்டுப் போகத் தொடங்கினுள்.

இதனைக் கண்ணுற்ற பாதிரியார், "தாயே, உனது குழந்தை அழுவதால் எனக்கு எவ்வித தொல்லையுமில்லை. தாராளமாய் உன் இடத்திலேயே இருக்கலாம்" என்ருர்.

இதற்கு அப்பெண் சொன்ன பதில்: "குழந்தையால் உமக்குத் தொல்லையில்லாமல் இருக்கலாம். ஆனுல், உமது பிரசங்கத்தைக் கேட்டுக் குழந்தை மிகவும் தொல்லைப்படுகிறது. அதுவே அழுகைக்குக் காரணம்"

("Sacred and Profane Life"
–By Foulton Sheen.)

குமாரி எம். காந்தா, M. Sc.,

நோய் பரப்பும் பூச்சிகள்

[ஈ, கொசு, ஆகிய நோய் பரப்பும் பூச்சிகளைப் பற்றிய விஞ்ஞானக் கட்டுரை இது. நோய்கள் அவரவர் 'தலைவிதி' யினால் வருகின்றன என்ற மூடநம்பிக்கை இந் நாட்டில் இந்தக் காலத்திலுங்கூடப் பலரிடம் பரவியிருக்கிறது. இந்த அறியாமையைப் போக்குவதற்கு இதைப் போன்ற ஆராய்ச்சிக் கட்டுரைகள் பயன்படும்].

பூச்சிகள் நோயைப் பரப்புகின்றன. பூச்சிகளினுள் இரத்தத்தை உறிஞ்சும் டிப்டிரா (Diptera) இனத்தைச் சார்ந்தவை மிகவும் குறிப்பிடத் தக்கவை. இப்பூச்சிகளினுள் கொசுக்கள் நோயைப் பரப்புவதில் முதலிடம் பெறுகின்றன.

கொசுக்களினால் மலேரியா ஏற்படுகின்றது. மலேரியா மூன்று வகை என ஆராய்ச்சியாளர்கள் ஆய்ந்து வகைப் படுத்தியுள்ளனர். இவை Tertian மலேரியா, Quartan மலேரியா, Aestivo autumn மலேரியா என்பன.

அனோஃபீல்ஸ் (Anopheles) பூச்சிகள், மூன்றுவகையான ஒரு செல் கொண்ட கிருமிகளைத் தேக்கி வைத்திருப்பன. அனோபீல்ஸ் Plasmodium Vivox இனத்தைக் கொண்டிருந்தால் மலேரியா சுரம் நாற்பத்தெட்டு மணிக்கு ஒரு முறை அடுத்தடுத்து தோன்றும். Plasmodium malaria இருந்தால் 72 மணி கடந்து தோன்றும். Plasmodium Falciparum இருந்தால் ஒரு நாள் விட்டு ஒருநாள் மலேரியா சுரம் வரும்.

Culex பூச்சியினால் யானைக்கால் நோய் (Elephantiasis) வருகின்றது. இந்நோய், சிறப்பாக இந்தியா, ஆஃப்ரிக்கா ஆகிய நாடுகளில் தோன்றுகின்றன. யானைக்கால் வியாதி முதிர்ச்சி அடைந்தால் இருதயத்திற்கு ஆபத்து ஏற்படும்.

மஞ்சள் சுரம் Setgomyia என்னும் பூச்சியினால் வருகின்றது. இரவும் பகலும் இந்தப் பூச்சி கடிக்கும். தேங்கி நிற்கும் எல்லா வகையான நீர்களிலும் இது வளருகிறது.

கொசுக்களைத் தடுப்பதற்கு

அரசாங்க சுகாதாரத் துறையினர் நோயைத் தடைசெய்வதற்கு சில முறைகளைக் கையாளுகின்றனர். தேங்கி நிற்கும் நீரை அப்புறப்படுத்துவது முதல் முறையாகும். தேங்கும் நீரில் கொசுக்கள் நன்றாக வளருகின்றன. தேங்கும் நீர்ப் பரப்பின் மீது எண்ணெயைத் தெளித்தல் இரண்டாவது முறை. இதனால் தண்ணீரின் அழுத்தம் குறைகின்றது. அப்போது கொசுக்களின் புழுக்கள் தண்ணீரில் மூழ்கி இறந்து விடுகின்றன. Gambusia இனத்தைச் சார்ந்த ஒரு வகை மீன்கள் கொசுக்களின் புழுக்களை உண்ணும். குளங்களிலும் நீர் நிலைகளிலும் இம் மீன்களை வளர்த்து மலேரியா பரவுதலைத் தடுத்தல் மூன்றாவது முறையாகும்.

ஈக்கள்: Oriental Sore என்னும் நோய் Phebatomus என்னும் மணல் ஈயால் தோன்றுகிறது. இந்த ஈக்கள் முதுகெலும்புள்ள பிராணிகளின் தோலில் தங்கி வாழ்கின்றன. இந்த ஈக்களால், மனிதனுக்கும், நாய்க்கும், சிறப்பாக தென்சீனு, வடகிழக்கு இந்தியா, அரேபியா, மத்திய ஆசியா, வட ஆஃப்ரிக்கா, மெக்சிகோ ஆகிய நாடுகளில் அல்சர் Ulcer என்னும் நோய் தோன்றுகின்றது.

மத்திய தரைக்கடல் பிரதேசங்களில் மணல் ஈக்களால் சுரம் பரவுகின்றது. காலா அசார் (Kala azar) என்னும் நோயும் இந்த ஈக்களால் பரவுகிறது.

கறுப்பு ஈக்களால் (Simulia Columbaezensis) கால் நடைகளுக்கு, ஹங்கேரியில் பிளேக் வருகின்றது.

பிளேக் வந்தபிறகு உயிர் பிழைத்தல் மிகவும் கடினம். Tabanus இனத்தைச் சார்ந்த ஈக்கள் பாலூட்டிகளின் (Mammals) இரத்தத்தை உறிஞ்சுகின்றன. இவைகளால் கோடைக் காலத்தில் குதிரைகளுக்கு பிளேக் வருகின்றது.

African Sleeping Sickness என்னும் தூக்க நோயை Tsetse ஈ (Glossina Palpalis) பரப்புகின்றது. மனிதனுக்கு இந்நோய் அடிக்கடி வரும். இந்நோயிடமிருந்து மனிதன் தப்பிவிட்டால் இந்த ஈக்கள் காட்டு விலங்குகளிடம் தங்கியிருக்கும். காட்டு விலங்குகளின் இறைச்சியைச் சரியாக வேக வைக்காமல் மனிதன் உண்டால் அவனுக்குத் தூக்க நோய் வரும்.

வீட்டு ஈயினுல் (musca domestica) டைஃபாய்டு காய்ச்சல் பரவுகின்றது. இந்த ஈக்களின் கால்களில் கிருமிகள் இருக்கும். ஈக்கள் தின்பண்டங்கள் முதலியவற்றின் மீது உட்கார்ந்தால், அக்கிருமிகள் தின்பண்டங்களின் மீது விழுந்து விடும். ஈ மொய்த்த பண்டங்களை உண்பதனுல் டைஃபாய்டு சாய்ச்சல் வரும்.

ஈக்களிடமிருந்து பாதுகாக்க ஈ வலையை உபயோகப்படுத்தலாம். D. D. T. யை ஈ வலை மீதும், கால் நடைகளின் மீதும் தெளித்தல் மிகவும் சிறந்த முறை என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர். ஈக்களைத் தாங்கியுள்ள காட்டு விலங்குகளை அழித்தல் ஒரு விதமான முறையாகக் கையாளப் படுகின்றது.

பிற பூச்சிகள்

Assassin bugs (Triatoma) என்னும் மூட்டைப் பூச்சி (Chaga) சாகா என்று அழைக்கப் படும் ஒரு விதமான சுரத்தைப் பரப்புகின்றது. இந்த சுரம் மூன்று வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு வரும். குழந்தைகள் தூங்கும் போது முகத்திலும் வாயின் அருகிலும் இப்பூச்சிகள் கடிக்கும். அதனுல் இவைகள் "முத்தமிடும் பூச்சிகள்" என்று அழைக்கப்படுகின்றன.

பேன் (Pediculus Humanus) மூலம் மூளை சம்பந்தமான நோய்கள் தோன்றும். அதனுல் பேன் உள்ளவர்கள் உபயோகப்படுத்தும் சீப்பு முதலியவற்றை மற்றவர்கள் உபயோகப்படுத்தக் கூடாது.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பது பழமொழி. இப்பழமொழிக்கிணங்க மக்கள் தங்களால் இயன்ற அளவு, நோயைப் பரவச் செய்யும் பூச்சிகளிடமிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொண்டால் நோயற்ற இன்ப வாழ்க்கை வாழ முடியும். ★

டி. கே. சி.

கபிலர் நாடகம்

[இது 1953-ல் டி. கே. சி. அவர்களால் எழுதப் பட்டு, 'கல்கி' தீபாவளி மலரில் 1955-ல் வெளியிடப் பட்ட ஒரு கட்டுரையில் காணப்படும் சில பகுதிகள்.]

"ஆரியர்கள் மேற்குப் பிரதேசத்திலிருந்து இந்தியாவுக்கு வந்தார்கள். இந்திய மக்களோடு கலக்க நேர்ந்தது. கலந்து ஒரு வகுப்பினர் ஆனார்கள்.

நாளடைவில் அந்த வகுப்பினர் தமிழ் நாட்டுக்கும் வந்தார்கள். அக்ரகாரங்கள் என்பதும் உண்டாயின. அக்ரகாரங்கள் என்று உண்டானபோதிலும் சில வேளைகளில் சிக்கலான காரியங்கள் அவைகளில் ஏற்பட்டன.

X X X

நாடகத்தைத் திருவாரூர் அக்ரகாரத்தில் அமைத்திருக்கிறது. அக்ரகாரத்தின் பிராமணர் ஒருவர் அனாதையான குழந்தையை எடுத்து அருமையாய் வளர்த்தார். அதற்குக் கல்வி புகட்டினார். பல சாஸ்திரங்களையும் கற்றவன் ஆய்விட்டான் பையன்.

அவனுக்கு உபநயனம் செய்ய ஏற்பாடு செய்தார் தந்தையார் (வளர்ப்புத் தந்தையார்). அக்ரகாரத்திலுள்ள பிராமணர்கள் எல்லாரையும் அழைத்தார். உபநயனத்துக்கு வேண்டிய சகல காரியங்களும் தயாராய் இருக்கின்றன. வந்த அக்ரகாரத்துக்காரர் "உபநயனம் செய்யக் கூடாது" என்று சொன்னார்கள். "பையன் பிராமண குலத்தைச் சேர்ந்தவனல்ல. அனாமதேயம். உபநயனத்துக்கு அருகன் அல்ல", என்று ரொம்ப ரொம்ப வாதாடினார்கள்.

தந்தைபாடு கஷ்டமாய்ப் போய்விட்டது. கையை நெரிக்கிறார். அப்போது பையன் வருகிறான். அவனுக்குக் கபிலன் என்று பெயரிட்டிருந்தது. அக்ரகாரத்துக் காரர்களைப் பார்த்துப் பேசுகிறான்:—

"பார்ப்பன மாந்தரே! உலகத்தில் அநேக விஷயங்கள், நம்முடைய அறிவுக்கு எட்டாத விஷயங்கள். அவைகளைப் பற்றித் தர்க்கம் செய்து கொண்டே இருக்கலாம். எவ்வளவு தர்க்கம் செய்தாலும் விஷயம் விளங்குவதில்லை நமக்கு.

X X X

ஆனால் நம்முடைய அனுபவத்தோடு ஒட்டிய விஷயங்களில் வேண்டாத சந்தேகங்கள் ஏற்பட வேண்டாம். கண் கூடாய்க் காண்பதற்கு சாஸ்திரத்துக்குள் தலையை நுழைத்துக் கொண்டு கஷ்டப் படுவானேன்? வேண்டியதில்லை. நம்முடைய அனுபவத்தில் சிலவற்றைப் பார்க்கலாம்.

X X X

மனுஷகாரியம் இப்படி முடிகிறது. சாம்பலோடு சாம்பலாய், மண்ணோடு மண்

ணாய்ப் போகிற காரியம். கண் கூடாய்க் காண்கிற காரியம் தானே! இதையெல்லாம் மறந்து விட்டு, ஏதோ இறந்து போன வர்கள் பிதுர்லோகத்தில் இருப்ப தாகக் கற்பனை செய்து கொண்டு வேண்டாத கிரியைகள், மந்திரங் கள் எல்லாம் செய்கிற காரியம் ஏமாளித்தனமே ஒழிய வேறில்லை; பார்ப்பனர்களே, கொஞ்சம் கேளுங்கள்.

இறந்து போனவர்களுடைய பிள்ளைகள் சிரார்த்தம் கொடுக் கும் போது ஒரு வருஷமாய்ப்பட் டினி கிடந்த அந்தப் பிதுர்க்கள் மெலிந்துபோய் சிரார்த்தத்திடை வந்து "எங்களுக்கு ஏதாவது கொடுங்கள்" என்று நிற்பதை யாராவது கண்டதுண்டா?

சாப்பிட்டவர்களுக்கு வயிறு நிறைந்தது. வயிறு கொஞ்சமும் குறையவில்லை. அதனால் பிதுர்க் களுக்கு உண்டியில் யாதொரு பாகமும் போகவில்லை என்றாய் விட்டது. இனி:

உலகம் எங்கும் மக்கள் இறக் கிறார்கள். அப்படி இறந்தவர்கள் பிதுர் லோகத்தில் இருக்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். அந்தப் பிதுர்க்களுக்கும் சிராத் தம் கொடுக்க வேண்டியது தானே! அப்படி சிரார்த்தம் கொடுப்பதற்குப் பார்ப்பனர் இருந்து தீரவேண்டும். அப்படி இருப்பதாகத் தெரியவில்லை. ஜப்பானில் கிடையாது; சைனா வில் கிடையாது; மலேயாவில் கிடையாது; கிரேக்க தேசத்தில் கிடையாது; இங்கிலாந்து தேசத் திலும் கிடையாது.

பிதுர்க்களுடைய உலகமோ, பார்ப்பனர் இல்லாது தீரா தென்ற அவசியமோ எல்லாம் வெறும் கற்பனை. இயற்கையில் அமைந்த காரியங்கள் அல்ல. அப்படியாக இயற்கையில் பேதப் பட்ட இனங்கள் அல்ல நால் வகைச்சாதி.

பார்ப்பனரும் புலைச்சியரும் கலந்து குழந்தைகள் உண்டாகத் தானே செய்கிறது? இத்தகைய பிள்ளைகள், உறவாடும் சமு தாயம், வளர்ப்பு, இவைகள் காரணமாக எவ்வளவோ வேறு பட்டுவிடும்.

X X X

இப்படியெல்லாம் கலப்பு மணம் காரணமாகவே வட நாட் டில் வசிஷ்டர், சத்தியர், பராசர், வியாசர், ஆகிய நால்வரும் பிறந்து மகான்கள் ஆனார்கள்... இயற்கையில் புலையர் என்றோ, பார்ப்பனர் என்றோ வித்தியாசம் கிடையாது. இதெல்லாம் கண் கூடாகக் காண்பது. பிறப்பினால் பேதம் ஏற்படாது. உண்மையில் குலம் என்பது ஒன்றே. நம் முடைய செய் தொழில் காரண மாகவே உயர்கிறோம். தாழ் கிறோம்."

X X X

திருவாரூர் அக்ரகாரத்தினர் முன்பு கபிலன் இப்படிப் பேசி முடித்தான். மறுத்துச் சொல்ல யாருக்கும் இயலவில்லை. உபநய னச் சடங்கு சிறப்பாய் நடந் தேறியது.

அழகான தமிழில் அழகான நாடகம்.

X X X

வேண்டாதபடி சாஸ்திரங் களைப் புரட்டுவது அவசியம் இல்லை, கெடுதல், என்று சொல்லி யிருக்கிறது. பெரிய விஷயம். சாவைப்பற்றியும் மக்கள் அது சம்பந்தமாகத் துயரப்படும் காரி யத்தைப் பற்றியும் அற்புதமாய் வேடிக்கை பண்ணியிருக்கிறது.

இனவேற்றுமையைக் குறிக் கக் காளையையும் எருமையையும்

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

புத்தரும் லிங்கனும்

— "எம்மார்" —

[அரசனாயிருந்து ஆண்டியான புத்தரும், ஆண்டியாயிருந்து அரசன் (தலைவன்) ஆன லிங்கனும் ஒடுக்கப்பட்டவர்களின் விடுதலைக்காகப் பாடுபட்டவர்கள் என்பதை ஒப்பிட்டுக் காட்டுவது, இக்கட்டுரை.]

'இருந்தவளை வந்தவள் துரத்தினாள்!' என்பது நாட்டுப்புறத்து மொழி! அதாவது மருமகளாக ஒரு பெண் ஒரு வீட்டிற்குவர அங்கிருந்த பெண் இன்னொரு வீட்டுக்கு மருமகளாகச் சென்றாள் என்பது பொருள். அப்படியல்ல, இந்திய வரலாறு கூறும் 'ஆரிய-திராவிடர்' வரலாறு!

மத்திய ஆசியாவிலிருந்து வந்த ஆரியர்கள் இந்தியாவில் சிந்துவில் குடியேறிப் பின் நாடெங்கும் பரவி இந்தியாவையே தங்களுக்குத் தலைவணங்கிக் கிடக்கச் செய்தனர். வேதங்களைப் படைத்து சாதிகளையும் சமயங்களையும் உண்டாக்கினர். சுருங்கக் கூறினால் 'வந்த அவர்கள் இருந்தவர்களை' ஆண்டனர்.

ஆரியர்கள் செய்த, உண்டாக்கிய கொடுமையான செயல்களில் முக்கியமான ஒன்று சாதிப் பகுப்பு. மக்களின் தன்மையையும் போக்கையும் புரிந்து கொண்டு, நாடாள்வோரைத் தங்கள் வஞ்சகம் நிறைந்த திறமையால் தங்கள் பக்கம் கவர்ந்து தங்கள் செயல்களை ஓங்கச் செய்தனர்; நிலை நிறுத்தினர்! ஓங்கச் செய்த, நிலை நிறுத்தப்பட்ட கொடுமையான செயல்களை அவர்கள் புரிவதற்கு அவர்கள் கையாண்ட மூலக் கொள்கை 'தகுதிக் கொள்கை!' (Eligibility Theory). அதன்படி அவர்கள், ஆரியர்கள்தாம் உயர்ந்தவர்; அவர்கள்தாம் படிக்கத் தகுதியும் உரிமையும் பெற்றவர்; மானிட இனத்தில் படிக்கத் தகுதியும் உரிமையும் உள்ள பிராமணர்களே 'மோட்சம்' அடைய முடியும்; மோட்சம் அவர்களுக்கே உரியது! மற்றவர்களுக்கு அது எளிதல்ல; உரி

[முன் பக்கத் தொடர்ச்சி]

எடுத்துச் சொல்வது தற்கால சயன்சை சேர்ந்ததாய் இருக்கிறது. எத்தனையோ நூற்றாண்டுகள் ஆகியும் ஆசிரியர் தற்காலத்தவர்போல் பாடியிருக்கிறார்."

[முன்னரே கபிலர் அகவல் பற்றிய சிறப்புக்கட்டுரையொன்றை வெளியிட்டிருக்கிறோம். பிறகு அகவல் முழுவதையும் வெளியிட்டுள்ளோம். அதேதான் மேலே சுருக்கித் தரப்பட்டிருக்கிறது. இதை டி. கே. சி. எழுதியுள்ளார்; "கல்கி"யில் வெளிவந்திருக்கிறது. இதுதான் இதிலுள்ள சிறப்பு.

—ஆசிரியர்.]

மையும் கிடையாது!' எனத் தங்களைத் தாங்களே உயர்த்திக் கொண்டு மற்றவர்களை ஆட்டிப் படைத்தனர், சத்திரியர், வைசியர், சூத்திரர் எனத் தொழில் வாரி சாதியைப் படைத்து! பிராமணர்களுக்கு இந்த மூன்று சாதியினர்களும் கட்டுப்பட்டு, உரிமையிழந்து புத்தி மழுங்கிக் கிடந்தனர்! அவர்களின் கொள்கை; 'விதி, வினைப்பயன், பிறவி,' என்ற கருவிகள் கொண்டு எவ்வளவு தாக்க வேண்டுமோ அவ்வளவு தாக்கி மற்றவர்களை வீழ்த்தி ஆண்டு கொண்டிருந்தது. பாவம்! சூத்திரர் என்பவர்கள் 'தங்களைப் படைத்த பகவானை(?)யே காண அனுமதிக்கப்படவில்லை! 'ஐயர் வரும் வழி ஆதிதிராவிடன் போகக் கூடாது' என்றால் அவர் செல்லும் ஆலயத்தை அவன் எப்படி நெருங்க முடியும்? கேட்பாரற்றுக் கிடந்தது நாடு; காலம் ஓடிக் கொண்டிருந்தது!

புத்தர் முயற்சி

'இருண்ட வானுக்கு ஒரு நிலவு' எனத் தோன்றினார் புத்தர்! 'என்ன அநியாயம்! மனிதனுக்கு மனிதன் உயர்வு தாழ்வா...? படிப்பும் மோட்சமும் ஒரு சமூகத்திற்குத்தான் உரிமையா? கொடுமை! பெருங் கொடுமை !! படிப்பு எல்லோருக்கும் உரியதே. மோட்சம் (நிர்வாணம்) என்று ஒன்று இருந்தால் அது எல்லோருக்கும் உரியது!' எல்லோருமே மோட்சத்தை அடையலாம்! என மக்களிடையே 'அறிவு ஒளி'யைப் பரப்பினர். ஆரியர்களின் கொள்கைக்கு வேட்டு வைத்தார். மக்கள் கண்டு அறிந்தனர்; உள்ளம் தெளிந்தனர்! ஆண்டவனைப் பற்றி ஒன்றுமே கூறாத அந்த 'ஆசிய விளக்கை' மக்கள் நாடினர். தங்கள் மடமைகளைப் போக்கிச் சிந்திக்கும் மனிதராகினர். ஆரியர்கள் மேற்கொண்ட வெறுப்பாலும் அறிவு, மேதை—அரசியல் துறவி புத்தர் பால் கொண்ட விருப்பாலும் மக்கள் புத்தரை மகானுக்கி, மதம்—புத்தமதம்—கண்டு மகிழ்ந்தனர்!

மனிதனுக்கு மனிதன் பல வழிகளில் அடிமையாக வாழ்ந்தான்; வாழ்கிறன்! ஆனல் அதற்காக 'அடிமை சாதி'யையே உண்டாக்கிவிடுவதா? என்ன கொடுமை! மடமை!! மனிதனின் பகுத்தறிவுக் கேடு மிகவும் பயங்கரமானது. அடிமையின் பிறப்பிடம், 'அராபிய ஆட்சி' என வரலாறு கூறுகின்றது; இது எப்போது, எங்கே பிறந்திருந்தாலும் ஒரு பெரும் கொடுமை என்பதை மறுக்க முடியாது! 'ஒருவனுக்கு இன்னொருவன் மிருகமா?' காலம் ஓடியது. ஓடுகின்ற காலத்திலே விலங்குகளுக்கும் கேடாக, கைகட்டி, வாய்பொத்தி, உணர்ச்சிகளைக் காட்டும் திறன் அற்று, 'குரங்காட்டியிடம் சிக்கி ஆடுகின்ற' குரங்கைப் போல் அடிமைகள் ஆடினர், தங்களை உரிமை கொண்டவர்களிடம். தாயும் சேயும் இறந்திருப்பர்; அதைப்பற்றி நினைக்கக் கூடாது; கண்ணீர் சிந்தக் கூடாது. ஒரு மாட்டோடு தானும் ஒரு மாடாய் நின்று முதலாளிகளின் சாட்டையடிகளுக்கு நடுவே செக்கை இழுக்க வேண்டும்; தண்ணீர் இறைக்க வேண்டும்; வண்டி இழுக்க வேண்டும். என்றால் அடிமையின் கொடுமை...அப்பப்ப!

எதற்குமே இரு எல்லைகள் உண்டு. ஒன்று ஆரம்பம் (பிறப்பு); மற்றது முடிவு (இறப்பு!) இந்த இரண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் நடக்கும் நிகழ்ச்சிகள், மாறுபாடுகள், போராட்டங்கள் பல! அவை

களில் ஒன்றுதான், மனித இனத்திலே பிறந்துவிட்ட ஆகாத ஒன்ருன அடிமைத்தனத்தை ஒழித்துக்கட்ட அமெரிக்காவில் உதித்த ஆபிரகாம் லிங்கனின் பிறப்பும்!

லிங்கன்

காலத்தால் மூத்தவர் புத்தர்; இளையவர் லிங்கன். புத்தர் இந்தியர்; லிங்கன் அமெரிக்கர். ஆரியவர்க்கத்திலே வந்தவரல்ல புத்தர்; அடிமைகளுக்காக போராடிய லிங்கனும் அடிமை இனத்தார் அல்ல! புத்தர் அரசபரம்பரை; லிங்கன் சாதாரணத் தச்சு வேலை செய்யும் குடும்பத்திலே வந்தவர். தியாகத்தால் ஏழையானவர் புத்தர்; உழைப்பால் உயர்ந்த வாழ்வு கண்டவர் லிங்கன். மக்களுக்காக,மக்களால்,மக்களுடையதாக (For the People; by the people; of the people) ஆள்வதே சனநாயகம் என அரசாங்கத்திற்கு இலக்கணம் கூறினார் நாடாண்டு கொண்டிருந்த லிங்கன்; 'மக்கள் எல்லோரும் மூப்பாலும் பிணியாலும் சாவாலும் வருந்தித்திரிய நான் மட்டும் நாடாள்வதா?", என மக்களுக்காக நாட்டையும் வீட்டையும் துறந்து ஓடினார் புத்தர். படை கொண்டு போரிட்டுத் தன் கொள்கையை நிலைகண்டவர் லிங்கன்; போர் அற்ற போதனைகளால் மக்களை ஆட் கொண்டவர் புத்தர். மனிதனை மனிதனுக்க அரசியலைப் பயன்படுத்திய லிங்கனை மாபெரும் அரசியல் தலைவனாகக் கண்டது உலகம்; அரசியலைத் துறந்து ஆத்மஞானத்தால் —அறிவு ஒளியால்-மனிதனை மனிதனுக்கிய புத்தரை ஞானியாகக் கண்டது உலகம்.

பிறப்பிலே, வாழ்க்கையின் அமைப்பிலே, செல்வநிலையிலே, சூழ்நிலைகளிலே புத்தருக்கும் ஆபிரகாம் லிங்கனுக்கும் மேலே கூறப்பட்ட அத்தனை வேறுபாடுகள் உண்டு! ஆனால் அத்தனையும் மறைந்து இருவரும் ஒருநிலையில்—மக்களுக்காக ஆற்றிய தொண்டில் (Service for Humanity) ஒன்ருகிவிடுகின்றனர். ஆரியர்கள் உண்டாக்கிய அடிமைக்கும் கேடான கொள்கையை உலகுக்கு எடுத்துக்காட்டி உலகத்து ஞானியானார் புத்தர். அமெரிக்காவிலிருந்து அடியோடு அடிமைத் தனத்தை ஒழித்துக்கட்டி இருண்ட உலகிலே நிலையான ஒளியானார் லிங்கன்! மனிதர்களை மனிதர்களாக்கி அவர்கள் அறிவு ஒளியைப் பெறச் செய்த புத்தரும் லிங்கனும் உலகத்தின் இரு ஒளிகள். அவ்வொளிகளால் 'மனிதவானம்' இருளிலிருந்து விடுபட்டு ஒளி உலகிலே இயங்குகின்றன. மக்களால், "பெரியோர்" என்றும், "மகான்கள்" என்றும் போற்றப் படுகின்றனர். அவர்களின் உடல்கள் மறைந்தன; கொள்கைளும் புகழும் மறையவில்லை. ★

ஏமாற்றைக் காப்பாற்ற!

ஏழை:-அய்யா! என்ன, நீர் கடவுள் பெயரால் எல்லா விஷயங்களையும் நடத்துவதாகச் சொல்லிக்கொண்டு உமது இஷ்டத்துக்குக் கோர்ட்டில் வழக்குப் போடுகிறீர்?

ஆத்திகர்:-கடவுள் பெயர் மக்களை ஏமாற்ற! வழக்குப் போடுவது அந்த ஏமாற்றுக்களைக் காப்பாற்ற..

—பாரதிதாசன்
('புதுவை முரசு' 1931)

சாவிலே மதத்தின் நச்சுப்பல்

பகுத்தறிவு வாதிகள் தங்களது கோட்பாடுப்படி வாழ முயலும் போது, பலதிறப்பட்ட நேரடி எதிர்ப்புக்களையும், மறைமுகத் தாக்குதலையும் சந்திக்க வேண்டி இருக்கிறது. பகுத்தறிவு இயக்கம் திறம்பட நடந்து, சீரிய முறையிலே பணியாற்ற வேண்டுமென்ருல் இவை போன்ற எதிர்ப்புக்களை மிகவும் மன உறுதியுடனும் நெஞ்சுரத்துடனும் சமாளிக்க வேண்டும். பகுத்தறிவின் அறிவு, வெற்றி, மூடநம்பிக்கையிலே மூழ்கிக்கிடக்கும் மதவாதிகளிடம் (அறிவு) உடன்பாடு செய்வதாலேயே ஒன்றுமில்லாமல் ஆகிறது. பிறப்பு, மணம், இறப்பு ஆகிய மூன்று நிகழ்ச்சிகளும் மனித வாழ்வில் அமையும் முக்கியமான நிகழ்ச்சிகளாகும்.

தற்போது பிறப்பின் போது விஞ்ஞான முறையோடு கூடிய மருத்துவ உதவி தலையிடுவதை மக்கள் எதிர்ப்பதில்லை. முன்னேற்ற எண்ணம் உள்ள வீடுகளிலும் சிலசமயம் தாயத்தும், இரட்சைகளும் மருத்துவ முறையோடு சேர்த்துக் கையாளப் படுகின்றன. பகுத்தறிவு வாதி குழந்தைக்குத் தந்தையாகும்போது அவன் கொள்கையை நிர்ணயிப்பது அவனுடைய கொள்கையில் அவன் கொண்ட பற்று; குடும்பத்தினரின் அறிவின் அளவு; அவனுடைய குடும்பத்திலுள்ள வயதானவர்களின் செல்வாக்கு; தூண்டுதல்-இவற்றைப்பொறுத்துள்ளது. குழந்தைப் பிறப்பின் போது பகுத்தறிவுவாதி மூடக்கொள்கை அடிப்படையில் எழுந்த சடங்குகளைக் கைக்கொள்வதிலிருந்து விலகி நிற்பது அவ்வளவு கடினமானதல்ல.

அடுத்து வரும் திருமணப் பிரச்சினை என்பது சற்றுக் கடினமானதுதான். மண உடன்பாட்டில் உள்ள இருவரில் ஒருவர் பகுத்தறிவுக் கொள்கையைக் கடைப் பிடிக்காதவராக இருக்கலாம். இருவரும் பகுத்தறிவு வாதிகளாக இருந்தால், திருமணத்தின்போது இரு குடும்பத்தாரும் பழைய பழக்கவழக்கத்தையும் மணமுறையையும் கடைப் பிடிக்கும்படி வற்புறுத்தலாம். சட்டம் கலப்புமணத்திற்கு, சீர்திருத்தத் திருமணத்திற்கு, இடம் அளிக்கிறது. இதனுல் மதவிதிப்படித்தான் பகுத்தறிவு வாதி மணம் முடிக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை.

இறப்பின்போது நிலை என்ன என்பதைச் சிந்தித்தால் அந்நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது; அதிருப்தி அளிக்கக்கூடிய விதத்தில் அமைந்துள்ளது. சுற்றத்தாரும், நண்பரும் துணிவுள்ள சீர்திருத்தவாதியாக இருந்தாலன்றி, எவ்வளவு பெரிய சீர் திருத்த வாதியாக இருந்தாலும் இறப்புக்குப் பின்பு மதத்தின் கொடிய கொட்டுதலிலிருந்து தப்பவே முடியாது.

அரசாங்கம் இன-மத வேறுபாடற்ற இடுகாடோ, சுடுகாடோ அமைத்திருக்கவில்லை. ஒரு மதத்தையும் சாராதவர்களுக்கென்று கல்லறைகள் இல்லை. அவரவர் மதவிதிப்படி சடங்குகள் நடத்தப் படாதவரை இடுகாட்டில் இட்டுவர அநுமதிப்பதில்லை.

பகுத்தறிவு வாதிகள் மாநில மெங்கும், இன-மத வேறுபாடின்றி அவரவர் விரும்பும் விதத்தில், இறந்தபின்பு புதைக்கவோ எரிக்கவோ செய்யும் அளவில் சட்டம் இயற்றும்படி மத்திய அரசிடம் கோரிக்கை எழுப்ப வேண்டும்.

நகராட்சிகள் இலவசமாகவோ, அல்லது குறைந்த கட்டணத்திலோ பொது இடுகாடும் சுடுகாடும் அமைத்தல் வேண்டும். பகுத்தறிவு வாதிகள் இறந்தபின்பு அவர்களை அவமானப் படுத்தும் விதத்தில் சடங்குகள் செய்து கேவலப்படுத்திப் புதைக்கும் வழக்கத்தை நிறுத்தச் செய்யவேண்டும். இறப்புக்குப் பின் நடப்பதுபற்றி பெரும்பான்மையான பகுத்தறிவு வாதிகள் சிந்திப்பதே இல்லை; கவலை கொள்வதில்லை. ஆனால் அவர்களுடன் சேர்ந்த தோழர்களுக்கும், கொள்கையுடைய சுற்றத்தாருக்கும் அவர்கள் செந்நீரும், கண்ணீரும் பாய்ச்சிப் பாடுபட்டு வளர்த்த கொள்கைக்கும் அது அவமானமாகிறது.

பகுத்தறிவாளரின் சாவிலே தன் கோரப் பல்லைப் பாய்ச்சி அவமானப் படுத்துகின்ற மதத்தின் கொடிய பிடியிலிருந்து பகுத்தறிவு வாதிகளை விடுவிப்பது பகுத்தறிவாளர் கடமையாகும்.

(ஆங்கிலம்:-Astron-ஆஸ்ட்ரன்-தமிழாக்கம்:-குருதாசன்.)

கூந்தல் பாதுகாப்பு

விட்டமின்கள் கூந்தலுக்கும் அவசியமாகும். ஸ்பினைச் கீரை, முட்டை கோஸ், எலுமிச்சம்பழச் சாறு இவற்றைச் சம பங்குகளில் சேர்த்துத் தேய்ப்பது மெல்லிய முடிகளுக்கு நல்லது.

கூந்தல் வளர்ச்சி குறைவாக இருந்தால், காரட், எலுமிச்சம் பழச்சாறு இவற்றைச் சேர்த்து தலையில் தேய்க்க வேண்டும்.

தலையின் தோலை நன்கு தேய்த்து விட்டால் முடிகள் நன்கு வளரும். இதைப் பின்வருமாறு செய்ய வேண்டும்:— இரு கட்டை விரல்களையும் நெற்றிப் பொட்டில் வைத்து அழுத்தி இதர விரல்களின் நுனிகளால் நெற்றியிலிருந்து தொடங்கி தலையின் பின்புறம் வரையில் சுற்றிச் சுற்றி 10 நிமிடங்கள் அழுத்திவிட வேண்டும். பிறகு கெட்டியான சீப்பால் வாரிவிட வேண்டும்.

சத்துள்ள கலவைகளைத் தேய்த்துக் கொள்வது நல்லது. சுத்தமான ஆலிவ் எண்ணெயில் ஐந்து மேசைக் கரண்டி எடுத்து சிறிதளவு சுட வைத்து ஒரு எலுமிச்சம் பழ மூடியின் சாற்றைப் பிழிந்து கலந்து கொண்டு, அதை இரவில் தலையின் தோலில் தேய்த்துக் கொள்ள வேண்டும். காலையில் கழுவி விட வேண்டும். மாதம் இவ்வாறு மூன்று நான்கு முறை தேய்க்கலாம்.

மற்றொரு கலவையையும் பயன்படுத்தலாம். இரண்டு முட்டைகளின் மஞ்சள் கருவுடன் அரை எலுமிச்சம் பழத்தின் சாற்றையும் ஒரு மேசைக் கரண்டி ஆல்மண்டு எண்ணெயையும் கலந்து தலைத் தோலில் தேய்த்து அரைமணி நேரத்திற்குப் பின் கூந்தலைக் கழுவி சுத்தம் செய்ய வேண்டும்.

—"சோவியத் நாடு"

சார்வகாவும், சாரிணியும்

[*சார்வகா—சாரிணி: இருவரும் நாத்திகர். அறிவியல் வாதம் இந்நாட்டில் வேத காலத்திலிருந்தே பரவியிருக்கிறது என்பது புலப்படும். அறிவியலும் நாத்திகமும் நல்லொழுக்கத்தை அடிப்படையாகக் கொண்டவை. ஆத்திகமும் மத நம்பிக்கையும் அடிமைத்தனத்தையும் ஒழுக்கக் கேட்டையும் அடிப்படையாகக் கொண்டவை. கடவுள்கள், கடவுள் அவதாரங்கள், கடவுள் தூதர்கள் ஆகியோரின் கதைகளே இதற்குச் சான்று.*]

மத குருக்களின் அட்டூழியங்கள் ஒருபுறம் நடந்துவர, பெண்கள் நீதிக்குப் புறம்பாகக் கொடுமைப்படுத்துவதைக்கண்டு துடித்தனர் இளம் தம்பதிகளான சார்வகாவும், சாரணியும். கொடுமையைக்காண சகிக்க முடியாமலும், வெளி உலக நடப்பை அறிந்துவரவும் ஒரு நீண்டபயணம் மேற்கொள்ள விரும்பினர்.

செறிந்தடர்ந்த காட்டின் வழியே தங்கள் பயணத்தைத் தொடங்கினர். வழியில் சிங்கத்தை வேட்டையாடும் முயற்சியில் ஈடுபட்ட வேட்டைக்காரர்களுக் கிடையே சிக்கிக் கொண்டனர். இருவரும் ஒரு மரத்தில் ஏறி உட்கார்ந்து கொண்டு சிங்க வேட்டையாடுவதை மிகவும் அண்மையிலேயிருந்து கவனித்தார்கள். வில்லும், அம்பும் கொண்டு ஒரு பெண் சிங்கத்தையும் ஆண் சிங்கத்தையும் சுற்றி வளைத்துக் கொண்டார்கள் வேட்டைக்காரர்கள். வயதிலும், அனுபவத்திலும் முதிர்ந்த வேட்டைக்காரர்கள், ''முதலாவது பெண் சிங்கத்தைக் கொல்லுங்கள்,'' என்று கூவினர். உடனே எல்லோரும் பெண் சிங்கத்தைக் குறிவைத்து அம்பெய்து கொன்றுவிட்டு ஆண் சிங்கத்தையும் கொன்றார்கள். சார்வகாவும், சாரிணியும் மரத்தை விட்டுக் கீழிறங்கிவந்து, "முதலாவது ஏன் பெண் சிங்கத்தைக் கொன்றீர்கள்?" என்று கேட்டனர். அதற்கு அவர்கள், ''பெண் சிங்கம் மிகவும் கொடூரமானது, முதலாவது நாங்கள் ஆண் சிங்கத்தைக் கொன்றிருப்போமேயானால் பெண் சிங்கம் எங்களில் சிலரையாவது கொன்றிருக்கும். அதனால்தான் பெண் சிங்கத்தை முதலாவது கொன்றுவிட்டோம்,'' என்றனர்.

பெண் இனம்

இந்த வேட்டைக்காரர்களது தன்மைதான் மதகுருக்களிடமும் காணப்படுகிறது. பொதுவாகப் பெண்களையே ''பாவத்தின் மொத்த உருவம்; அநீதியின் அவதாரம்; நன்றி கெட்டவர்கள்; ஒழுக்கம் கெட்டவர்கள்'' என்று குறிப்பிடும் மதவாதிகள் சொல்வதின் இரகசியம் இதிலே தான் அடங்கி இருக்கிறது. பாவத்தின் நிழலிலே படைக்கப்படும் பெண், பாவ உருவிலே பெண்ணாகப் பிறந்து, வாழ்க்கை

எனும் கடலை மதகுரு எனும் மாலுமியின் துணையின்றிக்கடக்க முடியாத அளவு பலவீனமானவளாக இருக்கிருள் என்று மிகவும் கோர உருவமாகச் சித்தரித்துக் காட்டியுள்ளார்கள். பெண் இனம் தன்னைப் பாவத்தின் உருவம் என்று கருதப்படும் அளவுக்குத் துரத்தப்படுகிருர்கள். பெண்ணினம் தன்னைத் தாழ்ந்த உயிரினமாக மதித்து அவ்வினத்தின் "தலைவிதி" மத குருக்களின் கைகளிலே இருக்கிறது; மத குருவால் நிச்சயிக்கப்படுகிறது என்று எண்ணும் அளவுக்கு இழுத்துச் செல்லப்படுகிருர்கள்.

துறவியின் சினம்

சார்வகா தம்பதிகள் அதற்குப் பின்பு நைமிசாரண்யா எனும் ஒரு துறவியைச் சந்தித்தனர். அடிகளுக்குச் செலுத்தவேண்டிய மரியாதையைச் செலுத்திவிட்டு, தங்களது பயணத்தின் குறிக்கோளையும், அறிவு பெறவிரும்பும் தமது உள்ளத்தையும் சொல்ல முன்வந்தனர். முனிபுங்கவர்—சாரணி-ஒரு பெண் - தன் முன் வருவதை எதிர்த்தார். காரணம், பெண் பாவத்தின் உருவம்; பாவத்தின் இருப்பிடம் என்று கருதினர். சார்வகா, "பெண்ணும் ஆணைப்போல் உரிமை பெற்றவள்; அவளுக்கு உரிய இடம் அளிக்கவேண்டும்" என்று சாமியாரின் கருத்தை மறுத்துரைத்தார். அதைக் கேட்ட சாமியார், சார்வகாவை எள்ளி நகையாடிப், "பெண்ணை நீ மறந்துவிடு; பெண் என்பது குப்பை மேடு. அதைத் தோண்டிப் பார்த்தாலும் அதில் ஒருவித நல்ல பொருளும் கிடையாது," என்று உபதேசம் செய்தார். சார்வகா தன் மனைவிக்குச் சாதகமாகப் பேச ஆரம்பித்தார். முனிவர் கோபம் கொண்டு தன் ஞானக் கண்ணால் சாரிணியை எரித்துச் சாம்பலாக்கிவிடப் போவதாகச் சபதம் செய்தார். சாரணி அச்சமின்றி நின்றுகொண்டு, "அப்படியே எரித்துவிடு, பார்க்கலாம்," என்ருள். கோபம் கொண்ட முனிவர் வாயில் ஏதோ முணுமுணுத்துக்கொண்டு சாரணி முகத்தையே பார்த்துக்கொண்டு நின்ருர். சாரிணியும் அமைதியாக அக்கோபம் கொண்ட முனிவனைப் பார்த்துக்கொண்டே நின்ருள். இப்படிப் பார்வை மூலம் போராடும் நிலை ஒரு சில நிமிடங்கள் நடந்தன. கடைசியில் அடியற்ற மரம் போல் அடியார் சாய்ந்தார். சீடர்கள் பெண்ணின் பார்வையால் கதிகலங்கி, நிலைகுலைந்து விழுந்து அவமானத்துக்குள்ளான தங்களது குருநாதர் நிலைகண்டு ஓடிவந்து சாரிணியையும், சார்வகாவையும் தாக்க ஆரம்பித்தார்கள். இவ்வேடிக்கையான காட்சியைத் திரளாகக் கண்ட கிராமத்து மக்கள் அவ் அறிவுத் தம்பதிகளை முரட்டுக் கரங்களிலிருந்து காப்பாற்றினர்.

சோரம்போன குற்றம்

சார்வகாவின் பயணம் தொடர்ந்தது. நவீன காலத்தோடு ஒட்டிய ஒரு நிகழ்ச்சியைக் கண்டார்கள். ஒரு போர் வீரன் தன் இளம் மனைவியை ஊரில் விட்டுவிட்டு நாடுகாக்கப் போர்க்களம் சென்ருன். கொஞ்சகாலத்திற்குப் பின்பு போர்முனையிலிருந்து வீடு திரும்பினுன். அவன் மனைவி சோரம் போனதற்காக விசாரித்துத் தீர்ப்பளிக்க நீதிபதிகள் அன்று கூடியிருந்தனர். கிராமத் தலைவன் தலைமை வகிக்க, சார்வகாவும் ஒரு நீதிபதியாக நியமிக்கப்பட்டிருந்தார். குற்றம் சாட்டப்பட்ட போர் வீரன் மனைவி, தான் கருவுற்

திருப்பத்தை ஒப்புக்கொண்டாள். இது போன்ற வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவள் மன்னிப்புக் கோர வாய்ப்புத் தருவது வழக்கம். ஆனால் அவளோ பிடிவாதமாக மன்னிப்புக் கேட்கவே இல்லை. "விசுவாமித்திரராலும் அடக்க முடியாத அவசரத்தால் ஏற்பட்ட விளைவைப் போன்றது தன் நிலைமை," என்று விளக்கினாள்.

"அப்பெண்ணின் செயல் ஏதோ தற்செயலாக நடந்த விளைவு; அதனால் மன்னித்து விடலாம்" என்று சார்வகா சொன்னார். ஆனால் கிராமத் தலைவனோ பெரும்பான்மையானவருடன் சேர்ந்துகொண்டு அப்பெண்ணுக்கு மரண தண்டனை விதித்தான். சார்வகாவின் பிரசாரமும், அவருடைய உதார குணமும் மக்கள் மனதில் வேரூன்ற ஆரம்பித்திருந்தது. அப்பெண்ணுக்காகப் பலர் இரங்கினர். ஆனாலும் மறுநாள் காலையில் மரண தண்டனை நிறைவேற்றப்பட வேண்டிய ஏற்பாடுகள் நடந்துகொண்டிருந்தன.

தீர்ப்புச் சொன்ன நீதிபதிகள் வழக்கப்படி அங்கு குழுமி இருந்தனர். போர்வீரன் மனைவியின் கழுத்தை வெட்டி நீதிபதிகளின் தீர்ப்பை நிறைவேற்றத் தன்னைத் தயார் செய்துகொண்டிருந்தான், கணவன். ஆனால், போருக்குச் சென்றிருந்த போது தான் பல பெண்களிடம் நடத்திய லீலா விநோதங்களை எண்ணியதும் மனம் குழம்பினான். தன் மனைவியைக் கொலை செய்வதற்குப்பதில் மண்விலக்கு அளித்துவிடலாம் என்று கூறினான். ஆனால் அவன் தாயோ, அப்பெண்ணின் இரத்தத்தைக் காண ஆவலோடு சூழ்ந்திருக்கும் கூட்டத்தினரின் கோபத்தைப் பெறுவதைவிட அப்பெண்ணைக்கொன்று விடுவது நல்லது, என்று தன் மகனுக்கு அறிவுரை தந்தாள். சில பெண்கள், 'பெண்களுக்குரிய உரிமையை நிலை நாட்ட எண்ணி "குற்றம் செய்த பெண்ணுக் குத்தான் தண்டனை தர வேண்டுமே அன்றி, அவள் வயிற்றிலே இருக்கும் கருவுக்குத் தரலாகாது," என்று தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்தனர். ஆனால் இவ்வேண்டுகோள் நீதிபதிகளால் ஏற்கப்படவில்லை. மனைவியைக் கொல்லத் தயங்கும் கணவனுக்கு அபின் கொடுத்துப் போதை ஏற்றி அவர்கள் எண்ணத்தை நிறைவேற்ற ஏற்பாடு செய்தார்கள். கடைசி நிமிடம் வரை குற்றம் சாட்டப்பட்ட பெண் பொய் சொல்லித் தப்பிக்கவோ, மன்னிப்புக் கேட்டு விடுதலை பெறவோ விரும்பவில்லை. அதை எதிர்த்தாள்.

மனைவியின் தலையைத் துண்டிக்கக் கொடுவாளை உயரே தூக்கினான், கணவன். ஒரு கிழவி பேசஎழுந்தாள். அவள்தான் இளமையாக இருக்கும்போது நடந்த ஒரு நிகழ்ச்சியைச்சொல்ல ஆரம்பித்தாள். "எழுபது ஆண்டுகளுக்கு முன்பு, அதாவது இக்கிழவியின் பதினேழாவது வயதில் இவளும் இவளுடைய தோழியரும் கோயிலில் கூடியிருந்தனர். அவர்கள் உண்டு, ஆடிப்பாடி, விளையாடி மகிழ்ந்திருந்தனர். மாலை நேரத்துக் கடல் காற்று அவர்களைத் தூக்கத்தில் ஆழ்த்தியது. இவளுடன் சேர்ந்த தோழியர் ஒவ்வொருவராய் இவளை நல்ல தூக்கத்தில் விட்டுவிட்டு வீட்டுக்குச் சென்றுவிட்டார்கள். தூக்கத்திலிருந்து இவள் விழித்த போது இரண்டு முரடர்களின் உடும்புப் பிடியிலே சிக்கி இருந்தாள். அவள் தன்னைப் பாதுகாப்பதற்கு முன்பே அவர்கள் அவள் கற்பைச் சூறையாடிவிட்

டார்கள். நீதிபதியைப் பார்த்து, "இந் நீதிமன்றத்தின் தலைவர் தான் அந்த இருமுரடர்களில் ஒருவன்," என்ருள். கூட்டத்தில் ஒரே ஆரவாரம்.

கதை சொல்லிக்கொண்டிருக்கும் போதே, தலைவன் தன் நண்பர்களுடன் கூட்டத்தை விட்டு வெளியேறிப் போய்விட்டான். கிழவி தன் கதையைத் தொடர்ந்தாள். தன்னுடைய கணவன் தான் இரண்டாவது முரடன் என்று சொன்னுள். இவளுடைய தகப்பன் பெரிய போக்கிரி. அந்த இரு முரடர்களில் ஒருவன் தன் மகளை மணம் முடித்தாக வேண்டும், மற்றவன் ஊரை விட்டே போய்விட வேண்டும் என்று நிபந்தனை இட்டான். அதன்படி நடந்தது என்று சொல்லி முடித்தாள்.

தீர்ப்பு

நீதிபதியின் நிலையே இப்படி இருந்ததால், இப்போது சார்வகாவின் பக்கம் பெரும்பான்மை ஆயிற்று. "குற்றம் சாட்டப்பட்டவள் சந்தர்ப்ப வசத்தால் தவறிவிட்டாள். அதனுல் மன்னித்து விடுதலை செய்கிருேம்," என்று தீர்ப்புக் கூறினுர். இதைக் கேட்டதும் மக்கள் ஒரே ஆரவாரம் செய்து தங்களது மகிழ்ச்சியைத் தெரிவித்தனர். சார்வகா விடுதலை செய்து தீர்ப்பு அளித்ததோடு அப்பெண்ணை அவள்கணவன் பெண்ணுக்குரிய மதிப்புத் தந்து அவளை நல்ல முறையாக நடத்த வேண்டும் என்றும் சொல்லி முடித்தார். சாவின் கொடும்பிடியிலிருந்த போதும் உண்மை சொன்ன அவள் தைரியத்தை மெச்சி, "குற்றம் சாட்டப்பட்ட பெண் என் மகளாக இருந்திருந்தால் இதைக்காட்டிலும் மிகவும் அதிகமாக மகிழ்ந்திருப்பேன்" என்றும், கூறினுர்.

> **கடல்களின் பெயர்கள்**
>
> பூகோள ஆசிரியர் :- ஏய், பரமசிவம், இப்போது சொல், இந்தியாவைச் சுற்றிலுமுள்ள கடல்களின் பெயர்கள் என்ன?
>
> புராணம் படித்த மாணவன்:- அராபிக்கடல், வங்காளக் குடாக்கடல், திருப்பாற்கடல், தயிர்க்கடல், நெய்க்கடல், பாதாம்கீர்கடல், காஃபிக்கடல்!
>
> —சா. கு.

போர்வீரனை நோக்கி, தீர்ப்பை நிறைவேற்றுவது அவனது கடமை என்ருர். கடமையை எப்படி நிறைவேற்றப்போகிருன் என்று கேட்டதற்கு, "போர்வீரன் தன் கடமையை நிறைவேற்றுவது போல் நிறைவேற்றுவேன்" என்ருன். வழக்கு விசாரணை நிகழ்ச்சிகளால் அவன் உள்ளம் தாக்கப் பட்டிருந்தது. தன் மனைவியிடம் அவனை முன்போல் நேசித்து அன்பாக நடத்துவதாகவும், அவள் பிள்ளையைத் தன் பிள்ளையைப் போல் நடத்துவதாகவும் கூறினுன்.

இதுபோல் சார்வகாவின் தீரச் செயல்களைப் பற்றிய கதை தொடர்ந்து செல்கிறது. சார்வகாவுக்கு வந்த இடையூறு, ஆபத்தானது; பின்பு அவர் தீக்கிரையாக்கப்பட்டது போன்ற நிகழ்ச்சிகள் தொடர்ந்து செல்கின்றன.

சார்வகாவுக்கு இடையூறு ஏன் ஏற்பட்டது என்ற காரணத்தை நாம் அறிய, அவர் வாழ்ந்த காலத்தை அறியக் கடமைப்பட்டுள்ளோம். அவர் (4000) நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர். அவர் ஒரு காரண—காரிய தத்துவ ஞானி; சமூக சீர்திருத்தவாதி. இதற்கு முன்பு

எவரும் அநுபவித்தறியாத அளவு துன்பம் அநுபவித்தவர். வேதத்தின் கருத்துக்களை அவர் எதிர்த்து வந்தார். அவர் எழுதிய நூல்கள் அனைத்தும் தீக்கிரையாக்கப்பட்டன. அவர் ஒரு சிறந்த எழுத்தாளர்; திறமையான பேச்சாளர். அவர் எழுதிய நூற்களைத் தேடிப்பிடித்துக் கொடிய கூட்டத்தினர் தீயிலிட்டனர்.

சார்வகா பொதுமக்கள் கவனத்தைக் கவர்ந்த மாபெரும் தலைவர். அவர் பேச்சைக் கேட்டு, அவர் கருத்தைச் செயல்படுத்தப் பலர் காத்திருந்தனர். மதக் குருக்கள் கொடுமையைப் பாமரரும் அறியச் செய்யும் வகையில் விளக்கம் தந்த பெரியார். அவர் பிரசாரத்தால் இந்து மதம் எனப்படும் வேதக்கோட்பாடும், மற்ற மதங்களும் மறைந்துவிடும் நிலைக்கு வந்தது.

சார்வகாவின் பிரசாரம்

சார்வகா வாழ்ந்த நாளில் மக்களுக்குப் போதுமான நிலமும், உணவும் கிடைக்கப்பெற்று, மாடுகளுக்கு மேய்ச்சல் தரையும் போதுமானதாக இருந்தது. குடும்ப அமைப்பு முறையில் கிராம மக்கள் வாழ்ந்த காலம் அது. கிராமத் தலைவன் ஆட்சிக்குட்பட்டிருந்த நேரம். அரசன் கிராமத் தலைவனை அதிகமாகக் கண்காணிக்காமல் விட்டிருந்த வேளை. மக்களுக்கு காட்டு மிருகமும், கொள்ளைக் கூட்டத்தினரும் துன்பம் கொடுத்துவந்தனர். கிராம மக்களுக்கு இயற்கையாகவே அமைந்த வீரத்தின் காரணமாக இவ் இடையூறுகள் கூட அதிக அளவில் இல்லாமல் போயிற்று. ஆனால் மதம் என்ற ஒன்றின் மூலம் வந்த கொடுமைக்கும், துன்பத்துக்கும், துயரத்துக்கும் மக்கள் நிவாரணம் காணமுடியாமல் திம்தனர். சுவர்க்கத்திலே இருக்கும் கடவுளும், பிசாசும் கதிரவனை உதிக்கச் செய்கிறது; காற்றையும், புயலையும் உருவாக்குகிறது; மழையும்,இடியும் அதன் கட்டளையினால் நடைபெறுகிறது என்றெல்லாம் நம்பச் செய்தார்கள் மதகுருக்கள். மதகுரு கடவுளின் தூதன்; அவன் கடவுளால் நேரடியாக நியமிக்கப்பட்டவன் என்று கூறி இயற்கையின் சக்திகளைப் பயன்படுத்தி, மக்களை அச்சுறுத்தித் தன் சுய தேவைகளைப் பூர்த்தி செய்து செம்மையாக வாழ்ந்து வந்தான். நீக்கப்பட முடியாத மதகுருக்களின் தேவைகளை நிறைவேற்றும்நோக்கத்தோடு அள்ளிக் கொடுத்து மக்கள்பஞ்சத்திற்குள்ளானார்கள்.

சார்வகா தனது கம்பீரமான உருவோடு பாதிக்கப்பட்ட மக்களைக் கரை சேர்க்கும் பெருநோக்கோடு தோன்றினார். மக்களிடம் அவர்கள் இயற்கையைக் கண்டு அஞ்சுவது அர்த்தமற்றது என்று விளக்கிக் காட்டினார். பரம்பொருள் என்று ஒன்றில்லை, என்று விளக்கம் தந்தார். கடவுள் என்பது பேராசை கொண்ட மிருகத்தனமான மதகுருக்களின் படைப்பே அன்றி வேறல்ல; இறந்துபோன பிதுர்க்களுக்கும், இறைவனுக்கும் தீயில் அவிர் சொரிதல் போன்ற கண்மூடி வழக்கங்களால் மதகுருக்களை கொழுக்க வைக்க வேண்டாம்; மறுபிறப்பு என்பதில்லை; நரகமும், மோட்சமும் நாசகால மதகுருவின் படைப்பு; கோபுரத்தோடு கூடிய கோயிலும், வேள்விச்சாலையும் சூதாடிகள், சோம்பேறிகள், காம்வெறி பிடித்தோர் இன்ன பிறசமூக விரோதிகளின் குகைகளாகும்," என்ற உண்மை விளக்கம் தந்த பகுத்தறிவுப் பெரியார் சார்வகா.

ார்கள். ருடைய உண்மையான இந் ற்களும், எளிய தோற்ற ான்ம, திண்மையான செயல் ீழ்முறைகளும் மக்கள் மனதில் நம்பிக்கையை ஊட்டியது. மதகுருக்கள் எனும் வைரிகளிடமிருந்து காப்பாற்றும் அருளாளராக மக்களுக்குக் காட்சி தந்தார். மக்களது அறிவுக்கு ஒவ்வாத பயத்தால் ஏற்படும் துன்பம், பஞ்சம் இவற்றைச் சுட்டிக்காட்டி மெல்ல, மெல்ல கோயிலுக்குச் செல்லுவதையும், மதகுருக்களுக்குக் காணிக்கை தருவதையும் நிறுத்த வழி வகுத்து வெற்றி பெற்றார். மதகுருக்களுக்கும் பீதி ஏற்பட்டது. ஆனால் மக்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்பட்டதால் மதகுருவால் ஒன்றும் செய்ய இயலவில்லை. இந்திய உபகண்டத்திலே மதம் மாய்ந்துவிட்டது போன்ற ஒரு சிறந்த நிலை உருவாயிற்று. கோயில் கோபுரம் தரைமட்டமாக்கப்பட்டது; யாகங்கள் ஒழிக்கப்பட்டன. சோம்பேறிக் கும்பலான சோதிடரும், குறி சொல்லுவோரும், சூதாடியும், விபச்சாரமும் நிறைந்திருந்த கோயில் இப்போது வெற்றிடமாகியது.

பழி உணர்ச்சி

குள்ளநரிக் குணம் படைத்த தந்திரக்கார மதகுருக்கள் ஆதரவற்றவர் ஆனார்கள். சார்வகா, ''இல்வுலக வாழ்வன்றி, வேறுலகம் என்று ஒன்றில்லை; நரகம் மோட்சம் என்பதில்லை; அதனால் மதகுருவால் சொல்லப்படும் 'புண்ணியம்' செய்து, போகுமிடத்துக்கு மூட்டையுடன் போவது என்பது நடவாத செயல்; இல்லாத காரியம்; இருக்கும்வரை நேர்மையாக வாழ்வை அநுபவித்துக்கொள்ளுங்கள்; கடன் பெற்றாவது சுவையுடன் உண்ணுங்கள்; இறந்த பின்பு கடன் என்பது உங்களை ஒன்றும் செய்யப் போவதில்லை," என்று பிரசாரம் செய்தார்.

"வாங்கிய கடனைத் திருப்பிக் கொடாதே," என்று பிரசாரம் செய்தாரா என்பதற்கு ஆதாரபூர்வமான சான்று இல்லை. ஆனால் லேவாதேவிக்காரர்களை சார்வகாவுக்கு எதிராகத் தூண்டிவிட்டு அவருக்கு இன்னல் விளைவிக்க மதவாதிகள் திட்டமிட்டனர். அதனால் "வாங்கிய கடனைத் திருப்பிக்கொடாதே என்று பிரசாரம் செய்கிறார்," என்று வட்டிக்குக் கொடுக்கும் பெரிய மனிதர்களை சார்வகாவுக்கு எதிராகத் தூண்டி விட்டனர். மெதுவாக சாதிக்கும்பல் சார்வகாவுக்கு எதிராகச் சதித்திட்டம் தீட்டியது. ஒரு நாள் சார்வகாவை அவர் குடிசைக்குள் வைத்தே தீயிட்டுக் கொன்றனர்; வள்ளல் இராமலிங்கரை அறைக்குள் வைத்துத் தீயிட்டது போல. சார்வகாவின் எழுத்துக்களும் தீயிடப்பட்டன. சார்வகா தன் கைப்பட எழுதிய நூல் ஒன்றும் கிடையாத அளவுக்குச் செய்துவிட்டனர். அவர் இதுபோன்ற பகுத்தறிவுக் கருத்துக்களைப் பரப்பினர் என்பதற்கு ஆதாரம், அவர் கருத்துகளுக்கு அவரது எதிரியான (மதத்)தத்துவ வாதிகள் மறுப்புக் கொடுத்திருப்பதில் இருந்தே நாம் அறியக்கிடக்கிறது.

சாவுக்குப் பின்

சார்வகாவின் சாவுக்குப் பின்பு மக்கள் மதத்திற்கு ஓடிவிடவில்லை. அவர்களது மாபெரும் தலைவன் விட்டுச் சென்ற கருத்துக்களை மனதில் கொண்டு வாழ்ந்தனர். ஆனால் முறைப்படி கற்பிக்கப்படாத கருத்துக்களை ஞாபகசக்தி நீண்டநாள் வைத்திருப்பதில்லையே! மெது

-வாக மதகுருக்கள் சார்வகா சென்றிராத மூலைமுடுக்குகளில், ஓரத்துக் கிராமங்களில், தங்களது மடமைப் பிரசாரத்தைத் தொடங்கினர். பயம் கொண்டது மனதில். யாகத்தீ கொழுந்து விட்டு எரிந்தது. மதம் வளர்ந்தது; அறிவு தேய்ந்தது. காணிக்கை மதகுருவின் காலடியில் குவிந்தது; சார்வகா விட்டுச் சென்ற எண்ணம் மக்கள் மனதைவிட்டு நீங்கிச் சென்றது. ஆனால் அது தத்துவ விவாதத்தின்போது மட்டும் சார்வகா எண்ணம் மக்கள் மனதைவிட்டு நீங்காமல் நிலைபெற்று நின்றது. ஆனால் சட்டம் போல் ஏழைகளுக்கு எட்டாத விளக்காகவே இருந்தது. மக்கள் மீண்டும் மதகுருக்களின் பலி ஆடுகளானார்கள்.

சார்வகா உயிருடனிருந்து, மத குரு இல்லாதிருந்தால் இந்தியாவும், உலகமும் எந்நிலையிலே இருக்கும் என்பதைச் சொல்வது சற்றுக் கடினம்தான். இந்திய மதவாதிகளின் சாவுப்பிடியிலே சிக்கிக் குற்றுயிர் அடையும் நிலை பெற்றிருக்காது; சாதி எனும் சாக்காடு நோக்கித் தளர்நடை போட்டிருக்காது. இனவெறிப் படுகுழியில் விழுவதிலிருந்து உலகத்தையும் நிச்சயம் தடுத்திருக்கும். பிற மதங்களின் பிறப்பும் இருந்திருக்காது. அகில உலகும் இன-மதச் சார்பற்ற சமுதாய அமைப்பின் கீழ் அமைதியாக இயங்கி விஞ்ஞானத்தின் விளைவை முழுமையாகப் பயன்படுத்த நாட்டை நாசப்படுத்தும் போர் என்ற கொடுமையிலிருந்து விடுவித்து எங்கும் இன்பம், நிறைவு, அமைதி என்ற நிலை உருவாகி இருக்கும். ஆனால் அந்நிலை ஏற்படவில்லையே!

கற்பூரமும் காகிதமும்

இந்துக் கடவுள்களுக்கு கற்பூரம் கொளுத்துவது வழக்கம். பர்மியர் கடவுளுக்கு காகிதம் கொளுத்துவது வழக்கம்.

இந்து :-நான் என்ன வருத்தமாய் இருந்தாலும் நீ கடவுளுக்குக் காகிதம் கொளுத்துவதைக் கண்டால் எனக்கு அடக்க முடியாத சிரிப்பு வந்து விடுகிறது.

பர்மியன்:-நான் என்ன சந்தோஷமாயிருந்தாலும் நீ கற்பூரத்தைக் கொளுத்துவதைக் கண்டால் எனக்கு அடக்க முடியாத வருத்தம் உண்டாகிறது.

—பாரதிதாசன்

("புதுவை முரசு" 17-11-30

சார்வகா சாகடிக்கப்பட்டதோடன்றி, அவர் விட்டுச் சென்ற மக்கள் இணைப்புக்குரிய வழிமுறையும் கொடூர மதவெறியர்களால் துண்டிக்கப்பட்டு விட்டனவே! சார்வகாவின் பொற்காலம் மீண்டும் நாட்டில் தோன்ற நல்லவர்கள் அயராது பாடுபட வேண்டும். மக்களைப் பிரிவுபடுத்தும் மதத்திலிருந்து விடுவித்து, நல்லதோர் சமுதாயம் செய்து உலகம் எனும் ஊரில் ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு தெரு எனும் அளவுக்கு எண்ணம் உருவாகி, ஏற்றம் பெற வழி செய்ய வேண்டும். நாட்டை நாடு சுரண்டுவதை ஒழித்து, அன்புடன் வாழும் சமுதாயம் அமைக்க விரும்பிய அவ் அருளாளர் சார்வகாவின் எண்ணத்தை நிறைவேற்றுவோமாக.

["Charwaka and Charini"—Raghavendra Govind Kulkarni.
ஆங்கிலம்: எஸ். இராமநாதன்.
தமிழாக்கம்: குருதாசன்.]

கவிஞர் முருகுசுந்தரம், எம்.ஏ.

சஞ்சீவி பர்வதத்தின் சாரல்

III

இந்திய நாட்டின் பழம் பெரும் இதிகாசங்கள் இரண்டு. மகாபாரதம், இராமாயணம் என்ற இரண்டுமே அவை. இவ்விரண்டு நூல்களிலும் சமுதாயத்தில் காணப்படும் எல்லாவிதமான ஒழுக்கக் கேடுகளும், நடைமுறைக்கு ஒவ்வாத செய்திகளும் மலிந்து காணப்படுகின்றன. இவ்விரண்டு நூல்களின் அடிப்படையில் கணக்கற்ற குட்டி இதிகாசங்களும், புராணங்களும் எல்லா இந்திய மொழிகளிலும் தோன்றியிருக்கின்றன. வெறும் இலக்கியச் சுவையை மட்டும் அடிப்படையாகக் கொண்டு நோக்கினால் இவ்விரண்டு இதிகாசங்களும் மிகவும் உயர்ந்தவை என்று ஒத்துக் கொள்ளலாம். ஆனால் வெறும் இலக்கியச் சுவை மட்டும், ஓர் உயர்ந்த இலக்கியத்தின் நோக்கம் அன்று.

மேலே நாட்டினர் இலக்கியத்தைப் பயிலும் முறைக்கும் நம் நாட்டினர் இலக்கியத்தைப் பயிலும் முறைக்கும் பெருத்த வேறுபாடு உள்ளது. மேல்நாட்டினர் இலக்கியப் பாத்திரங்களைக் கற்பனை என்ற அளவிலேயே மதிக்கின்றனர். ஆனால் நம் நாட்டு இலக்கியப் பாத்திரங்கள் கடவுள்களாக மாறி நம் சிந்தனையைக் குழப்புகின்றன. நம் நாட்டுப் புராண இதிகாசங்களில் காணப்படும் கடவுளரிடத்தில், கடவுள் தன்மை காணப்படவில்லை. சராசரி மக்களிடத்தில், காணப்படும் பண்பாடு கூட இக்கடவுளரிடத்தில் காணப்படவில்லை. இதைப்பற்றி நாம் கேட்கும்போது, பட்டதாரி ஆத்திகர்கள் நம்மைப் பார்த்து ஒரு கேள்வி எழுப்புகின்றனர். "நம் நாட்டு இலக்கியங்களில் மட்டும்தானா ஆபாசம் காணப்படுகிறது? மேநாட்டு இலக்கியங்களில் ஆபாசம் இல்லையா?" என்று கேட்கின்றனர். கிரேக்க, ரோமானிய இலக்கியங்களில் நம் நாட்டு இலக்கியங்களில் காணப்படும் ஆபாசங்களை விடப் பன்மடங்கு மிகுந்து காணப்படுகிறது. உண்மை. அந்நாட்டுக் கடவுளர்கள், நம் நாட்டுப்புராண இதிகாசக் கடவுளர்களைவிட ஒழுக்கக் கேட்டில் குறைந்தவர்கள் அல்லர். ஆனால் அறிவு வளரவளர இம்மேலை நாட்டுக் கடவுள்கள் மக்களிடத்தில் மதிப்பிழந்துமாஜிக்கடவுள்களாகி விட்டன. கிரேக்கப் பெருந் தெய்வமான ஜூஸ்ஸும், ரோமானியப் பெருந்தெய்வமான ஜூபிடரும் இன்று கண்காட்சிப் பொருள்களாகிவிட்டன. ஆனால் நம்நாட்டில், புராண இதிகாசக் கடவுள்களின் நிலைமை நேர் மாறாக இருக்கிறது. ஊரெங்கும் இராமர் கோயிலும், தருமராசர் கோயிலும், திரவுபதியம்மன் கோயிலும், கிருஷ்ணன் கோயிலும், பலராமன் கோயிலும், அநுமார் கோயிலும் நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து கொண்டு வரு

கின்றன. ஆனால் மேலை நாட்டினர் இந்நிலையெல்லாம் கடந்து, ஒரு தெய்வ வணக்கத்தின் கீழ் கூடிவிட்டனர்.

இலக்கியத் தொடர்பால் ஏற்படும் இவ்வறிவுக்கிறுக்கை மிகத் திறம்பட எள்ளிநகையாடுகிறார் பாரதிதாசன். நஞ்சில் தோய்த்த அம்புகளைப் போலச் சொற்றொடர்கள் காரசாரமாகக் கிளம்புகின்றன. சூறைக்காற்றின் சிக்கிய எச்சில் இலைபோல மூடக் கருத்துக்கள் இவர் முன்னால் பறக்கின்றன. அவை பின்வருமாறு:

''ஐயோ,'' என்ற கூக்குரலைக் கேட்டுக் குப்பனும் வஞ்சியும் திடுக்கிட்டனர்.

''ஓர்நொடியில் சஞ்சீவி
பர்வதத்தை ஓடிப்போய்
வேரோடு தூக்கிவர
வேண்டுமே ஐயாவே!
நன்றாக உங்களுக்கு
ராமன் அருளுண்டு;
வானம் வரைக்கும்
வளரும் உடலுண்டே
ஏனிங்கு நின்றீர்?
எடுத்துவருவீர் மலையை''

என்ற சொற்கள் இருவருடைய காதிலும் விழுகின்றன. இச்சொற்களைக்கேட்ட குப்பன் அச்சத்தால் அதிர்ந்து போய்விட்டான். அவன் ஏறிநிற்கும் சஞ்சீவி பர்வதம், அசைவது போலவும், மேலே எழும்புவது போலவும் அவனுக்குத் தென்படுகிறது. குப்பனுடைய அச்சத்தைக் கண்டு வஞ்சி நகையாடுகிறாள். அவளுடைய பேச்சில் சிந்தனைக் கதிர்கள் தெறித்து விழுகின்றன.

''ராமனெங்கே! ராமன்
அருளெங்கே! சஞ்சீவி
மாமலையைத் தூக்குமொரு
வல்லமை எங்கே?''

என்று குப்பனைப் பார்த்துக் கேட்கிறாள் வஞ்சி. மாமலையைத் தூக்கும் வல்லமை நமக்கு இருந்தால், நம்நாட்டை வெள்ளையன் ஆளப் பார்த்துக் கொண்டு அடிமையாக வாழ்வோமா? என்று கேட்கிறாள். மீண்டும் ஒரு சத்தம் கேட்கிறது. ''அம்மலையை ஓர் நொடியில் தூக்கி வந்தையாவே, உம்மெதிரில் வைக்கின்றேன் ஊஹூ ஹூஹூ...,'' என்பதே அச்சத்தம். குப்பன் குடல் அறுந்து போனது போல் பதைத்தான். ''எப்படித்தாம் நாம் பிழைப்போம்?'' என்று கதறுகிறான்.

வஞ்சி குப்பனுக்கு ஆறுதல் கூறுகிறாள்:—

''இப்புவிதான் உண்டாகி
எவ்வளவு நாளிருக்கும்?
அப்போது தொட்டிந்த
அந்திநேரம் வரைக்கும்
மாமலையைத் தூக்கும்
மனிதன் இருந்ததில்லை.
மன்னுமுலகம் மறைந்
தொழியும் காலமட்டும்
பின்னும் மலைதூக்கும்
மனிதன் பிறப்பதில்லை.''

என்று வஞ்சி அறிவுணர்ச்சியோடு பேசுகிறாள். மீண்டும் சத்தம் கேட்கிறது.

''இந்நேரம் போயிருப்பார்!
இந்நேரம் பேர்த்தெடுப்பார்!
இந்நேரம் மேகத்தில்
ஏறிப் பறந்திடுவார்!
உஸ்ஸென்று கேட்குதுபார்
ஓர்சத்தம் வானத்தில்!
விஸ்வரூபங்கள் கொண்டு
மேலேறிப் பாய்கின்றார்.''

இதைக்கேட்ட குப்பன் மீண்டும் அச்சத்தால் நடுங்குகிறான். வஞ்சி தன் மணாளனைப் பொறுமையோடிருந்து மீண்டும் வரும் சத்தத்தைக் கவனிக்கச் சொல்கிறாள். ''இப்படியாக அநுமார் எழும்பிப் போய், ஜாம்பவந்தன்

சொன்னது போல் சஞ்சீவிபர்வ தத்தைத் தூக்கிக் கொண்டுவந்து இலங்கையிலே வைத்தார். மலை மருந்தின் சக்தியால் செத்த இராமனும் லக்ஷ்மணனும் சேர்ந் தெழுந்தார். அநுமார் மீண்டும் சஞ்சீவி பர்வதத்தைத் தூக்கி வந்து இருந்த இடத்திலேயே வைத்துவிட்டார்," என்ற குரல் கேட்டது. இதைக்கேட்ட குப்பன் அச்சம் நீங்கி ஆறுதல் அடை கிருன். தலைக்கு வந்தது தலைப் பாகையோடு போயிற்று என்று அவன் உள்ளம் எண்ணி மகிழ்ந் தது. அநுமார் ஆடாமல், அசை யாமல் சஞ்சீவி பர்வதத்தை இலங்கைக்குத் தூக்கிச் சென்ற திறத்தையும், மீண்டும் அதை இருந்த இடத்திற்கே கொண்டு வந்து சேர்த்த திறத்தையும் எண்ணி வியப்புக்கடலில் மூழ்கி னுன். சிறிது நேரத்தில் மீண் டும் சத்தம் கேட்டது.

''இம்மட்டும் இன்று
கதையை நிறுத்துகிறேன்
சத்திய ராமாயணத்தின்
சத்தான இப்பகுதி
உத்தியாய்க் கேட்டோர்
உரைத்தோர் எல்லோருமே
இங்குள்ள போகங்கள்
எல்லாம் அனுபவிப்பர்
அங்குள்ள வைகுந்தம்
அட்டியின்றிச் சேர்வார்கள்;
ஜானகீ காந்தஸ்
மரணே! ஜய ஜய ராம்!"

என்று யாரோ கூறிமுடிக்கும் குரல்குப்பனின்காதில்விழுகிறது. குப்பன் குழப்பத்தில் மூழ்கினுன். வஞ்சி தான் கையில் வைத்தி ருந்த வேருெரு பச்சிலையை குப் பனிடம் கொடுத்துத் தின்னச் சொன்னுள். குப்பனும் அவள் கொடுத்த பச்சிலையை வாங்கி வாயிலிட்டு மென்று தின்றுன். ''இப்பச்சிலையைத் தின்ருல் உல கில் நடைபெறும் காட்சிகளை யெல்லாம் இங்கிருந்தபடியே காணலாம்,'' என்று அப்பச்சிலை யின் சிறப்பை வஞ்சி விளக்கி னுள். வஞ்சி கைநீட்டிக் காட்டிய பக்கம் குப்பன் நோக்கினுன்.

ஒரு பெரிய மாளிகையி னுள்ளே மக்கள் கூட்டமாக நிரம் பியிருந்தனர். இராமாயணக் காலட்சேபம் செய்யும் பாகவதன் ஒருவன் ரூபாயைத் தட்டிப்பார்த் துக் கொண்டிருந்தான். இக் காட்சியைக் கண்டதும் குப்பன் வெட்கத்தால் குன்றிப்போனுன், அப்போது பகுத்தறிவு வாதி யான வஞ்சி கூறுகிருள்:—

"வானளவும் அங்கங்கள், வானரங்கள், இராமர்கள், ஆனது செய்யும் அனுமார்கள், சாம்பவந்தர், ஒன்றல்ல; ஆயிரம் நூல்கள் உரைக்கட்டும்; விஸ்வ ரூபப் பெருமை, மேலேறும் வன் மைகள், உஸ்ஸென்ற சத்தங்கள், அஸ்ஸென்ற சத்தங்கள் எவ்வ ளவோ நூலில் எழுதிக் கிடக்கட் டும்; செவ்வைக் கிருபை, செழுங் கருணை, அஞ்சலிக்கை, முத்தி, முழுச்சுவர்க்கம் முற்றும் உரைக் கட்டும்; இத்தனையும் சேரட்டும்; என்ன பயனுண்டாம்? உள்ள பகுத்தறிவுக் கொவ்வாத ஏடு களால் எள்ளை அசைக்க இய லாது" என்று தெள்ளத்தெளி வாகக் கூறி முடிக்கிருள் வஞ்சி. ''ஏ, ஏ, ஏ! நான் இன்றைக்கு ஏளனத்துக் காளானேன்'' என்று கூறிக் குப்பன் தன் தவற் றுக்காக வருந்துகிருன்.

(வளரும்)

கோ., இராமச்சந்திரன், எம்.ஏ.

பல மொழிகளில் தமிழ்ச் சொற்கள்

II

10. சாவக மொழி

சாவகம் (ஜாவா), சுமத்திரா முதலிய தீவுகளில் வாழ்கின்ற மக்களும், நாகபுரியில் வாழும் ஒருவகைச் சாதியினரும் (இனத்தவரும்) திபெத்து நாட்டில் வாழும் மக்களும் வேறுபல இனத்தவர்களும், தமிழ் மொழிச் சொற்கள் பலவற்றைத் தங்களுடைய மொழிகளில் ஏற்றுக் கொண்டுள்ளனர். தீவுகளில் வழங்கப்படும் மொழிகளுள் பல தமிழ்மொழியினின்றும் தோன்றியவைகளே என முடிவுசெய்யும் அளவிற்குத் தமிழ்மொழிச் சொற்களை மிகுதியாக ஏற்றுக் கொண்டிருக்கின்றன. காலஞ்சென்ற ஆசிரியர் மாகறல் கார்த்திகேய முதலியார் அவர்கள், தம்முடைய 'மொழிநூல்' வாயிலாகப் பிறநாடுகளில் பேசப்படும் மொழிகளுள் பல தமிழ்மொழியின் சிதைவுகளாகவே உள்ளன என ஆராய்ச்சி வல்லோர்கூறியவிளக்கத்தையே தம்முடைய கருத்தை வலியுறுத்துவதற்குரிய ஆதாரமாக ஏற்றுக் கொண்டு விளக்கந் தந்துள்ளார். தமிழர்கள் பல நாட்டவர்களோடும் தொடர்பு கொண்டு வாழ்ந்தவராவர் என்பதையே,—

"இனிச் சாவக முதலிய ஐவகைத் தீவிலுள்ள மொழிகளும், இமயமலைச் சார்பில் ஒருவகைச் சாதியார் பேசுகின்ற மொழியும், விந்திய மலையின் கிழக்கு முனையிலுள்ள சூடிய நாகபுரியில் ஒருவகைச் சாதியார் பேசுகின்ற மொழியும், அம்மலையில் அம்பரமென்னுஞ் சிகரத்தில், (Mt. Abu) வசிப்பவர்தம் மொழியும், திபெத்து நாட்டு மொழியும், பெலுஜிஸ்டான் தேசத்தில் தவுத்புத்திர என்னுஞ் சாதியார் பேசுகின்ற மொழியும், ஐரோப்பாக் கண்டத்துள் ஆஸ்டிரியா நாட்டு மொழியும், பிறவும், தமிழின் சிதைவெனச் சரிதவாராய்ச்சியில் வல்ல பெரியோர் கூறுவார். தவுத்புத்திர என்பது திராவிட புத்திர என்பதன் சிதைவு," (பக்கம்—19 "மொழிநூல்"–மாகறல். கார்த்திகேய முதலியார்.) என்னும் விளக்கம் வலியுறுத்துகின்றது.

11. மராட்டி

தமிழ்மொழிச் சொற்களில் பல மராட்டி மொழியிலும் கலந்து காணப்படுகின்றன. தமிழர்கள் ஒரு காலத்தில் இந்தியா முழுவதையும் தம்முடைய இருப்பிடமாகக் கொண்டு வாழ்ந்திருக்க வேண்டும் என இதனால் அறிய முடிகின்றது. வடநாட்டு மொழிகளில் காணப்படும் பல தமிழ் மொழிச் சொற்களைத் தொகுத்து அழகுறத் தேவநேயப்பாவாணர் அவர்கள் ஒரு கட்டுரையின் வாயிலாகக் காட்டியுள்ளார்.

"வடநாடுகளில் இன்றும் தமிழ்ச் சொற்கள் வழங்கி வருகின்றன.

(எ—டு):

தமிழ்	மராட்டி
தாய்	ஆயி
மாமன்	மாம
அலை	ஹலாவ்
குண்டு	குண்ட
வில்லங்கம்	விலக
பேட்டை	பேட்
சிவன்	சிவண்.

தமிழ்	இந்தி
ஆம்	ஹாம்
மாமன்	மாமா
இத்தனை	இத்ந
உம்பர்	உப்பர்
கிழான்	கிஸான்
பூ	பூல்
முத்து	மோத்தீ
மேல்	மே
மாறே	மாரே
முட்டி	முட்டி
வெண்டை	பிண்டீ
உழுந்து	உடத்
நரம்பு	நரம்
சவை	சபா"*

12. மொகஞ்சதரோ மொழி

காலஞ்சென்ற சரித்திரப் பேராசிரியரும் தமிழர்கள் நாகரிகத்தை அறியப் பெரிதும் துணை செய்த சான்றோருமாகிய ஹெராஸ் பாதிரியார் அவர்கள் பல ஆண்டுகள் உழைப்பிற்குப் பிறகு அரிய நூல் ஒன்றினை ("Studies in PROTO—INDO—MEDITERRANEAN CULTURE") வெளியிட்டுவிட்டு மறைந்தார். தமிழ் மொழியின் பழமையையும் தமிழர்களுடைய நாகரிகத்தையும் அறியத் துணை செய்யும் வகையில் பல கட்டுரைகளை எழுதிய பெருமை அவருக்கு உண்டு. மொகஞ்சதரோ முத்திரைகளில் பொறிக்கப்பட்டுள்ள எழுத்துக்களை ஒலிமுறைப்படிப் படித்துப் பார்த்தால் அவை தமிழ்ச் சொற்களாகவே விளங்குவதைக் காணமுடியும் என மிகத் தெளிவாகத் தெரிவித்துச் சென்றார். பாதிரியார் அவர்கள் தெரிவித்துச் சென்ற கருத்தையே தம்முடைய 'தமிழ் பழமையும் புதுமையும்' என்னும் நூலின் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளார், ந. சி. கந்தையா பிள்ளை அவர்கள்.

"ஹெரஸ் பாதிரியார், மொகஞ்சதரோ மொழி தமிழ் என உறுதிப்படுத்தியுள்ளார்.

அவர் இந்திய வரலாற்று இதழில் மொகஞ்சதரோ எழுத்துக்களைப்பற்றிக் கூறியிருப்பது வருமாறு:—

"யான் மொகஞ்சதரோ முத்திரைகளிற் பொறித்துள்ள எழுத்துக்களை ஒலி முறையாக வாசித்து எழுதி வைத்திருந்தேன். யான் வாசித்திருந்தவைகளை யாழ்ப்பாணம் நல்லூர் சுவாமி ஞானப் பிரகாசரிடம் காட்டினேன். அவை செய்யுட்களின் பகுதிகளா யிருப்பதை அறிந்த போது, யான் எய்திய வியப்புக்கு அளவில்லை. இப்பாடல்கள் பல அமைப்பில் எழுதப்பட்டுள்ளன. அவைகளுள் ஐந்து குறள் வெண்பா அடிகளில் இயன்றுள்ளன. ஒன்றைப் படிக்க விரும்பலாம். மொகஞ்சதரோவில் காணப்பட்ட பழம் பொருள்கள் ஒன்றில் காணப்பட்ட எழுத்துக்களின் ஒலி முறையான வாசிப்பு வருமாறு:—

* பக்கம் 357. "புறநானூற்றுச் சொற்பொழிவுகள்" கட்டுரை 'புறநானூற்றுச் சொற்பொழிவு—மொழி நூற் பகுதி'—ஞா. தேவநேயனார்.

2 நண் று று று தூக்கு அடு
கார் முகில் ஊர் வேலி ஒருர்
எடு எட்டு று உயர்எல் இர்
ஆர் இரி பேர் கடவுள்

(இதன் பொருள்) ஓர் ஊர் என்னும் ஆண்டை அடைகின்ற ஓசையிட்டு உயரச் செல்கின்ற ஞாயிற்றின் இரண்டு வழிகளை யுடைய பச்சை (பயிர்) கடவுள் மழை முகில்களும் சத்தமுடைய நாட்டுக்கு வெளியேயுள்ளது"*

மேலும் ஹெராஸ் பாதிரியார் அவர்கள் தாம் எழுதிய கட்டுரை ஒன்றின் வாயிலாக மொகஞ்சதரோ எழுத்துக்களை ஒலிமுறைப் படி வாசித்து அவை தமிழ்ச் சொற்களாகவும் பெயர்களாகவும் காணப்படுகின்றன என்னும் அரிய கருத்தைத் தெரிவித்துள்ளார். ஒலிமுறையைக் கொண்டு வாசித்து எழுதப்பட்ட அத்தகைய சொற்களும் பெயர்களும் எளிமையை முன்னிட்டுத் தமிழ் வரி வடிவிலேயே தரப்பட்டுள்ளன. அவை தமிழின் பழமையையும் மொகஞ்சதரோ நாகரிகம் பண்டைத் தமிழர்களுடைய நாகரிகமே என்பதையும் தெளிவாக அறிந்து கொள்ளப் பெரிதும் துணை செய்கின்றன. அவை வருமாறு:

தமிழ் ஒலி முறைப்படி‡	பாதிரியார் எழுதியுள்ள முறைப்படி o	பொருள்
ஆறிரூர்	Arirur (City of Rivers)	ஆறுகளைக்கொண்ட ஊர்
ஈரூர்	Irur (Double City)	இரண்டு ஊர்கள்
இருபதி(டி)	Irupati (Living Village)	வாழும் ஊர்
கூடுமலை	Kudumale (United Mountains)	சேர்ந்த மலைகள்
குடவூர்	Kudavur (City of the Water Jar)	...
கூடுகோப	Kudu Kopa (united hamlets)	ஒன்றுயுள்ள குடில்கள் (அ) சிற்றூர்கள்.
மூன்மலெ	Munmale (three mountains)	மூன்று மலைகள்.
நால்மலெ	Nalmale (four mountains)	நான்கு மலைகள்.
நண்கோப	Nankopa (friendly hamlet)	நட்புக் குடில்
நண்பதி(டி)	Nanpati (friendly village)	நட்பு ஊர்
தளிர்பதி(டி)	Talirpati (prosperous village)	வளமுடைய ஊர்
உயரேழ்பலி	Uyarelpali (the city of the high sun)	உயர் ஞாயிற்றூர்

---

* பக்கம் 52 "தமிழ் பழமையும் புதுமையும்"-ந. சி. கந்தையா பிள்ளை.

‡ தெளிவிற்காகத் தமிழ் ஒலிமுறைப்படி (என்னால்) எழுதப்பட்டது.

o ஹெராஸ் பாதிரியார் எழுதியுள்ள முறைப்படி வழங்கப்படும் பெயர்கள்.

When new inscriptions will be unearthed, the above scanty information will be complemented and the knowledge of the people and the land of those days will eventually become complete.*

"ஐயா என்னும் சொல் மொகஞ்சதரோ முத்திரைகளிலும் காணப்படுகின்றது. அங்கு அது கோயிற் குருவைக் குறிக்கின்றது. ஹெராஸ் பாதிரியார், "மீனனிர் மாறு அடு இர் ஐயன் செறி தல் தல்வ", என மொகஞ்சதரோ முத்திரையில் பொறிக்கப்பட்டிருத்தலைக் காட்டி அதற்கு 'மீனவரின் பகைவர் மறியற் படுத்தப்பட்ட அரசகுரு' என்று பொருள் எழுதியுள்ளார். 'Minanir Maru adiray-yan sere taltalva' (the object of) the hostility of minnas is the imprisoned illustrious ruler who is a Priest" †

ஆறுயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழ்மொழி வழக்காற்றிலிருந்தது எனத்தக்க ஆதாரங்களுடன் ஆசிரியர் ந. சி. கந்தையா பிள்ளை அவர்கள் தெரிவித்துள்ளார். கருத்து வருமாறு:

"இற்றைக்கு ஆறுயிரம் ஆண்டுகளின் முன், தமிழ்மொழி இயல் இசை நாடகம் என்னும் மூன்று தன்மைகளையும் எய்தி, ஒலிகளை வரிவடிவிற் பொறிக்கும் எழுத்துக்களையும் பெற்று விளங்கிற்று என்பது, மொகஞ்சதரோ அரப்பா புதைபொருள் ஆராய்ச்சிக்குப்பின் நன்கு தெளிவுறுவதாயிற்று. சிலர் 6000—ஆண்டுகள் எனக் கூறுவது கற்பனைக் கூற்று என்று நினைக்கலாம். இற்றைக்கு ஏழாயிரம் ஆண்டுகளின் முன்னரே, இவ்வுலகத்தின் பெரும்பகுதி திருந்திய நாகரிகமும், செவ்விய ஆட்சியுமுடையதாகத் திகழ்ந்ததென ஆராய்ச்சி வல்லார் நிறுவியுள்ளார்கள்." * (Ref: "Human Origins"—S. Laing)

*Reprinted from 'Indian culture' Vol III No. 4, (page 720) 'Mohenjo Daro—The People and the Land'—By H. Heras, S. J.

† The Journal of the University of Bombay—July 1936 Fr. Heras.

13. இப்ரு-கிரேக்க மொழிகள்:

இப்ரு மொழியிலும் சில தமிழ்ச் சொற்கள் காணப்படுகின்றன. அந்த மொழியில் தமிழ்ச்சொற்கள் எவ்வாறு இடம்பெற்றன என்பதைக் காலஞ்சென்ற பேராசிரியர் சேஷஅய்யங்கார் அவர்கள் தம்முடைய 'திராவிட இந்தியா' (Dravidian India) என்னும் நூலின் வாயிலாகத் தெரிவித்து விட்டுச் சென்றுள்ளார். தமிழ் நாட்டுடன் வாணிபத்தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள விழைந்த மேலை நாட்டவர்களுள் ஒரு பிரிவினர், தமிழ்நாட்டினின்றும் ஏற்றுமதி செய்து தங்கள் நாட்டிற்குக் கொண்டு சென்ற பொருள்களின் பெயர்களைத் தங்கள் மொழியில் (அப்படியே) அமைத்துக் கொண்டனர். தமிழ் மொழியினின்றும் ஏற்றுக் கொள்ளப்பட்ட அத்தகைய சொற்களுக்கு ஈடான சொற்கள் அந்த மொழியில் இல்லை என்ற காரணத்தால் தமிழ்மொழிச் சொற்களும் பெயர்களும் ஒலி வடிவ மாற்றத்துடன் ஏற்றுக்கொள்ளப்பட்டன என்பதைத் தெரிந்துகொள்ள முடிகின்றது.

* பக்கம்–7 'தமிழ் பழமையும் புதுமையும்'—ந. சி. கந்தையா பிள்ளை.

கீழ்க்காணும் விளக்கம் மேற் கூறிய உண்மையை வலியுறுத்த வல்லது. விளக்கம்:—

"சந்தனக் கட்டை, தந்தம், குரங்கு, மயில் முதலிய இந்தியப் பொருள்களைக் குறிக்க எபிரேய மொழியில் வழங்கிய பெயர்கள் தமிழுக்குரியன" என்று கால்ட் வெல் காட்டியுள்ளார். திராவிட மொழிகளும் சுமேரிய மொழியும் ஒட்டுச் சொற்களுடையன.

தெல்லோ என்னும் பழைய நகரில் காணப்பட்ட சிற்ப மனித வடிவங்கள் தென்னிந்திய திராவிட மக்களின் வடிவை மிக ஒத்துள்ளன. எச். ஆர். ஹால், சுமேரிய மக்களின் தோற்றம் தென்னிந்திய திராவிட மக்களைப் போல இருந்ததெனக் கூறியுள்ளார். பாபிலோனியாவில் நாகரிகத்தைப் பரப்பியவர்கள் சுமேரியரா, பாபிலோனியரா, என்று வரலாற்றாசிரியர்கள் பலவாறு ஆராய்ச்சி செய்வர். சாலதியர் இந்திய நாட்டினின்றும் சென்றவர்கள் என்பதை இக்கால ஆராய்ச்சியாளர் முடிவு செய்கின்றனர். அவர்கள் செமித்திய உற்பத்தியினர் என்னும் பழைய கோட்பாடு இன்று ஒத்துக் கொள்ளப்படவில்லை. அபினஸ் சந்திரதாஸ், சாலதியர் தென்னிந்தியாவினின்றும் சென்றவர்கள் எனக் கூறியுள்ளார். பெரிய வெள்ளப் பெருக்கைப் பற்றிய கதை தென்னிந்தியாவினின்றும் மேற்கு ஆசியாவுக்குச் சென்றதென்பது எல்லா வகையிலும் ஒத்திருக்கின்றது. (The flood legends of the East-Prof. A. S. Vaidyanatha Ayyer, M.A., L.T.—Journal of the Bombay Historical Society—Vol II), * என்பதாகும்.

கிரேக்க மொழியில் கலந்துள்ள தமிழ்ச் சொற்களாவன:

தமிழ்	கிரேக்கம்
அரிசி	Oryza
இஞ்சி	Zingiber
கருவா (பட்டை)	Karpion

தமிழ்மொழிச் சொற்கள் எப்பொழுது, எவ்வாறு வேற்று மொழியில் சென்று இடம்பெற்றன என்பதைத் தெளிவாக ஆசிரியர் இராத குமுட் முகர்ஜி என்பவர் பின்வருமாறு விளக்கியுள்ளார்:—

"The Egyptian Greeks were the principal carriers of this extensive trade in Indian commodities that sprang up under the ptolemies, and as usual this commercial intercourse has left some marks on their language. Thus the Greek names for rice (Oryza), ginger (Zingiber) and cinnamon (karpion) have a close correspondence with their Tamil equivalents, viz., **arisi**, **inchiver** and **karava** respectively; and this identity of Greek with Tamil words clearly indicates that it was Greek merchants who conveyed these articles and their names to Europe from the Tamil land."†

14. ஆப்கன் மொழி

ஆப்கானிஸ்தானத்தின் ஒரு பகுதியில் 'பர்சுயி' என்னும் மொழி பேசப்படுவதாகவும்,

---

* பக்கம்–62 (குறிப்பு) வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட பழந்தமிழர்—ந. சி. கந்தையா பிள்ளை.

மயிலினைக் குறிக்குந் 'தோகை' என்னுஞ் செந்தமிழ்ச் சொல் எபிரேய மொழியில் 'துகி' என வழங்கப்பட்டது.

† page 121, "Indian Shipping" Radhakumud Mookerji M.A.,

அதிற் காணப்படும் உரையாடல் பகுதி தமிழ் உரையாடல் பகுதியைப் போலவே உள்ளது என்றும், தமிழர்கள் (திராவிடர்) ஒரு காலத்தில் அங்கும் வாழ்ந்தவர்களாதல் வேண்டும் அல்லது தமிழ்மொழிச் சொற்கள் ஆப்கானியர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்க வேண்டும் என்றும், ஆப்கானிஸ்தானத்தைச் சேர்ந்த டாக்டர் அப்துல் சாகீர் (பாராளுமன்றத் தூதுக்குழுத் தலைவர்) என்னும் பெருமகனுர் இந்தியாவிற்கு வந்திருந்தபொழுது தெரிவித்துவிட்டுச் சென்ருர். நாளிதழ் ஒன்று அந்தச் செய்தியைப் பின்வருமாறு தெரிவித்து விட்டது:—

"ஆப்கனில் தமிழ்"

"'தமிழ் மொழியுடன் நெருங்கிய உறவுள்ள ஒரு மொழி ஆப்கானிஸ்தானத்தில் ஒரு பகுதியில் பேசப்படுகிறது. இந்த மொழி 'பர்சுயி' என்று அழைக்கப்படுகிறது. தமிழ் உரையாடலைப் போலவே இது இருக்கிறது, என்று இந்தியாவுக்கு வந்துள்ள ஆப்கானிஸ்தான் பாராளுமன்ற தூதுக்குழுத் தலைவர் டாக்டர் அப்துல் சாகீர் தெரிவித்துள்ளார்.

'ஆப்கனில் தமிழ் மொழி'

டாக்டர் சகீர் அப்பொழுது பேசியதாவது:- "தமிழ் மொழியுடன் நெருங்கிய உறவுள்ள ஒரு வகை மொழி ஆப்கானிஸ்தானத்தின் ஒரு பகுதியில் பேசப்படுகிறது. தமிழ் மொழியின் உரையாடலைப் போலவே இது இருக்கிறது. மத்திய ஆசியாவில் திராவிட மக்கள் ஒரு காலத்தில் வாழ்ந்து வந்தனர் என்பதற்கு இது தலைசிறந்த எடுத்துக்காட்டாகும். ஒரு காலத்தில் தமிழ் மொழி மத்திய ஆசியாவில் பேசப்பட்டு வந்தது என்பதற்கு மேலும் பல சான்றுகள் இருக்கின்றன."*

"ஆப்கானிஸ்தான் என்னும் மகம்மதிய நாட்டில் ஒரு நகருக்கு, தமிழக் என்னும் பெயர் வழங்கி வருவதோடு அந்நகரில் குடியேறிய மகம்மதியரும் தமது பாஷையொடு தமிழையும் கலந்து பேசுகின்ருர்கள் என்பர்."†

15. பாபிலோனிய மொழி

பாபிலோன், பாலஸ்டின் முதலிய நாட்டு மொழிகளில் தமிழ் மொழிச் சொற்கள் கலந்துள்ளன என்றும், பிறமொழிகளில் காணப்படும் 'ஊர்' என்னும் சொல் தமிழ்ச் சொல்லேயாகும் என்றும், மேலை நாடுகளுடன் வாணிபத் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டு சிறப்புற வாழ்ந்த பெருமை தமிழர்களுக்கு உண்டு என்றும், காலஞ்சென்ற ஆங்கிலப் பேராசிரியர் பூர்ணலிங்கம் பிள்ளையவர்கள் தெரிவித்து விட்டுச் சென்ருர்.

"தமிழ் நாட்டிற்கும் பாபிலோன், பாலஸ்டீன் முதலான பிற நாடுகட்கும் வணிகம் நிகழ்ந்த விவரம் ஆராய்ச்சியாளர் குறிப்புகளிற் காணலாம். மயிற்றேகை, தேக்கு என்பவற்றை அரசன் சாலமன் வரலாறு கூறும். முக்கிய பட்டணத்தின் பெயர் 'ஊர்' என்று முடிவதைத் தமிழ்நாட்டில் எங்கும் பார்க்கலாம். உறையூர், நாகூர், ஆக்கூர், பாலூர், கருவூர் முதலான பெயர்கள் தமிழ்நாட்டிலுள. பாபிலோனியாவிலும் இத்தகைய பெயருளது. வணிகப் போக்கு வரவு ஏற்பட்டபின் கிரேக்கர் (யவனர்) கைதேர்ந்த

* 'தமிழ்நாடு' (நாளிதழ்)-1-1-64.

† பக்கம்-16 "மொழி நூல்"-மாகறல். கார்த்திகேய முதலியார்.

தச்சர்களாகவும், மாடமாளிகை அரண்மனைகளில் காவலாளர்களாகவும் ஊழியஞ் செய்து வந்தனரென்பதை 'ஐம்பெரும் வீர வரலாறுகளில் காணலாம்."

பாலெஸ்டீன் தமிழ்க்குடி நாடே.''

(மு. சி. பூர்ணலிங்கம் பிள்ளை)

முடிவு : தமிழர்கள் நெடுங் காலத்திற்கு முன்னரே பிறநாட்டவர்களுடன் தொடர்புகொண்டு வாணிபத்தின் மூலம் பொருளை ஈட்டிய பெருமைக்குரியவர்களாக வாழ்ந்திருந்தனர். வேறு பல நாடுகளில் வழங்கப்படும் பிற மொழிகளிலும் தமிழ்மொழிச் சொற்களும் பெயர்களும் இன்றளவும் விரவிக் காணப்படுகின்றன. தக்க ஆதாரங்களைக் கொண்டு பிற மொழிகளில் வழங்கப்படும் அத்தகைய தமிழ்மொழிச் சொற்களைத் தொகுத்து ஒரு அகராதியைக்கூட உருவாக்கி வெளியிட்டுவிட முடியும். அந்த அளவிற்கு உலக மொழிகள் பலவற்றிலும் தமிழ்மொழிச் சொற்கள் கலந்து காணப்படுகின்றன. தமிழின் பழமையும் தமிழர்களுடைய நாகரிகத்தையும் அறிந்து கொள்ளப் பிற மொழிகளில் காணப்படும் தமிழ்மொழிச் சொற்களே நீருற்றுப் போல அமைந்து பயனளிக்க வல்லவை என்பது உறுதி. தமிழ்மொழிப் பற்றும், தமிழ் இலக்கிய வரலாற்றையும் தமிழர்களுடைய நாகரிகத்தையும் உலகோர் உணரச் செய்ய வேண்டும் என்னும் குன்றுத ஆர்வமும் உடைய சான்றோர்களோ அன்றிக் கற்றுத் தெளிவு பெற்ற இளைஞர்களோ தமிழ் நாட்டின் பெருமையை உலக அரங்கில் உயர்த்தப் பாடுபடும் உண்மைத் தமிழர்களாக எதிர் காலத்தில் கருதப்படுவர்—பாராட்டப் பெறுவர்.

உண்மையான தமிழ் மொழிப் பற்றுடன் ஆசிரியர்கள் மாணவர்களுக்குத் தமிழ் இனத்தவர் நாகரிகம், தமிழ் மொழியின் பழைமை, செழுமை பற்றிய கருத்துக்களை மனங்கொள்ளுமாறு அறிவுறுத்த வேண்டும் எனக் கூறித் தமிழர்களை விழிப்புணர்ச்சி பெறுமாறு தூண்டிவிட்டார், பெருந்தகையாய் விளங்கிய சுவாமி விவேகானந்தர் அவர்கள். அவருடைய அறிவுரை கலங்கரை விளக்கமாக அமைந்து தமிழர்களுக்கு வழிகாட்டும் என்பது உறுதி. விளக்கம் வருமாறு:—

"மிகவும் புராதன நாகரிகமுடைய தமிழர்தம் வாசத்தானமே சென்னை நகரமாகும். தமிழரின் ஒரு பிரிவினர் மிகப் பழைய காலத்தில் யூபிரட்டிஸ் நதிப் பக்கங்களில் தங்களுடைய நாகரீகத்தைப் பரப்பினர். அவர்களுடைய சோதிடம், சமயம், காதல், நீதி, கிரியை முதலியன அசீரிய பாபிலோனிய நாகரிகத்திற்கு அடிப்படையாயிருந்தன. அவர்களுடைய பழங்கதைகள் விவிலிய நூலுக்கு ஆதாரமாக இருந்தன. தமிழரில் இன்னொரு பிரிவினர் மலையாளக்கரை வழியாகச் சென்று நூதனமான எகிப்திய நாகரிகத்தைக் கட்டி எழுப்பினர்கள். ஆரியர் இந்தச் சாதியாருக்குப் பலவகைகளில் கடமைப்பட்டவர்களா யிருக்கின்றனர். தென்னிந்தியாவிலுள்ள பிரமாண்டமான கோயில்கள் தமிழர்களின் கட்டிடம் அமைக்கும் கலைத்திறமையைத் தெரிவிக்கின்றன."

(Quoted in Prabuddha Bharatha Sep. 1921)

புலவர் அறிவொளி

ஆமையும் காதலும்

இழிந்த பிறவியா?

"ஆமை புகுந்த வீடும் அமினா புகுந்த வீடும் உருப்படாது"—என்பது பழமொழி. ஆமையையே சாப்பிடுகிறவர்களும் இருக்கிறார்கள். அவர்கள் ஆமையையே சாப்பிட்டு நல்லபடியாக உயிர் வாழும்போது, அந்த ஆமை அடியெடுத்து வைத்தாலே ஆகாது, என்ற பழமொழி வடிகட்டிய மடமையில் முளைத்தது என்பதைச் சொல்லத் தேவையில்லை.

பொதுவாகவே ஆமையென்ற உயிர்ப்பிறவி மக்களால் இழிவாகப் பேசப்படுகின்றது. ஆமையின் மேலோடு தடிப்பாக இருப்பதால் சுவாசப் பைகள் எளிமையாகச் சுருங்கி விரிய முடிவதில்லை. எனவே ஆமை வேகத்திலும் குறைவாக இருக்கிறது. பாரதிதாசனுக்குக் கூட ஆமையின்மேல் மிகுந்த கோபம் இருந்திருக்கும் போலும்! அதனால் அவர்,

"சோம்பிக்கிடப்பது தீமை-நல்ல
தொண்டு செயாது கிடப்
[பவன் ஆமை"

என்றுகெட்டவனுக்கு ஆமையை உவமையாக்கிப் பாடினார். ஆமை நல்லவர்களுக்கும் உவமையாகும். மெல்லிய தோல் படைத்த மனிதர்களிலேயே சிலருக்கு மாற்றார் உடலைத் தொட்டவுடன் தெரிந்து கொள்ளக் கூடிய உணர்வு மடிந்து விடுகிறது. ஆனால் கடினமான மேலோடு கொண்ட ஆமையின் முதுகை யார் தொட்டாலும் அறிந்து கொள்ளக் கூடிய உணர்வு ஆமைக்குண்டு.

நான்கு கால்களையும் ஒரு தலையையும் ஒரே ஓட்டில் ஆமை அடக்கிக் கொள்வதைப் பார்த்த திருவள்ளுவர் மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐந்து புலன்களையும் அடக்கியாளுகின்ற ஆன்றோருக்கு ஆமையையே உவமையாக்கி,

"ஒருமையுள் ஆமைபோல்
ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து"

என்று கூறினார்.

மூட நம்பிக்கைச் சமுதாயம் ஆமையை ஆகாத பொருளாக்கியது. அதனுடைய வேகக் குறைவால் பகுத்தறிவுவாதிகள் கூட ஆமையை வெறுத்தனர். ஆனால் சங்ககாலச் சான்றோர்கள் ஆமையையும் ஓர் நல்ல பிறவியாகவே மதித்தனர். அதை நல்ல பொருள்களுக்கெல்லாம் உவமையாகக் கூறினர். ஆமையைக் காதலுக்கே உவமையாக்கினர். மங்கலமானதும், ஆயிரங் காலத்துப் பயிர் எனப்படுவதுமாகிய காதலுக்கே உவமையாகக் கூறிய காரணத்தால் அக்காலச் சான்றோர் ஆமையை இழிவானதாகக் கருதவில்லை யென்பது தென்படும். அக்காலத்தில் அறிவியல் கண்கொண்டே எல்லாப் பொருள்களையும் கண்டு வந்தனர். பிற்காலத்தினர் அந்த அறிவுக் கண்ணை யிழந்துவிட்டனர். அதனாலேயே தமிழர் தம் வாழ்வு முன்னேற்றமின்றிப் போய்விட்டது.

ஆமைக் குழப்பம்

"யாவது மறிகிலர்
கழறு வோரே
தாயில் முட்டை
போலஉட் கிடந்து
சாயின் அல்லது
பிறிதெவன் உடைத்தோ
யாமைப் பார்ப்பின்
அன்ன
காமம் காதலர்
கையற விடினே"

—என்ற குறுந் தொகைப் (152) பாட்டில் ஆமைக்கும் காதலுக்கும் ஒப்புமை காட்டப் பட்டிருக்கிறது. பலர் இப்பாட்டிலிருந்து ஆமையைப்பற்றிய தவருன கருத்துகளுக்கு ஆளாகின்றனர். ஆமை தன் முட்டையை எப்படி அடைகாக்கின்றதென்ற உண்மை பலருக்கு விளங்குவதில்லையாகையால் குழப்பமடைகின்றனர். இப்பாட்டின் பொருளை நன்குணர்வது முதல் கடனுகும்.

தலைமகன் ஒருவன் தன் காதலியைத் திருமணம் செய்து கொள்ளாமல் காலம் தாழ்த்திவந்தான். அதனுல் அப்பெண் ஆற்ருமல் வருந்தினுள். அவளுடைய தோழி, "ஏனடி இவ்வாறு ஆற்ருமல் துடிக்கின்ருய்?"—என்று கேட்டுவிட்டாள். அப்படிக் கேட்ட தோழிக்கு அந்தத் தலைவி கூறுவதுதான் மேற்கண்ட பாடலாகும்.

"காதலென்பது ஆமையின் குஞ்சு போன்றதாகும். குஞ்சினை ஆமை கைவிட்டால் எப்படியோ, அப்படிக் காதலரும் என்னைக் கைவிட்டு விட்டால் அடைகாக்கும் தாயில்லாத முட்டை அழுகி அழிவதுபோல நானும் நெஞ்சளவில் நினைத்து வருந்தி அழிவதைத் தவிர வேறுவழியில்லை. எனக்கு அறிவுரை சொல்ல வருபவர்கள் இத்தகைய உண்மையையெல்லாம் அறிவதில்லை"—இதுவே அப்பாட்டின் பொருள். காதலை ஆமைக் குஞ்சிற்கு ஒப்பிட்ட காரணம் என்ன எனின்; ஆமைக்குஞ்சு தாயின் பாதுகாப்பில்லாவிடில் பிறரால் அழிந்துபோகும். அதுபோல காதலர் அருகிலேயே இல்லாது போனுல் காதல் வாழ்வும் துன்பமாகிவிடும். இதுவே காதலுக்கும் ஆமைக்குஞ்சுக்குமுள்ள தொடர்பாகும்.

இதே பாட்டில் அடைகாப்பதற்குத் தாயில்லாத முட்டை அழிவதுபோல என்னும் உவமையும் வந்திருப்பதால் "யாமைப் பார்ப்பின் அன்ன காமம்" என்பதையும் தவருகப் புரிந்து கொள்கின்றனர். அதாவது, ஆமையும் அடைகாக்கும் என்று கருதுகின்றனர். அது தவருகும். மேலே உள்ள தாயில்லாத முட்டை யென்பது தலைமகளின் அழிவிற்கு மட்டும் உவமையாகக் கூறப்பட்டது. ஆமைப் பார்ப்பு என்பது காதலுக்கு உவமையாகச் சொல்லப் பட்டது. இன்னும் சிலர் இதற்கு ஆதரவாக,

இந்தியாவில்: மதங்கள் (1961ல்)

ஹிந்துக்கள்	366,162,693
முஸ்லிம்கள்	46,911,731
கிருஸ்துவர்	10,498,077
சீக்கியர்	7,846,074
பவுத்தர்	3,252,804
ஜைனர்கள்	2,027,246

படித்தவர்

	1951ல்	1961ல்
பொது (100க்கு)	16.6	24
ஆண் ,,	24.9	34.4
பெண் ,,	7.9	12.9

"தீம்பெரும் பொய்கை
யாமை யிளம்பார்ப்புத்
தாய்முகம் நோக்கி
வளர்ந்திசி னுஅங்கு"

—என்ற (44) ஐங்குறு நூற்றுப் பாடலைக் கொண்டு ஆமை, தன் முட்டையைத்தானே அடை காக்குமெனவும், தாயின் முகம் கண்டே முட்டையின் கரு உயிர்க்கும் எனவும் தவருகக் கொண்டுள்ளனர். இவ்விரு பாடல்களிலும் யாமை முட்டையென்று குறிப்பிடப் படவில்லை. 'பார்ப்பு' என்றே குறிக்கப் படுகின்றது. பார்ப்பு என்னும் பெயர் முட்டைப் பருவத்து உயிர்களைக் குறிக்காது. முட்டையினின்றும் வெளிவந்த குஞ்சுகளையே குறிக்கும். எனவே இவ்விரு பாடல்களிலும் முட்டையைப் பற்றிப் பேசப்படவில்லை யென்பதையும், குஞ்சுகளைப்பற்றி மட்டுமே பேசப்படுகின்றன என்பதையும் அறியலாம்.

ஆமை அடை காக்குமா?

ஆமை முட்டைதான் இடுகின்றது. ஆனல் அது அடைகாப்பதில்லை. அதற்கு அடைகாக்கவும் தெரியாது. கோழி முதலியன போல அடைகாக்கும் இயற்கைத் தன்மையும் கிடையாது. பிறகு ஆமை அடைகாப்பது எப்படி?

ஆமை நிறைய சூல் மிகுந்து நீரை விட்டுக் கரைக்கு வரும். கரையில் பிற உயிர்கள் அறியாத வகையில் தனியிடத்தில் தன் கால்களால் சிறிய குழிதோண்டிக்கொண்டு அதில் முட்டையிடும். பிறகு குழியில் மண்ணை நிறைத்துத் தன் கால்களால் தட்டியும் முதுகினுல் மோதியும் அடையாளம் தெரியாமல் புதைத்து விட்டுப் போய் விடும். சூரிய வெப்பத்தால் முட்டையின் கரு வெளிப்படும். இப்படி வெளிப்படுவதற்குப் பல மாதங் கூட ஆகும். கரு வெளிப்பட்டு சிறு குஞ்சுகளானதும் அவைகளை விலங்குகளும் மீன்களும் தின்றுவிடும். ஆமையின் முட்டையை மனிதர்கள்கூட உண்பதுண்டு. இதற்குப் பயந்து கொண்டு தாய் ஆமை அடிக்கடி அந்த இடத்திற்கு வந்து செல்லும். குஞ்சுகள் வெளிப்பட்டதும் அவற்றின் அருகிலிருந்து அவைகளுக்குத் துணை செய்யும். இதுவே ஆமையின் பிறப்பு வரலாருகும். குஞ்சாகிய பிறகு தாயின் முகத்தைக் கண்டவாறே வளர்வதைத் தான் ஐங்குறுநூறும், குறுந்தொகையும் தாய் முகம் கண்டுவளரும் "யாமைப் பார்ப்பு" என்று குறிப்பிடுகின்றன.

பழம்பெருஞ் சான்று

ஆமையின் பிறப்பு வரலாற்றை மேற்கண்டபடியே நம் முன்னோர்கள் அறிந்து கொண்டிருந்தனர் என்பது தெளிவு. அகநானூறு 160-ம் பாடலால் இந்த உண்மையை அறியலாகும்.

"அடும்புகொடி சிதைய
வாங்கிக் கொடுங்கழிக்
குப்பை வெண்மணல்
பக்கம் சேர்த்தி
நிறைச்சூல் யாமை
மறைத்தீன்று புதைத்த
கோட்டுவட் டுருவின்
புலவுநாறு முட்டைப்
பார்ப்பிட னுகும்
அளவைப் பகுவாய்க்
கணவன் ஓம்பும்
கான்லஞ் சேர்ப்பன்."

—என்பதே அந்த அகநானூற்றுப் பாடலாகும்.

நிறைய சூல்மிகுந்த ஆமை யானது, அடும்பங்கொடிகள் சூழ்ந்த சிறு இடத்தில் அக் கொடிகளைச் சிதைத்து இழுத்து, வளைவான உப்பங்கழியில் உள்ள வெள்ளையான மணல் மேட்டுக்கு அருகில், யானைத் தந்தத்தா லான வட்டிலைப் போன்ற தனது புலால் நாறும் முட்டைகளை மறைவாக ஈன்று புதைக்கும். அப்படிப் புதைத்த முட்டைகள் குஞ்சாகும் வரை வளைந்த வரியை யுடைய கணவனாகிய ஆமை காத்துவரும் — இதுவே இந்த அகநானூற்றுப் பாடலுக்குப் பொருள். இதிலிருந்து ஆமை அடைகாக்காமல் முட்டைகளைப் புதைக்கும் என்ற உண்மையைக் காண்க. எனவே இத்தகைய அறிவியல் உண்மை பழம் பெரும் பாட்டில் காணப்படுவதால் அக் காலச் சான்றோர்கட்கு இதுபற் றிக் குழப்பமில்லை யென்பதும் தெளிவாகும்.

அகநானூற்றுக்கு உரை யெழுதவந்த புலமைமிக்க நா. மு. வே. அவர்களும், கரந்தைக் கவியரசு அவர்களும் அகநா னூறு 160 ஆம் பாடலுக்கு உரை யெழுதும் போது மேலே காட்டப் பட்ட குறுந்தொகை ஐங்குறு நூறு பாடல்களை, அகநானூற் றுப் பாடலுக்கு ஒப்புமைகாட்டி எழுதியுள்ளனர். இந்த இரு வகைப் பாடல்களுக்குள் சிறிதும் தொடர்பில்லை. அகநானூற்றில் ஆமையின் முட்டையைப்பற்றி மட்டுமே பேசப்படுகின்றது. குறுந்தொகை, ஐங்குறுநூறு இரண்டிலும் ஆமையின் குஞ்சு களைப் பற்றியே பேசப் படுகின் றன. எனவே இவ்விருவகைப் பாடல்களையும் ஒன்று படுத்து தல் பொருந்தாது. இனியேனும் இந்த ஒப்புமை கொண்டு ஆமை யின் பிறப்பு வரலாற்றைத் தவ றாகக் கருதாமலிருக்க வேண்டும்.

ஜப்பானியர்

"ஜப்பானில் படிக்காத பெண் களோ, ஆண்களோ இல்லை. கட்டாய இலவசக் கல்வி நடை முறையில் இருப்பதால், அனை வரும் படித்தவராகவே இருக் கின்றனர். இவர்கள் துவக்கப் பள்ளியில் படிக்கும்போதே நக ரத் தூய்மை, ஒப்புரவொழுகல் போன்ற வாழ்க்கைப் பொறுப் புக்களும் கடமைகளும் கற்பிக் கப்படுகின்றனர். இந்நாட்டில் உயர்வு–தாழ்வு, சாதி–வேறு பாடு முதலியவை இல்லை. எவ ரும் தமக்கு விருப்பமான எந்த வேலையையும் செய்யலாம். ஜப்பானியர் அறிவுக்குத் தான் மதிப்புக் கொடுக்கின்றனர்."

—"நான் கண்ட ஜப்பான்"
சு. ரா.

நமது முன்னோர் இத்தகைய அரிய செய்திகளை நுணுக்கமாக அறிந்து, காதலொடு உவமைப் படுத்தி, எளிமையாகப் புரியும் படியும், மறவாமல் இருக்கும்படி யும் பாடிச் சென்றுள்ளனர். ஆமையின் பிறப்பைப் பாடிய அந்த அகநானூற்றுப் பாடல் அத்துடன் இனிய காதல் செய்தி களையும் ஒன்று படுத்தித் தரு வதை தனியே கற்றுணர வேண் டும்.

அறிவியல் நுணுக்கங்களைப் பொது வாழ்வோடு பொருத்தி அறிவூட்டுகின்ற நமது முன் னோர்களின் முறையை இக்கால இலக்கியப் படைப்பாளர்கள் கற்று அவ்வழியில் ஒழுக வேண் டும். அறிவியலைப் பொது வாழ் வோடு ஒன்று படுத்தியதால் மேலைநாடுகள் முன்னேறியிருப் பதை ஓர் படிப்பினையாக நம்மவர் கைக்கொள்ளும் நாளே நாம் கடைத்தேறும் நாள். ★

திருமதி T. S. குஞ்சிதம் குருசாமி, B.A., L.T.

நான் கோயிலை வெறுப்பதேன்?

"கோயிலாவ தேதடா குளங் களாவ தேதடா?
கோயிலுங் குளங்களும் கும்பிடுங் குலாமரே"

என்று சிவவாக்கியர் கேட்பாரே யானால், அது யோக நிலையில் கேட்கப்படும் உயர்ந்த ஞானியின் கேள்வி என்று சொல்லி விடுகின்றனர். ஆனாலும் தமிழ் இலக்கியச் சோலையிலே இதுவும் ஒரு பழந் தரும் மரம் என்பதை மறக்க முடியவில்லை.

இனிப்பும் சத்தும் உடையது இம் மரத்தின் பழம் என்பதைக் கூறுகிறான், தற்செயலாக இப்பழத்தைத் தின்று பலனையுணர்ந்த ஒருவன். ஆனால் சுயநலம், ஏமாற்றம், வஞ்சகம் ஆகிய பிறவிக் குணங்கள் என்ன கூறுகின்றன?

"இந்தப் பழம் உனக்கு ஏற்றதல்ல; உடலுக்கு ஒவ்வாதது. உனக்கு மட்டுமா? ஒருவருக்குமே இது ஆகாது; முதலிலே ருசிக்கலாம், ஆனால் இறுதியில் இரத்தத்தையே சுண்டச் செய்துவிடும்."

சிவவாக்கியர் என் கருத்துக்குத் துணை செய்வார் என்று நான் நம்பவில்லை. ஆனால் அவர் அக்காலத்தில் அடைந்த மோன நிலையை இக்காலத்தில் அடையக் கூடிய ஞானிகள் பல்லாயிரக் கணக்கில் பெருகிவிட்டனர் என்பதை மட்டும் குறிப்பிடவேண்டும். இது பழங்காலத்தின் சிறுமையல்ல. இக்காலத்தின் பெருமை. மணிக்கு 3 மைலுக்கு மேல் துரிதமாகச் செல்ல முடியாத வாகனங்கள், அக்காலத்தில். அதாவது, சிவவாக்கியர் காலத்தில். ஆனால் மணிக்கு 500 மைலுக்கு மேல் வேகமாகச் செல்லக் கூடிய வாகனங்கள் இக்காலத்தில், அதாவது சிந்தனைக்காரர் காலத்தில். எனவே, இவ்விஷயங்களில் ஞான நிலை, மோன நிலை, வேக நிலை—எதுவுமில்லை. எல்லாம் 'கால நிலை' தான்.

ஃ ஃ ஃ

நான் பிறப்பிலேயே கோயிலை வெறுத்தவளல்ல. கோயில் இல்லாத ஊரில் குடியிருந்தவளுமல்ல. இளமையில் எல்லோரையும் போலவே, கோயில் பித்துப் பிடித்திருந்தவள்தான். எனவே கடவுள் பக்தியும் கொண்டிருந்தேன் என்பதைக் கூற வேண்டியதில்லையல்லவா? அப்படியானால் கடவுள் பக்தியும் கோயில் பித்தும் ஒன்றுதானா, எனக் கேட்பீர்கள். ஒன்றுதான்; அதுவும் இந்து மதத்தில் ஒன்றாகத்தான் கருதப்பட்டு வருகிறது. இது சரிதானா என்பதை ஆராய்ந்து பார்க்க இங்கு இடமில்லை.

கோயிலுக்குள் பக்தியிருக்கும், தியானமிருக்கும், மவுனமிருக்கும் என்று வேறு மதத்தினர் எதிர்பார்ப்பார்களே. சே! அதெல்லாம் நமக்கு எதற்கு? ஏதோ ஆசையினாலோ, அச்சத்தினாலோ கடவுள் என்ற தத்துவத்தை நம்புகிறவர்களுக்கல்லவா தியானமோ, பக்தியோ, மவுனமோ வேண்டும்? கடவுள் என்ற தத்துவத்தைக்

கூறி அதை ஒரு முதலீடாக வைத்து வியாபாரம் செய்யப் படும் ஒரு மதத்தில் தியானத்திற் கும் பக்திக்கும் இடமேது?

நம் கோயில்களில் கொட்டு முழக்குண்டு, கோமளவல்லி களின் நாட்டியமுண்டு. எதற் காக? விளம்பரப்படுத்த கொட்டு முழக்கு; ஆண்களை அழைக்க நாட்டியம். பரமனை நினைந்து பரவசமடைவதற்கு இவையிரண் டும் துணை செய்ய முடியுமா? ஏகாந்த நிலையில் கண்மூடி மெவுனி யாக உட்கார்ந்து நாசி முனையில் பார்வையை வைத்திருக்கும் போதே நானூறு ரூபாய் போட்டு வாங்கிய காளை மாடு நினைப்பும், நாலாயிரத்தில் வாங்கிய மோட் டார் கார் பழுதாயிருக்கும் நினைப் பும் வரும்போது,கொட்டு முழக்கு மத்தியில் பரமன் நினைப்பா வரும்?

கோயிலின் வெளி மண்டபத் தில்தான் இந்தக் காட்சியென் ருல், 'பரமனின்' சின்னமாக விளங்கும் சிலைகள் உள்ள இடமோ, கண் காட்சிசாலைதான்! சிலைக்கு வித விதமான நகைகள்! ஆனால்பணம்படைத்த சிலைகளுக் குத்தான்.பணம்படைத்தமனிதர் களைப் போலவே! நகைகள் மட் டுமா? பட்டுப் பட்டாடைகள் கூட. பழவகைகளால் நாள் தோறும் அபிஷேகம். சில சிலை களுக்கு குடங் குடமாக பால் அபிஷேகம். பால் என்பதையே பார்த்திராத பாலகர்கள் பல கோடியுள்ள இந்நாட்டில் இந்து மதக் கடவுளுக்கு (அல்ல, சிலை களுக்கு) ஏராளமான பால். அதையாவது அவைகள் குடித் தாலும் பரவாயில்லையே! தலையில் அல்லவா ஊற்றுகிருர்கள்?

குளியல், உடை, நகை-இவை மட்டுமா? அடுத்தபடியாக ஆறு வேளை அறு சுவை உண்டி. அக் கார அடிசில் உள்பட.

உண்டியும் உடையும் இருந் தால் மட்டும் போதுமா? உறக் கத்திற்குப் பள்ளியறையும் கூட இருக்கிறது.

"உண்டதும் உறங்கினது மன்றி வேறே ஒன்றும் காணி லேன்," என்று நந்தனர் சொன் னது போலவே நம் கடவுளர் களும் சொல்லிக் கதறும், வாய் மட்டும் இருந்தால்!

காலா காலங்களில் வெளியே சென்று உலவ வேண்டாமா? தொந்தி பெருத்த செல்வவான் கள் உண்ட உணவு ஜீரணிக்க உலவப் போவார்கள். கால் நடையில் அல்ல, மோட்டார் காரில். அதைப்போலவே இந்து மதக் கடவுளர்களும் தேர் மீது அமர்ந்தோ, காளை, மயில், கரு டன், பாம்பு ஆகிய உருவங்கள் மீது அமர்ந்தோ, உலவச் செல் கின்றன.

° ° °

மனிதன் வாழ்க்கையில் எத் தனை ஏற்றத் தாழ்வுகளும் முரண் பாடுகளும், சுய நலமும் காணப் படுகின்றனவோ - அத்தனையும் இக்கடவுளர்கள் வாழ்விலும் காணப்படுகின்றன. ஏழைக் கட வுள்கள்,செல்வம் கொழிக்கும்கட வுள்கள், சுயநலக் கடவுள்கள், விளையாடும் கடவுள்கள், வேடிக்கைக் கடவுள்கள், ஒய்யா ரக் கடவுள்கள், டம்பாச்சாரிக் கடவுள்கள்-இத்தனையும் இருக் கின்றன!

இவைகளையாவது நேரில் சென்று கண்டு, குறைகளைக் கூறி, அவைகளைக் களைவதற்கு காலம் குறிப்பிட்டு வரலாமே என்ருல், இந்த வேலைக்கு தரகர் கள்! கிழக்கிந்தியக் கம்பெனியார் இந்தியாவில் ஆட்சி புரிய ஆரம் பித்தபோது! இந்துக்களுக்கும் கம்பெனியாருக்கும் இடையே எந்தக் கூட்டத்தார் தரகர்களாக

இருந்து, இங்கிலீஷ் மொழி பயின்று மொழி பெயர்ப்பு வேலை செய்தார்களோ, அவர்களே இன்று கடவுளர்களுக்கும் பாமரர்களுக்குமிடையே தரகு வேலை செய்கின்றனர்! உயிரிழந்த மொழியில், நாடிழந்த தமிழர்கள் அறிமுகப் படுத்தப்படுகின்றனர், குடியேறிய கூட்டத்தாரால்! இந்த இழி நிலையைப் போக்க எல்லாத் தமிழர்களும் ஒன்று கூடிப் புரட்சி செய்யாமலிருப்பது இவ்வுலக அதிசயங்களில் ஒன்று.

"வாயிலிட்டுத் தொப்பை வளர்க்கும் சதிக் கிடங்கைக் கோயில் என்று காசு தரும் கொள்கை''யைத் தமிழர்கள் காரி உமிழ வேண்டும் என்பது புரட்சிக் கவிஞரின் கட்டளை.

இந்துக் கோயில்கள் சதிக்கிடங்குகள் மட்டுமா? ஆரியக் கோட்டைகள்; அநீதியின் இருப்பிடங்கள்; அக்கிரமத்தின் பாசறைகள்; தமிழர் நல்வாழ்வுக்குக் கல்லறைகள்.

இவைகளை வெறுத்திருப்பவர் இன்று பல்லாயிரத்திற்குப் பெருகிவிட்டனர். பெருகிக் கொண்டேயிருக்கின்றனர்.

"நட்ட கல்லை தெய்வமென்று
நாலுபுட்பஞ் சாத்தியே
சுற்றிவந்து மொணமொணென்று
சொல்லு மந்திரம் ஏதடா?''

என்று கேட்கும் கேள்விக்குத் தமிழர் பதில் கூறக் கடமைப்பட்டிருக்கின்றனர்.

இந்த மாதிரிக் கோயிலை நான் வெறுப்பதில் ஆச்சரியமென்ன?

(''*தமிழ்முரசு*'' *ஆண்டு மலர்*–1946)

சாணியில் சாமி!

''சாமி பொய் என்றால் சாணத்தைப் பார்!" என்று நமது பாட்டிகள் ஒரு பழமொழி சொல்வதுண்டு. அதன் கருத்து, சாதாரண சாணம் 2-3 நாட்களில் புழுத்துவிடக் கூடியதாயிருந்தும் 'சாமி'-யாக உருட்டி வைத்த சாணத்தில் எத்தனை நாள் ஆனாலும் புழுக்கள் தோன்றுவதே கிடையாது. ஆகவே அது சாமியினுடைய சக்தியல்லவா, என்பது ஆகும்.

அது சாமியுடைய சக்தியா, அல்லது சாணத்தினுடைய சக்தியா என்பது கஷ்டமான பிரச்னைதான்! இருந்தாலும், நன்றாய்ப் பிசைந்து சுத்தப்படுத்தி தண்ணீரில்லாமல் பிழியப்பட்ட சாணத்தை வெளிச்சம் காற்றுப் படும்படியான இடத்தில் சாம்பிராணிப் புகை முதலியன படும்படி வைத்தால் அதன் பெயர் ''சாமி'' என்பதற்குப் பதிலாக ''புடலங்காய்'' என்று வைத்தாலும் புழுப் புழுக்காது. அதுவுமின்றி, அவசரத்தில் நன்றாய்ப் பக்குவப்படுத்தாமல் உருட்டி வைக்கப்பட்ட 'சாமி'களில் சில, அருகம்புல்'மேலிருக்க, அதனடியில் புழுக்களும் நிறைந்திருக்கப் பார்த்திருக்கிறோம்!''

—சா. கு.-''புதுவை முரசு" 1931

பண்டைத் தமிழக நாணயங்கள்

(எஸ். ஆறுமுகம்)

I

[நாட்டின் வரலாறு எழுதுவதற்கு நாணயங்களும் சிறு உதவியாயுள்ளன. பண்டைத் தமிழ் நாட்டு நாணயங்களைச் சேகரித்து அவை மூலம் சிறு வரலாற்றுப் பகுதியையும் தருகிறார், இத்துறையில் தீவிரமாக ஆராய்ந்து வரும் இக்கட்டுரையாளர்.]

தமிழ் நாட்டின் அமைப்பு

ஆதியில் தமிழ்நாடு வடக்கே இமயமலையையும் கிழக்கே கடலையும் தெற்கே தற்போதைய குமரிமுனைக்குத் தென்பால் அமைந்த குமரிநாடு, பெருவளநாடு, ஒளிநாடுகளின் தெற்கே ஓடிய கன்னியாற்றையும், மேற்கே கடலையும் எல்லையாகக் கொண்டிருந்தது. (புறநானூறு 6, 17 பாடல்கள்)

தமிழ் நாடானது இமயம் முதல் விந்தம் வரை வடநாடு என்றும், விந்தம் முதல் குமரி வரை தென்னாடு (தெக்கணம்) என்றும், குமரி முதல் உலகநடு வரை (பூமத்திய ரேகை) குமரிநாடு என்றும், உலகநடு வரை முதல் தென் அயனவரை முடிய பெருவளநாடு என்றும், தென் அயனவரை முதல் தென் பாலி முகம் வரை ஒளிநாடு என்றும் பிரிக்கப்பட்டிருந்தது.

மொழித் தோற்றம்

ஆதியில் மனிதர்கள் கொஞ்ச காலம் பேச்சில்லாமல் கை, கால், கண் முதலிய உறுப்புக்களின் அசைவைக் கொண்டு ஒருவருக்கொருவர் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்து வந்தார்கள். பின் மக்களின் நா திறம்படப்பட பறவைகள் ஒலிப்பதையும் விலங்குகள் கத்துவதையும் கேட்டுக்கேட்டு நடிப்புடன் தங்கள் கருத்துக்களை ஒலிசெய்து தெரிவிப்பாராயினர்.

பின், காலஞ் செல்லச் செல்ல அவ்வொலிகள் பேச்சாக மாறி, பேச்சுத் திறம் முதிரவே மொழியாயிற்று. முதலில் நாடகத் தமிழாயிருந்து இசைத் தமிழாகிப்பின் இயற்றமிழாயிற்று.

இயற்றமிழ் ஏற்பட்டு பேச்சு வழக்கில் மாத்திரம் சிலகாலம் இருந்து பின் அறிவர் கூடி எழுத்துக்களை உண்டாக்கினர். அவ்வெழுத்துக்கள் முதன் முதல் உருவ எழுத்துக்களாயிருந்தன. அவை இப்போது மொகஞ்சதாரோ அல்லது மறைந்ததரை என்னும் இடத்தில் அகப்படும் முத்திரைகளில் உள்ள உருவ எழுத்துக்களைப் போன்றவை. அவ்வுருவ எழுத்துக் காலத்திலேயே தமிழ்மொழியில் முத்தமிழும் சிறப்பாக இருந்ததென்பது மொகஞ்சதாரோவில் கண்டெடுக்கப் பட்டுள்ள ஓவியங்கள்,

கட்டடங்கள், அணிகள், விளையாட்டுக் கருவிகள், மாளிகை அமைப்புக்கள், கடவுளரின் உருவங்கள் முதலியவற்றால் அறியக் கிடக்கின்றது.

பிறகு ஒரு காலத்தில் ஏற்பட்ட நில நடுக்கத்தினால் மறைந்த தரையும், அதைச் சூழ்ந்த இடங்களும் மண்மேடிடவே, வெகு காலத்திற்குப் பிறகு மறுபடியும் புது நகர்கள் அமைந்தன. அப்போதுதான் தமிழ் மொழிக்கு கோல் எழுத்துக்கள் ஏற்பட்டன. அக்காலத்தில்தான் பாலி, பஞ்சாபி, மராட்டி முதலிய மொழிகள் தமிழினின்றும் பிரிந்தன.

சிந்து நதி தீரத்தில் குடியேறிய ஆரியர்கள் தமிழர்களிடையே ஒற்றுமை குலையச் செய்துசில தமிழரசர்களைச்சேர்த்துக்கொண்டு சிந்து நாட்டையும் கங்கை நாட்டையும் கைப்பற்றி "இந்துஸ்தானம்" எனப் பெயரிட்டு மற்றையத் தமிழர்களை விந்திய மலைக்குத் தெற்கே விரட்டி விட்டார்கள்.

தெக்கணம் வந்த தமிழர்கள் பல ஆண்டுகளுக்குப் பின் மொழியைச் சீர்திருத்தி, மொழிக்கு கோல் எழுத்துக்களை நீக்கி வட்டெழுத்துக்களை ஏற்படுத்தினர். இந்நிலையில்தான் தமிழினின்றும் தெலுங்கு மொழியும் கன்னட மொழியும் பிரிந்தன.

பின்னர் பல காலம் கழித்து தமிழர்கள் மொழியை சீர்திருத்தி சதுர எழுத்துக்களை அமைத்தார்கள். நாம் இப்போது எழுதும் எழுத்துக்கள் அந்த எழுத்துக்கள்தான். பின்னர் சொற்செட்டு, ஒலிச் செட்டு, முதலிய நயங்கள் உடையதாகவும் உச்சரிப்புக்குத் தகுந்த எழுத்து வரிசைகளை உடையதாகவும் தமிழ் மொழியை செப்பம் செய்து செந்தமிழ் எனப் பெயரிட்டனர்.

இருமுறை கடற்கோள்கள் ஏற்பட்டமையால் "மனித குலத்தின் தொட்டில்" எனப் பெயர் பெற்ற தமிழகம் இந்து மகா சமுத்திரத்தினால் சூழப்பட்டு தெற்கே குமரி முனையும் வடக்கே வேங்கடமும் மேற்கிலும் கிழக்கிலும் கடலால் சூழப்பட்டு மூன்று இயற்கையான நாடுகள் ஏற்பட்டு, மேற்கே சேரர்களாலும், தெற்கே பாண்டியர்களாலும், கிழக்கே சோழர்களாலும் ஆளப்பட்டு வந்தது.

சங்க காலம்

சங்க காலம் என்பது பண்டையத் தமிழ் நாட்டின் பெரும் பகுதியாகிய பாண்டிய நாட்டில் பாண்டியர்கள் முதல், இடை, கடை என்னும் முச்சங்கங்களை நிறுவி வளர்த்து வந்த காலமாகும்.

தலைச்சங்ககாலத்தில் தற்போதைய குமரி முனையிலிருந்து சுமார் 700 காததூரம்வரை தெற்கே ஒரே நிலப்பரப்பாக இருந்தது. அது பண்டைய பாண்டிய நாட்டின் பெரும்பகுதியாகும். அதன் வடபாகத்தில் குமரி என்னும் ஆறும், தென்பாகத்தில் பஃறுளி என்னும் ஆறும் ஓடிக்கொண்டிருந்தன. இதற்கு தெற்கெல்லையாக குமரி மலை அமைந்திருந்தது. அவற்றுக் கிடையில் பல ஆறுகளும் நகரங்களும் இருந்தன.

பஃறுளியாற்றங்கரையில் மதுரை என்னும் நகரம் பாண்டியர் தலைநகரமாயிருந்தது. அந்நகரில்தான் தலைச்சங்கம் ஏற்படுத்தப்பட்டது. அதன் உறுப்பினரால் இயற்றப்பெற்ற நூல்கள் பரிபாடல், முதுநாரை, முதுகுருகு, களரியாவிரை முதலியன. தலைச்சங்கத்தை நடத்திய பாண்டிய அரசர் காய்ச்சினவழுதி முதலாக கடுங்கோன் ஈருக எண்

பத் தொன்பதின்மர் (89-பேர்) ஆவர். இச்சங்கம் 4440 ஆண்டுகள் நடைபெற்று தமிழ் ஆராய்ந்தது. முதற் கடற்கோளால் அழிக்கப்பட்டது தென் மதுரையாகும். கோல் எழுத்துக்களே இத்தலைச் சங்க காலத்தில் உபயோகிக்கப் பட்டன.

இடைச்சங்கம்: பாண்டிய நாட்டின் பெரும் பகுதியைக் கடல் கொண்ட பின் சயமா கீர்த்தி யென்னும் "நிலந்தரு திருவிற் பாண்டியன்" குமரியாற்றிற்கும் பொருநையாற்றிற்கும் இடைப்பட்ட நிலப்பரப்பில் கபாடபுரம் (அலைவாய்) என்னும் துறை நகரை தலைநகராக்கி அதில் இடைச்சங்கத்தை நிறுவினான். இச்சங்கத்தில் அகத்தியரும் அவருடைய மாணவர்களும் இருந்தனர். தொல்காப்பியர் இயற்றிய இயற்றமிழ் இலக்கணம் அச்சங்கத்தில் அரங்கேற்றப் பட்டது. சங்க உறுப்பினரால் கலி, குருகு, வெண்டாளி, வியாழமாலையகவல், முதலிய நூற்கள் இயற்றப்பட்டன. இச்சங்கத்தை நிறுவி வளர்த்து வந்தவர் வெண்டேர்ச் செழியன் முதலாக முடத்திருமாறன் ஈருக ஐம்பத் தொன்பதின்மர் (59 பேர்) ஆவர். இவர்கள் சங்கமிருந்து தமிழ் ஆராய்ந்தது இரண்டாவது கடற்கோளால் கொள்ளப்பட்ட கபாடபுரமாகும். இச்சங்கம் சுமார் 3700 ஆண்டுகள் நடைபெற்று வந்ததெனலாம். இக்காலத்தில் வட்டெழுத்துக்களே உபயோகிக்கப்பட்டன. பின்னர் தொல்காப்பியர் சதுர எழுத்துக் காலத்தைத் துவக்கினார்.

கடைச் சங்கம்: அதன் பின் இன்றைய மதுரைக்கு கிழக்கிலுள்ள மணலூர் பாண்டியர் தலைநகரமாயிற்று. சிறிது காலத்திற்குப் பின் வைகை நதிக் கரையில் மதுரை நிர்மாணிக்கப் பட்டது. அதில் கடைச்சங்கம் நிறுவப்பட்டது. அதன் உறுப்பினரால் இயற்றப் பெற்றவை நற்றிணை, குருந்தொகை, பரிபாடல், அகநானூறு, புறநானூறு, கூத்து வரி, பேரிசை, சிற்றிசை முதலிய நூல்களாகும். கடைச்சங்கத்தை நிறுவி வளர்த்தவர் கடலால் கொள்ளப் பட்டு போந்திருந்த முடத்திருமாறன் முதல் உக்கிரப் பெருவழுதி ஈருக நாற்பத் தொன்பதின்மர் (49 பேர்) ஆவர். இவர் கடைச்சங்கத்தை நிறுவியதையும் பராந்தக பாண்டியனுடைய செப்பேடுகள் குறிப்பிடுகின்றன. இச்சங்கம் சுமார் 1850 ஆண்டுகள் (கி பி. இரண்டாம் நூற்றாண்டு இறுதிவரை) நடைபெற்று தமிழ் ஆராய்ந்தது மதுரையாகும். தொல்காப்பியர் துவக்கிய சதுர எழுத்துக்களில் சில சீர்திருத்தங்கள் கடைச்சங்க

அடுத்த உலகம்?

"அற்புதமான இந்த தேசத்தைப் படைத்து விட்டு, அதிலே அழகாகவும் குடியிருந்து வாழ முடியாமல், அடுத்த உலகத்தையும் முக்தியையும் பற்றிப் பிதற்றிக் கொண்டிருந்தால் இந்த நாடு உருப்படுமா? குடியில்லாத வீடு குட்டிச் சுவராகும் என்பது அனுபவ உண்மை. அதே மாதிரித் தான் தேசமும். ஒரு தேசத்தில் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்தும் அதில் நிலையற்றவர்கள் போல தங்களை எண்ணிக் கொண்டால், அந்த தேசம், போற்றிக் காப்பாற்றுபவர்கள் இல்லாமல், பாழாகப் போவதற்கு யாரைப் போய்க் கேட்க வேண்டும்?"

—"கோதைத்தீவு"; வ. ரா.

காலத்தில் செய்யப்பட்டு அதுவே தற்போது செந்தமிழாக வழங்கி வருகிறது.

முச்சங்கங்களும் ஏறத்தாழ 9990 ஆண்டுகள் நடைபெற்று வந்தனவென்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

முப்பெரும் வேந்தர்கள்

சேரர்கள் வஞ்சி, கரூர், கொடுங்கோளூர் முதலிய நகர்களைப் பற்பல காலங்களில் தலைநகரங்களாகக் கொண்டும் முசிரியைத் துறைமுகமாகக் கொண்டும் ஆண்டு வந்தனர்.

சோழர்கள் சீர்காழி, திருவாரூர், உறையூர், பழையாறை, தஞ்சை, கங்கைகொண்ட சோழபுரம் (செயங் கொண்ட சோழபுரம்) முதலிய நகரங்களை பற்பல காலங்களில் தலைநகரங்களாகவும் பூம்புகாரை (காவிரிப்பூம் பட்டினம்) துறைமுகப் பட்டினமாகவும் கொண்டு ஆண்டு வந்தனர்.

பாண்டியர்கள் தென்மதுரை (நான்மாடக்கூடல்), கபாடபுரம், மணலூர், (இன்றைய) மதுரை முதலிய நகரங்களைப் பற்பல காலங்களில் தலைநகர்களாகக் கொண்டும் கொற்கையைத் துறைமுகமாகக் கொண்டும் ஆண்டு வந்தனர்.

இம் மூவேந்தர்களுக்கும் வில், கயல், புலி ஆகிய மூன்றும் இலச்சினைகளாக அமைந்திருந்தன. தமிழகத்தின் தொடர்ச்சியான வரலாறு ஆராய்ந்து கூற இயலாத நிலை இருப்பினும் கடைச் சங்க காலம் முதல் இலக்கியங்கள், செப்பேடுகள், கல்வெட்டுக்கள், நாணயங்கள் மூலமாக தமிழகத்தின் வரலாற்றை ஒருவாறு அறிய முடிகிறது.

பண்டைத் தமிழக நாணயங்கள்

உலக நாகரீக நாடுகளில் முற்பட்ட தமிழகத்தில் கி. மு. 5000 ஆண்டுகட்கு முன்னரே வியாபாரத்தில் தாமிரமும், வெள்ளியும், பொன்னும் பண்டமாற்றுக்குப் பதிலாக உபயோகிக்கப் பட்டதாகத் தெரிகிறது. "முத்திரை'' என்ற நாணயவகை பழங் காலத்திலிருந்தது. ரிக் வேத காலத்தில் கூட ''நிஷ்கம்'' ''சதமன்" ''ஸ்வர்ணம்'' ''பதம்" ''கிருஷ்ணலம்" என்ற ஐந்து வகை முத்திரை பொன் நாணயங்களும் வழங்கி வந்தன. பின்னர் "கர்ஷபணம்" ''நிக்கர்" "காகனிகம்'' ''மாஷா'' "அர்த்த மாஷா" "ஸவர்ண மாஷா" முதலிய நாணயங்கள் வழக்கிலிருந்தன. மாடு, சூரியன், மரம், சக்கரம், பிறைச் சந்திரன் போன்ற மத, புராண, வான சாத்திர சம்பந்தமான துளைப்பு சித்திரங்கள் உள்ள (Punch marked) நாணயங்களும், புடைப்புச் சித்திரங்கள் உள்ள இருவட்ட வடிவமான இடையில் சிறிய உலோகத்தால் ஒரே நாணயமாக சேர்த்து வார்க்கப்பட்ட நாணயங்களும் (Cast coins) வழங்கி வந்தன. இந்நிலையில் தமிழக நாணயங்கள் பற்றி இங்கு ஆராய்வோம்.

சேரர் கால நாணயங்கள்

இதுவரை தொல்பொருள் ஆராய்ச்சியினரிடமோ, இந்திய பழம் பொருள் களஞ்சியங்களிலோ, மற்றும் தனிப்பட்டோரிடமோ கிடைத்திராத கடைச் சங்ககால சேரர் நாணயம் ஒன்று என்னிடம் உள்ளது இங்கு குறிப்பிடத் தக்கதாகும். அந்நாணயம் சமசதுர வடிவமாக அமைந்துள்ளது. அதன் ஒரு புறம் நிற்கின்ற

கடைச் சங்ககால நாணயங்கள்



1, சேர நாணயம்

2 & 3 சோழ நாணயங்கள்

4 முதல் 10 வரை பாண்டிய நாணயங்கள்

(Copy right Reserved)

யானையும் யானையின் பின் பக்கத்தில் எதிரெதிர் நோக்கி நான்கு மீன்களும் யானையின் முன்புறம் கொடி மரமும் யானையின் மேல் புறம் அரசனது கொடியும் அமைந்துள்ளது. யானைக்குக் கீழே தென்னை மரம் ஒன்று கிடந்த நிலையில் பொறிக்கப் பட்டுள்ளது. நாணயத்தின் மறுபுறம் வில் அம்பும் அங்குசமும் பொறிக்கப்பட்டுள்ளது. இது கடைச் சங்க கால சேர நாணயம் என்பதில்!எவ்வித ஐயப்பாடும் இல்லை யெனினும் எம்மன்னரால் வெளியிடப் பட்டது எனத் துணிந்து கூற இயலவில்லை.

பிற்கால சேர நாணயங்கள்

கொங்கு சேரர்கள் வெளியிட்ட நாணயங்கள் வட்டவடிவமாக அமைந்துள்ளன. பெரும்பாலான அந்நாணயங்களில் ஒருபுறம் யானை, தென்னை மரம், அரசனது கொடி, வில் முதலியவையும் மறுபுறம் அரசனது முடியும் அமைந்துள்ளன. கி. பி. ஆறும் நூற்றுண்டிற்குப் பிறகு சேர மன்னர்கள் வெளியிட்ட நாணயங்களிலெல்லாம் இருபுறமும் வில் அம்பும், மற்றும் சில வற்றில் ஒரு மனிதன் ஓடுவது போலவும், மறுபுறம் வில் அம்பும் பொறிக்கப் பட்டுள்ளது.

சுமார் கி. பி. 1127 ல் வழங்கிய சேர வெள்ளி நாணயத்தின் ஒரு புறம்" ஸ்ரீகாந்தாராம் குசாஸ்யா" என்ற சமஸ்கிருத எழுத்துக்களும் ஒரு கும்பமும் (பானை) உள்ளன. மறுபுறம் முதலையும் "ஸ்ரீ வீர கேரளாஸ்யா" என்ற சமஸ்கிருத பெயரும் உள்ளன.

சோழர் கால நாணயங்கள்

கடைச்சங்க கால சோழர் நாணயங்கள் சமசதுர வடிவமாகவும் நீண்ட சதுர வடிவமாகவும் அமைந்துள்ளன. என்னிடமுள்ள நீண்ட சதுர நாணயத்தின் ஒருபுறம் சோழர் சின்னமாகிய புலி கம்பீரமாக வாலைத் தூக்கி நிற்கின்றது. மறுபுறம் இருயானைகள் ஒன்றன்பின் ஒன்ருக நிற்கின்றன. அவைகளுக்கு மேல் அரசனின் அம்பாரி பொறிக்கப் பட்டுள்ளது. இதுவரை தொல் பொருள் ஆராய்ச்சியினரிடமோ (தற்போது காவிரிப் பூம்பட்டினத்தில் ஆராய்ச்சி நடைபெறுகின்றது) இந்திய பழம் பொருள் களஞ்சியங்களிலோ, மற்றைய பிறரிடமோ இவ்வகை நாணயம் கிடைக்கப் பெறவில்லை எனக் கூற முடியும். மற்றும் சில சதுர நாணயங்களில் ஒருபுறம் நிற்கின்ற புலியும், மறுபுறம் ஒரு யானைமட்டுமே பொறிக்கப் பட்டுள்ளன.

கடைச்சங்க கால இறுதியில் உருவப் பஃறேர் இளஞ்சேட்சென்னியின் புதல்வன் இரண்டாம் கரிகால் சோழன் (கி.மு. 50–கி. பி. 37) புகாரை தலைநகராகக் கொண்டு அரசு செலுத்தலானான். இவன் வெண்ணி (தற்போது தஞ்சைக்கு கிழக்கே 15 மைல் தொலைவிலுள்ள கோவில் வெண்ணி) என்ற இடத்தில் கி. பி. 12ல் சோழ நாட்டின் மீது படையெடுத்து வந்த சேரமான் பெருஞ்சேரலாதனையும் அவனுக்கு உதவியாக வந்த பாண்டிய மன்னனையும் வேளிர் பதினொருவரையும் வென்றான். வாகைப் பறந்தலை என்னுமிடத்தில் இவனுடன் போர் குறித்து வந்த ஒன்பது குறு நில மன்னர்கள் இவனெதிரில் செல்லவும் அஞ்சினராய் தங்களது குடைகளைப் போட்டு ஓடினர். இங்ஙனம் இவன் தமிழ் நாட்டிலும் தமிழ் நாட்டை யடுத்த இடங்களிலுமிருந்த அரசர்களையும் வென்று அடிமைப் படுத்தினன்.

இவன் சேர, சோழ, பாண்டியர் என்ற மூவர் நாட்டாட்சிக்குரிமை பெற்றதன் அறிகுறியாக வெளியிட்டுள்ள அரியதோர் நாணயம் என்னிடம் கிடைத்துள்ளது அந் நாணயத்தின் முன்புறத்தில் நிற்கும் புலியும் அதற்கு மேல் ஒரு செங்கோலின் இருபுறம் இரு மீன்களும் ஓர் வில்லும் அம்பும் பொறிக்கப் பட்டுள்ளன. மறுபுறத்தில் அரசனது நிற்கும் உருவம் அமைந்துள்ளது. அவனுக்கு இருபுறமும் இரு சிற்றரசர்களது உருவம் உள்ளது. அது அவன் வெற்றிகொண்ட சேரனையும் பாண்டியனையும் குறிப்பதாகும். இந்நாணயமும் இதுவரை எவராலும் வெளியிடப் படாமை இங்கு குறிப்பிடத் தக்கதாகும்.

பிற்கால சோழ நாணயங்கள்

சோழர் கல்வெட்டுக்களில் நாணயங்கள் பற்றிய பல குறிப்புகள் காணப்படுகின்றன. அவற்றினின்றும் இரு அளவை முறைகள் கையாளப் பட்டமை தெளிவாகின்றது. ஒன்று, குன்றி மணி எடையுள்ள மஞ்சாடி என்பது. மற்றொன்று, 20 மஞ்சாடி அல்லது 40 குன்றிமணி எடையுள்ள களஞ்சு என்பதாகும். கல்வெட்டுக்களில் குறிக்கப்பட்டுள்ள பல்வேறு சோழ நாணயங்கள் பொன், மடை, காசு, அக்கம், கோவை போன்றவை. இவற்றுள் பொன் எடையில் களஞ்சுக்கு சமமாகும். இராசராச சோழனுக்கு முன்னதாக ஆண்ட மதுராந்தக உத்தம சோழன் (கி. பி. 970–985) வெளியிட்ட மதுராந்தக மடை என்னும் தங்க நாணயமே இதற்குச் சான்று. "மடையும்" "காசும்" அநேகமாக ஒவ்வொரு சோழ அரசனலும் வெளியிடப்பட்ட தங்க நாணயங்களாகும். ஓர் தங்க "காசு" அரை, மடைக்கு சமமாகும். காசில் பன்னிரண்டில் ஒரு பங்கு அக்கம் எனப்பட்டது. கோவையைப் பற்றிய விவரம் சரிவரத் தெரியவில்லை.

சோழ நாணயங்களில் அவர்களுடைய சின்னமாகிய புலி பொறிக்கப் பட்டுள்ளது உத்தம சோழன் நாணயங்கள் சிலவற்றில் உட்கார்ந்திருக்கும் புலியும் இரு மீன்களும், மறுபுறம் நாகரி எழுத்தில் அவன் பெயரும் எழுதப் பட்டுள்ளன. இதனுல் அவன் பாண்டிய நாட்டின் மீதும் ஆதிக்கம் செலுத்தினன் எனத் தெரிகிறது. மற்றும் பல நாணயங்களில் உட்கார்த்திருக்கும் புலி, இருமீன்கள், வில் ஆகிய மூன்று சின்னங்களும் வெண்கொற்றக் குடையும், வெண்சாமரமும் இரு குத்து விளக்குகளும், பின்பக்கம் நாகரி எழுத்தில் அவனது பெயரும் பொறிக்கப் பட்டுள்ளன. இதிலிருந்து அவன் சேர நாட்டின் மீதும் பாண்டிய நாட்டின் மீதும் உரிமை செலுத்தினன் எனத் தெளிவாகின்றது.

பின்னர் அரசாண்ட இராசராச சோழன் (கி. பி. 985-1014) நாணயங்களில் மட்டும் ஒருபுறத்தில் நின்றுகொண்டிருக்கும் அரசனது உருவமும், மற்றொரு புறம் பின்காலிட்டு அமர்ந்திருக்கும் அதே போன்ற உருவமும் "ஸ்ரீ ராஜராஜ" என்ற நாகரி எழுத்துக்களும் உள்ளன. இவன் சேர, சோழ, பாண்டியர் என்ற மூவர் நாட்டுக்கும் உரிமை பெற்றிருந்ததால் இவனுக்கு "மும்முடி சோழன்" என்னும் விருதுப் பெயர் உண்டாயிற்று.

இராசராசன் சிற்றம்பலத்திற்கு சகம் 926 அதாவது கி. பி. 1004-ம் ஆண்டில் நன்கொடையளித்தனன் என, "கொங்கு

தேச ராஜாக்கள்'' என்னும் உரை நூல் கூறுகின்றது. அதனால் இவனுக்கு ''சிவபாதசேகரன்'' என்னும் பெயரும் வழங்கி வந்தது. இவன் வெளியிட்டிருக்கும் ஒரு நாணயத்தில் பின்காலிட்டு உட்கார்ந்த நிலையில் உள்ள ஓர் ஆள் உருவமும் ''ஸ்ரீ ராஜ ராஜ" என்ற நாகரி எழுத்துக்களும், மறுபுறம் அரசன் நின்று கொண்டிருப்பதும், பாதம் ஒன்று அவனது இடது பக்கம் பொறிக்கப்பட்டுள்ளதையும் காணலாம். அப் பாதம் அவ்வனது பெயருக்கேற்ப ''சிவபாதமாக'' அவன் வெளியிட்டிருக்க வேண்டும். மற்றுமொரு நாணயத்தில் முன்புறம் மேலே கூறியுள்ள படியும் பின்புறம் இரு பாதங்கள் மட்டும் பொறிக்கப்பட்டுள்ளன. பிறிதொரு நாணயத்தில் பின்காலிட்டு உட்கார்ந்திருக்கும் ஓர் ஆள் உருவமும் நாகரி எழுத்துக்களுக்குப் பதிலாக ஓர் அழகிய மலரும், மறுபுறம் அரசன் நின்று கொண்டிருப்பதையும் காணலாம் இந் நாணயம் எவரால் வெளியிடப்பட்டது என முடிவாகக் கூற இயலாவிடினும் உருவத்தையும் அமைப்பையும் நோக்கின் இராசராசன் வெளியிட்ட நாணயமாக இருக்கலாமென்றே தோன்றுகிறது.

இராசராசனது மகன் இராசேந்திர சோழன் (கி. பி. 1012-1044) நாணயத்தின் இருபுறமும் உட்கார்ந்திருக்கும் புலியும் இரு மீன்களும் வில்லும் அதன் கீழ் நாகரி எழுத்தில், ''ஸ்ரீ இராசேந்திரா'' என அவனது பெயரும் பொறிக்கப்பட்டுள்ளது. இவனும் உத்தம சோழன் போலவே சேரபாண்டிய நாட்டின் மீது ஆதிக்கம் செலுத்தினன் என இந்நாணயத்தின் வாயிலாகத் தெரிகிறது. இவன் வடநாட்டின் மீது படையெடுத்துச் சென்று வெற்றியோடு கங்கையினின்றும் நீர் கொணர்ந்ததால் ''கங்கை கொண்ட சோழன்'' என விருது பெற்றான். அந்த வெற்றியின் அறிகுறியாக அவன் ''கங்கை கொண்ட சோழன்'' என்ற பெயருடன் ஓர் நாணயம் வெளியிட்டான். இந்நாணயம் மேற்குறித்த நாணயத்தைப் போல எல்லா சின்னங்கள் கொண்டதாகவும் விருது பெயரில் மட்டும் மாற்றம் உள்ளதாக அமைந்துள்ளது.

குலோத்துங்க சோழனும் (கி. பி. 1070-1122) தன்னுடைய நாணயங்களில் புலி, மீன், வில் ஆகிய உருவங்களைப் பொறித்துள்ளான். இவனது நாணயங்கள் சிலவற்றில் ''கடைகொண்ட சோழன்'' ''மலைநாடு கொண்ட சோழன்" என்ற விருது பெயர்கள் உள்ளன. முன்னைய விருது குலோத்துங்கன் கடார நாட்டினை வென்றதையும் பின்னையது மலைநாட்டு வேந்தர்களை முறியடித்தமையையும் குறிக்கின்றது. குலோத்துங்கன் சுங்க வரிகளைத் தவிர்த்தமையால் ''சுங்கம் தவிர்த்த சோழன்'' என அழைக்கப்பட்டான். அதன் நினைவாக அவன் ஓர் தங்க நாணயமும் வெளியிட்டான். அதன் ஒரு புறத்தில் ''சுங்'' என்ற தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

குலோத்துங்கனுக்குப் பிறகு சோழர் செல்வாக்கு குன்றத் துவங்கியது. அவனுக்குப் பின்னர் ஆண்ட விக்கிரம சோழன் வெளியிட்டுள்ள நாணயங்களில் ஒருபுறம் அரசன் நின்று கொண்டிருப்பதையும் மறுபுறம் காளைச் சின்னமும் ''வி'' என்னும் கன்னட எழுத்தும் பொறிக்கப்பட்டுள்ளதையும் காணலாம். மற்

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

மு. குழந்தைவேலு, பி. ஏ.

அவநம்பிக்கை தந்த இன்பம்!

[கண்ணை மூடிக்கொண்டு எதையுமே நம்பிவிடாமல், எதற்கும் ஏன்? எப்படி?—என்ற ஐய வினாக்களை எழுப்பியதன் விளைவுதான் இன்றைய நாகரீகம். மனித அறிவு வளர்ச்சி எப்படி ஆரம்பித்தது என்பதைச் சிறந்த முறையில் சுருக்கித் தருகிறார், கட்டுரையாளர். "சார்லஸ் ப்ராட்லா" எழுதிய "Humanity's Gain From Unbelief" என்ற நூலின் இரண்டொரு கருத்துக்களும் இதில் உண்டு.]

"தேரான் தெளிவும் தெளிந்
தான் கண் ஐயுறவும்
தீரா இடும்பை தரும்"

என்றார் வள்ளுவர்.

நம்பக் கூடாதவரை, வெளித் தோற்றத்தில் நல்லவராக இருப்பவரை, உண்மையிலே நல்லவர் என்று நினைத்து நட்புக்கொண்டவர்கள், நாளாக ஆக நட்பின் தரம் குறைவதைக் கண்டு மனவேதனை அடைவதைக் காண்கிறோம். சிலர் தோற்றத்திற்கு முரடாகத் தோன்றுவதன் காரணமாக வெறுத்து, அவர்கள் நட்பைப்பெற விரும்பாமல், பின்பு அவர்களது மென்மையான இதயத்தை உணரும் வாய்ப்புப் பெறும்போது அவரோடு பழகவில்லையே என வருந்தும் நிலை பெற்றிருப்பதைப் பார்க்கிறோம். ஊமத்தம்பூ அழகாக இருக்கிறது என்பதற்காக அதை முகரக் கூடாது. பலாப்பழம் முள்ளாக இருக்கிறது என்பதற்காக வெறுக்கக் கூடாது. வள்ளுவர் நட்புக்கு இலக்கணம் தந்தார். நண்பராகக் கொண்டவரைப் பின்பு சந்தேகப்படக் கூடாது. இது ஓரளவு கொள்கைப் பிடிப்புக்கும் பொருந்தும். ஒருவன் ஒரு கொள்கையை விரும்பி ஏற்கும்போது சிந்தித்து ஏற்கவேண்டும். ஏற்ற பின்பு அதைக் கைவிடுவது இழுக்காகும்; இடும்பை தரும்.

ஐயம் கொள்வது, நம்பிக்கை இழப்பது எனும் தன்மை மனித மனத்துக்கு 'மறதி' என்ற பண்பு சிறந்த மகிழ்ச்சி தருவது போல், அவநம்பிக்கை மனித இனத்துக்கு சிறந்த வழியும், நன்மையும் செய்திருக்கிறது எனலாம். இக் கூற்றை நாம் அரசியல் வாதியும், பொருளாதார நிபுண

(முன் பக்கத் தொடர்ச்சி)

றும் பல சோழர் நாணயங்களில் "வி" என்ற எழுத்துக்குப் பதிலாக காளை சின்னத்துடன் சங்கு, சூலம் பொறிக்கப்பட்டுள்ளது. சோழர்களது நாணயங்கள் பெரும்பாலும் சோழர் வரலாற்றினை அறிய பெரும் துணை புரிகின்றன.

(தொடரும்)

ரும் உரை கல்லாகக் கொண்டு கணக்கிடும் முக்கிய பகுதிகளாகிய சமூகம், அரசியல், பொருளாதாரம் ஆகிய மூன்று துறைகளைக் கொண்டும் ஆய்ந்தால், நிச்சயம் 'சந்தேகம்' மனித இனத்துக்கே மிகுந்த நன்மை செய்துள்ளது என்பது விளங்கும். பல பகுதிகளாகப் பிரிக்கும் போது இவை எல்லாம் வேறுபட்டவை; தனித்தே இயங்கக்கூடியவை; தனித்தே இயங்க வேண்டும் என்ற வரம்போடு கூடியவை என தவருக நினைத்தலாகாது சமூகம். அரசியல், பொருளாதாரம் எல்லாம் ஒரு வட்டத்திலுள்ள மூன்று புள்ளிகள். அரசியல் விழிப்பு ஏற்படும் போது பொருளாதாரம் செம்மை அடைகிறது; சமூகம் சிறப்படைகிறது. பொருளாதாரத்தில் வீழ்ச்சி ஏற்படும்போது சமூகம் கெடுகிறது; அரசியல் தடுமாறுகிறது. அதனுல் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து இருக்கிறது; வேறுபட்டவை அல்ல என்பது விளங்குகிறது.

> "அழுக்காறு எனும் ஒரு
> பாவி திருச் செற்றுத்
> தீயுழி உய்த்து விடும்"

என்று வள்ளுவர், பொருமை என்பது மனிதனின் வாழ்வையே அழித்துவிடும் என்ற கருத்தை, மதவாதி 'சந்தேகம்' மனிதனை அழித்துவிடும் என்கின்றனர். மதவாதிக்கு சந்தேகம், அவநம்பிக்கை எனும்போதே ஆட்டம் காண்கிறது. அதனுல்தான் பக்தர்கள் ஆண்டவனை வேண்டும் போது "கூர்த்தமதி எல்லாம் கொள்ளைபோக வேண்டும். உன்னைப்பற்றி நினைக்க வேண்டும். உன்னைப் பற்றி ஐயமே எழலாகாது," என வேண்டினர். மத நூற்களில் கடவுள் புராணங்களை ஆராய்ச்சிக் கண் கொண்டு, சந்தேகக் கண் கொண்டு, பார்க்கக்கூடாது என்ற கட்டுப்பாட்டை வைத்தனர். சந்தேகம் எழும் போதே, மதக்கோட்டையின் சரிவுக்கே வழி அமைக்கப்படுகிறது எனலாம்.

பூமி தட்டையானது; சூரியன் உலகைச் சுற்றுகிறது; பூமி நகரவில்லை என்ற கருத்து மக்கள் மனதிலே நிலவி இருந்தது. இக்கருத்து மதத்தின் பிடியில் அகப்பட்டிருந்தது என்று கூறலாம். பூமியைப் பாயாகச் சுருட்டிப் பள்ளிகொண்ட கோபாலன் இருப்பிடமாம் பாற்கடலில், பரமன் ஒளிந்தான் என்று சொல்லவில்லையா? இந்தக் கருத்தில் ஆராய்ச்சியாளருக்கு ஏற்பட்ட சந்தேகத்தின் விளைவு பூமி உருண்டையானது; சூரியன் உலகைச் சுற்றவில்லை; பூமிதான் சூரியனைச் சுற்றுகிறது என்று மெய்ப்பிக்கப்பட்டது. இதனுல் கலிலியோ போன்றோர் பட்ட துன்பங்கள் பலவாக இருந்தாலும், சந்தேகத்தின் பயன் பூமி சாத்திரத்தில், வான சாத்திரத்தில் ஒருபுதிய திருத்தமும், திருப்பமும் கண்டார்கள்.

வானவெளியும் மனிதனும்

பூமியிலுள்ள மனிதர் வாழ்வை வான வெளியிலுள்ள கோள்கள் நிர்ணயிக்கின்றன என்ற தவருன கருத்தை உலகம் முழுதும் நம்பி வந்தது. உலகம் அனைத்திலும் உள்ள மதவாதிகள் பேரளவுக்கு வேறு வேறு மதம் எனக் கொண்டாலும், அவர்களது குறிக்கோள் ஒன்றே. அடுத்தவரை ஏமாற்றித் தங்கள்வாழ்வை வளமாக்க வேண்டும்; அடுத்தவரை ஏமாற்ற ஆகாயத்தைக் காட்டவேண்டும்; அதற்குத் தக்க முறையில் அடிப்படையாகிய புராணங்கள்—பொய் பித்

தலாட்டத் தொகுப்புகள்—ஏற்ப டுத்த வேண்டும். இந்த விதத்தில் எல்லா மதத்தினரும், நாட்டினரும் ஒரே வழியைத்தான் பின்பற்றினுர்கள். அவர்களின் உள்ளத்தின் ஆழத்தை நாம் உணர முடியாது. அங்கே திமிங்கிலமும், முதலைகளும், ஆபத்து தரும் கொடிய உயிரினமும் குடியிருக்கின்றன. அதனுல்தான் மத வாதிகள், கடவுளை கடலுக்கு ஒப்பிட்டனரோ என்று கூட எண்ண வேண்டியிருக்கிறது! எல்லா நதிகளும் கடலை நோக்கி ஓடிவந்து கலக்கின்றன என்றுர்கள் போலும்!

வானிலே வட்டமிடும் விண்மீன்களையும், கோள்களையும் காட்டிச் சாத்திரம் என்று ஒன்றை வகுத்து, சமயத்தைப் பயன்படுத்தி ஏமாற்றி வந்தனர். கிரகணம் ஏற்படுவதற்குப் புதுப்புது விளக்கம் தந்தனர். மக்கள் மனதில் மடமையைப் புகுத்தினர். விண்மீன் சஞ்சரிப்பதற்கும், கடவுளுக்கும் தொடர்பு உண்டா? கோள்களுக்கும் மனித இனத்துக்கும் உறவு உண்டா, என்ற ஐயம் ஆராய்ச்சியாளர் மனதிலே தோன்றியது. அந்த சந்தேகத்தின் விளைவு வானநூல் காண வழி கிடைத்தது. அதன் பயன் மூடக் கொள்கைக்குச் சந்திரனையும், பூமியிலுள்ள மக்களின் வாழ்வையும் இணைத்து ஏமாற்றிவந்த மதவாதியின் புரட்டுக்குச் சமாதி கட்டப்பட்டது. வானநூல் ஆராய்ச்சிக்கு வழி காண முடிந்தது. இதிலே, இப்போது ஒரு படி தாண்டிச் சென்று, வளர்ந்து வரும் மக்கள் பிரச்னையைச் சரிக்கட்ட ஐரோப்பியர் அடுத்த கண்டங்களிலே தங்கள் குடியேற்றத்தை ஏற்படுத்தி, ஆதிக்கத்தை உருவாக்கியது போல், சந்திர மண்டலத்திலே தங்கள் மக்களைக் குடியேற்றிச் சந்திரனையும் குடியேற்ற நாடாக ஏற்படுத்த முடியுமா என்று முயன்று வருகின்றுர்கள். நெருக்கடியான பொருளாதாரப் பிரச்னையைச்சரிக்கட்ட இம்முறை பயன் தரும் என்று நம்புகின்றனர். கடவுள் என்று வணங்கப்பட்ட கோள் இன்று காலனியாக—குடியேற்ற நாடாக—மாறப்போகிறது. சந்திரனும், விண்மீன்களும் தெய்வம், மனித வாழ்வை நிச்சயிக்க மகேசன் படைத்தது என்று ஆதாரமற்ற கற்பனையை அப்படியே சந்தேகப்படாமல் நம்பி ஏற்றிருந்தால், இன்று இந்த அளவு வானசாத்திரம் வளர்ந்திருக்க முடியாது.

நல்லவரைக் காக்க இறைவன் சூரியனை உதிக்கச் செய்கிருர்; கெட்டவரை அழிக்க மின்னலையும், இடியையும் உண்டாக்கி இருக்கிருர். ஆரியர்கள் திராவிடரின் அழிவை விரும்பி, "ஏ இந்திரனே, மது அருந்தாத இவர்கள் தலையிலே இடி விழச் செய்" என்று வேண்டி, இந்திரன் தான் 'இடி கடவுள்' என்று நம்பினரே, அந்த நம்பிக்கையை உலகம் அப்படியே ஏற்றிருந்தால், இன்று இரஷ்ய விஞ்ஞானிஇடியிலிருந்து இயந்திரங்களை இயக்கும் சக்தி பெற வழி கண்டிருக்க முடியாது; மின்னலின் உதவியால் மின்சார சக்திபெற முறை கண்டிருக்க முடியாது. ஆவி போக்கும் ஏவலாளன் என்று கருதப்பட்ட இடியும், மின்னலும் இன்று இயந்திரம் இயக்கப் பயன்படும் 'இயக்கி'யாகப் பயன்பெறுகிறது. அச்சம் தரும் பொருளை ஆண்டவன் என்று ஆரியர் நம்பிக்கைகொண்டிருந்தது போல் அச்சத்தையே அச்சாரமாகக் கொண்டு உலகம் கண்மூடி நம்பி யிருந்தால், உலகம் முன்னேறி இருக்காது. இடிக்கும் இறைவனுக்கும் சம்பந்தம் எப்படி வந்தது என்ற எண்ணம் வளர்ந்ததன் பயனுக,

இடி உற்பத்தியாகும் மூலகாரணம்; மின்னல் தோன்றுவதற்குரிய சூழ்நிலை இவைகளை அறிய வேண்டுமென அவா தோன்றியது. அதன் விளைவு இடிக்கும், கார்முகிலுக்கும் இணைப்பு ஏற்பட்டது. உயிர் போக்கும் கூற்றாக அச்சத்துடன் காட்சி தந்த மின்னல், இயற்கையின் படைப்பு; அதை ஏற்றத்துக்கும் பயன்படுத்தலாம் என்ற முடிவு காணப்பட்டது. அழிவு தரும் ஆண்டவனுக்க் கருதப்பட்ட இயற்கை, இயந்திரங்களின் உற்பத்தியை அதிகரித்துப் பொருளாதாரம் செம்மை பெற்ற சிறந்ததோர் சமுதாய வாழ்வுக்கு வழிகாணும் பொருளாதார அங்கமாகப் பயன்படுகிறது. இவையெல்லாம் "இடியும், மின்னலும் தெய்வமா?" என்ற சந்தேகத்தின்மேல் எழுந்த நற்பயனே ஆகும். இது போன்றே மழைக்கும், புயலுக்கும் இருந்த தெய்வத் தன்மையும், புராண இணைப்பும் அந்த அந்த இலாகாவுக்கு ஒதுக்கப்பட்ட கடவுள்களும், களையிழந்து, ஒளி ஒழிந்து இருக்குமிடம் தெரியாமல் 'மாஜிகடவுள்கள்' ஆனார்கள் என்றால் மனிதன் மழைக்கும், மகேசனுக்கும் உறவு இருக்குமா? என்று சந்தேகப்பட்டதுதான் காரணம்.

பாலும் தேனும்

"வளம் நிறைந்த நாட்டைப் 'பாலும் தேனும் ஓடும் நாடு' என்று கவிஞர் வருணிப்பதுண்டு. உண்மையாகவே இச்சிறப்புடைய நாடு ஆஸ்ட்ரேலியா. இங்கு பால் உற்பத்தி ஏராளம். பழங்களிலும், 'கேக்'குகளிலும், பிஸ்கோத்துகளிலும் வேறு பலவகை உணவுகளிலும், ஆஸ்ட்ரேலிய மக்கள் தேனைச் சேர்க்கிறார்கள். ஆறு மாதத்திற்கு உட்பட்ட குழந்தைகளுக்குத் தேன் அளித்தால் அவர்களுடைய நிறை கூடுமென்றும், இவர்கள் உறுதி கூறுகிறார்கள். இந்நாட்டிலிருந்து பல்லாயிரம் 'டன்' நிறையுள்ள தேன் ஏற்றுமதியாவதால், ஆஸ்ட்ரேலியாவுக்குப் பெரும் ஊதியம் கிடைக்கிறது. எனவே தேனைத் 'தங்கத் தண்ணீர்' (Liquid Gold) என இம்மக்கள் புனைந்துரைப்பது பொருத்தமானது."

—சோம. லெ. இலக்குமணச் செட்டியார்

"ஆஸ்ட்ரேலியாவில் ஒரு மாதம்"

விவசாயத்துறை

மேல் நாட்டில் விவசாய முறையில் கூட மூடநம்பிக்கை நிலவி வந்திருக்கின்றது. நிலம் வளம் பெற அதற்கு ஓய்வு கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் உருவாகிச் செயல்பட்டுவந்திருக்கின்றது. இந் நம்பிக்கை மதத்தோடு இணைந்தது என்று கூடச் சொல்லலாம். நிலத்திற்கு ஓய்வு அவசியமா என்ற சந்தேகம் எழுந்த போதுதான், மாற்று முறை கண்டுபிடிக்க வேண்டும், அது பொருளாதார ஏற்றத்துக்குப் பயன் தரும் என்ற எண்ணம் உருவாயிற்று. சோதனையே வெற்றி தந்தது. அதனால் கால்நடைகளுக்குச் சிறந்த தீனி விளைவிக்கும் நிலைமை ஏற்பட்டது. உணவு உற்பத்தி அதிகமாயிற்று; பொருளாதாரம்செம்மையுற்றது. சமூகத்தில் நிலவிய பசிப்பிணி கொஞ்சம் மறைந்தது. சமூகம் முன்னேற்றம் கண்டது. இது போன்றே கால்நடைப் பராமரிப்பு, உரம் தயாரித்தல், இன்ன பிறவற்றிலும். ஆனால் பரிதாபத்துக்குரிய நமது நாடு இன்னும் பசுவைத் தெய்வமாக

வணங்குகிறது. நல்ல இலக்கியங்கள் கூட பசு, பார்ப்பார்—என்று சொல்லித் தம் சிறப்புக்குக் கொஞ்சம் இழுக்குத் தேடுகின்றன. பசுவைத் தெய்வமாக வணங்குவோர் என்று தம்மைச் சொல்லிக்கொள்வோர் கன்றுக்குப் பால் விடாமல் தம் வயிற்றைப் பெருக்க வைக்கிறார்கள். சிறந்த முறையில் தீனிபோடாமல் அதைச் சித்திரவதை செய்து நிமிட நிமிடமாகச் சாகடிக்கிறார்கள். மேல்நாட்டார் மாட்டிறைச்சி உண்டாலும், கால்நடைகளைத் தங்களைப்போல் பாதுகாத்து வருகிறார்கள். பசுவைத் தெய்வமாக வணங்கும் இந்து மதத்தினர் சாக்கடையில் மாட்டைக் கட்டி, அதைச் சாக்கடைப் புழுவிலும் கேவலமாக நடத்துகிறார்கள். அதனால்தான் நேரு அவர்கள் கூட நாட்டின் பொருளாதாரத்தைப் பாதிக்கும் கால்நடைகளைத் தினம், தினம் சாகடிப்பதைவிட மேல் நாட்டார் போல் அவைகளைப் பயன்படுத்தி பொருளாதாரத்தில் ஏற்றம் காணலாம் என்றார். "நான் குதிரைக்கும், பசுவுக்கும் வேறுபாடு காணவில்லை" என்று நேரு அவர்கள் கூறுகிறார்கள் என்றால், தொட்டதெல்லாம் தெய்வம், கண்டதெல்லாம் கடவுள், என்ற நம்பிக்கை யற்ற தன்மையே ஆகும்.

அரசனும் ஆண்டவனும்

அரசன் ஆண்டவனின் பிரதிநிதி; மன்னன் சொல்லை எதிர்ப்பது, மகேசன் வார்த்தையை எதிர்ப்பது போலாகும்; மன்னன் செய்யும் ஒவ்வொரு செயலும் ஆண்டவன் கட்டளை; அச்செயலை ஆதரிப்பது ஆண்டவனை ஆதரிப்பதுபோல் ஆகும்; அரசனுக்கு எதிராகக் கிளம்புவது, ஆண்டவனுக்கு எதிராக நிற்பது போலாகும்—என்ற ஆட்சி பீடத்திலுள்ளோர் வார்த்தைகளை உண்மையெனக்கொண்டு, தெய்வீக உரிமைக்கொள்கையை மக்கள் மதித்திருந்தனர். மன்னன் விதிக்கும் அநீதியான வரிகளுக்கும், நேர்மையற்ற முறையில் கொடுங்கோலனாக அவன் ஆண்டாலும் தட்டிக் கேட்கலாகாது; கடவுள் விட்ட வழி; கடவுளின் சோதனை என்று எண்ணி ஆறுதலாக இருந்தவரையில், மன்னராட்சி தெய்வீக உரிமைக் கொள்கை மேல் சிறப்பாகத் தட்டிக் கேட்க நாதியற்று தர்பார் நடந்து வந்தது. அறத்துக்கு வழி சொல்லும் ஆண்டவன் அநீதிக்குத் துணை புரிவானா? அரசனும் மற்றவரைப் போல் பிறந்து, வளர்ந்து, மணந்து வாழும் போது அவனிடம் மட்டும் தெய்வீகத் தன்மை எப்படி இருக்க முடியும்? சாதாரண மக்களுக்கு இல்லாத பண்பு அரசனிடம் என்ன இருக்கிறது என்ற வினா எழும்பியது. அந்நிலையில்தான் கொடுங்கோல் மன்னரை அழிப்பது மக்கள் கடமை என்ற உணர்ச்சி ஏற்பட்டது. அரசியல் விழிப்பு ஏற்பட்டது. பிந்திய நாளில் குடி ஆட்சி மலர வழி வகுத்தது.

தெய்வீக உரிமைக் கொள்கை எதிர்க்கப்படாதிருந்தால், முளையிலே கிள்ளப்படாதிருந்தால், கொடுங்கோலரசர், சர்வாதிகார ஆட்சிக்குச் சாவு மணி அடித்திருக்க முடியாது. மக்கள் மனதிலே உருவான, ஏன்? எப்படி? எதற்கு?—என்ற சந்தேகத்திலே விளைந்த விளைவுதான் அநீதியைக் கண்டித்தே ஆக வேண்டும்; ஆண்டவனுக்கும், அரசனுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை—என்ற உண்மை விளக்கம். அதன் பயன் மணிமுடி மண்ணிலே வீழ்த்தப்பட்டு, மன்னராட்சி முறை ஒழிந்து, மக்

களாட்சிமுறை மலர வழி கிடைத்தது.

மத குருவும் மனிதனும்

மனிதன் முற்பிறப்பில் செய்த வினைப்பயன் காரணமாகப் பிறக்கிருன்; நன்மை செய்தவன் நல் வாழ்வு வாழ்கிருன்; தீமை செய்தவன் துன்பப்படுகிருன்; புண்ணியம் செய்தவன் சீமானுக, செல்வனுகப் பிறக்கிருன்; பாவம் செய்தவன் ஏழையாக, உழைப்பாளியாகப் பிறக்கிருன்; இப்பிறவியில் புண்ணியம் செய்தால், மறு பிறவியில் சுகமாக வாழலாம்; இப்பிறவியில் படும் துன்பங்களை எண்ணி வருத்தப்படலாகாது; கடவுள் வகுத்த சட்ட திட்டங்களை மீறக் கூடாது; மீறினுல் நரகம் கிடைக்கும் என்று அச்சுறுத்தி வந்தனர். மோட்சம், நரகம், என்ற கற்பனையிலே மயங்கி மங்கிய வாழ்வு பெற்று வாழ்ந்தவர்பலர். மதகுரு ஆண்டவனின் மறு அவதாரம்; கடவுளை அடைய மதகுருவின் தயவின்றி வேறு வழி இல்லை; கடவுளை நேரடியாகப் பாவிகள் காண முடியாது; கோயில் பூசை செய்யும் பூசாரி மூலம்—தரகர்மூலம்—அவருக்குத் தட்சணை தருவதன் மூலமாகத்தான் கடவுளைத் தன் குறைகளைக் கேட்கத் திருப்ப முடியும். ஆகையால் மதகுருவின் துணை இல்லாமல் மனிதன் மறு உலக வாழ்வைச் செம்மை பெற அமைக்க முடியாது—என்ற மதவாதியின் கருத்துக்களை மக்கள் நம்பிவந்த நேரம் ஒன்று உண்டு. மனிதன்தான் பட்டினி கிடந்தாலும், தன் குடும்பத்தைப் பசியில் வாடவிட்டாலும், கோயிலுக்குப் பூசையும் மதகுருவுக்குக் காணிக்கையும் தர வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் அவன் பாழ் நரகில் வீழ்வான்; மோட்சக் கதவு மூடப்படும், என்று புனைந்த புனை சுருட்டை மக்கள் நம்பினர். காணிக்கை குவிந்தது. கோயில் செழித்தது. மத குருக்கள் கொழுத்தனர். வறுமை நிறைந்தது. மக்கள் வாடினர். மதகுருவினர் ஆடம்பரமாக வாழ்ந்தனர். அவர்கள் சுகபோகம் மிகுந்தது.

நோயால் பாதிக்கப்பட்டவர் சுகம்பெற மருந்து தேவையில்லை; மதகுருவின் அருள் பிரசாதமும், அருள் பிரசாதமும் போதும் என்று போதித்தனர். மக்கள் நம்பினர். ஆனுல் நோய் குறைவதற்குப் பதிலாக அதிகமாயிற்று. ஆனுல் மதகுருவுக்கு நோய் வந்ததும் மருத்துவரை நாடினுர். மக்களை எளிய வாழ்வு வாழ வேண்டுமென்று போதித்த மதகுரு, ஆடம்பர ஆடை அணிகலன்கள் அணிந்து பவனி வந்தனர். மறு உலகைப் பற்றிச் சிந்திக்கும் மதகுரு காணிக்கை வாங்கத் தவறவில்லை. "காயமே பொய்யடா'' என்று வாதமிட்ட வேதாந்தி அரண்மனை வாசத்தையும், அறுசுவை உண்டியையும், உடல் சிறப்புக்குரிய உயர்ந்த உணவு வகைகளையும் உண்பதை விட்டுவிடவில்லை; மறக்கவில்லை. இதையும் மக்கள் உன்னிப்பாகக் கவனித்தனர்.

பிணியால் பீடிக்கப்பட்டவரை ஜெபம்செய்யச் சொன்ன மதகுரு, தனக்கு நோய் வந்ததும், சிறந்த மருத்துவரை நாடினுர். பாவிகளுக்காகப் பரிந்துரைக்கும் பக்தன், தனக்காக ஏன் ஆண்டவனிடம் வாதாடவில்லை? பிறருக்கு ஆண்டவன் நோயை உண்டாக்குகிருன்; குணமாக்குகிருன் என்று பொய்யுரைக்கும் வேதத்திலிருந்து வரிவரியாகச்சொன்ன மதகுரு ஏன் தன் பிணி போக்க மருத்துவரை நாடுகிருர்? ஆண்டவனிடம் அவருக்கு நம்பிக்கையில்லையா? அப்படியானுல் நாம்

மட்டும் ஏன் பொய்யுரையை மெய்யென நம்பி மரணத்தை வலிந்து வரவேற்க வேண்டும், என்று எண்ணினர். இதன் பயன்தான் சிறந்த மருத்துவரால் நீக்க முடியாத நோய் மதகுரு வின் பிரார்த்தனையால் போக் கடிக்கப்பட முடியாது என்று கண்டனர். கல்வி அறிவுபெற பள்ளியை நாடுவதுபோல் உடல் குணம்பெற மருத்துவரைத் தேடினர். மதகுருவுக்கும், பிணி நீக் கும் தன்மைக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை என்று கண்ட னர். மக்கள் நோய் நீக்க மருத்து வரின் உதவியை நாடவே ஊக் கம் பெற்ற மருத்துவர்களும் சிறந்த முறைகளைக் காண ஆராய்ச்சி நடத்தினர். அதன் பயன் கொள்ளை நோயால் கூட் டம், கூட்டமாக மாண்ட மக்கள் இனம் சிறந்த மருத்துவ வசதி யில்லாததால் இளமையிலேயே உயிர் துறந்த குழந்தைகள் சாவி லிருந்து தடுக்கப்பட்டன. மதம் தன் கோர உருவைக் காட்டத் தவறவில்லை. ஆனால் சிந்தித்த மக்கள் இனம், அவர்கள் கண் மூடி வழக்கத்தைக் கண்டிக்க ஆரம்பித்ததும், எங்கே தன் முழு உருவமும் வெளிப்பட்டுவிடுமோ என்று அஞ்சி ஒதுங்கிக் கொண் டது. மருத்துவ முறையும் கடவு ளால் போதிக்கப்பட்டது தான் என்று ஒரு விளக்கம் தந்து தன் னையே ஏமாற்றிப் பெருமை கொண்டது.

அடிமை இனம்

நம் நாட்டில் சாதிமுறை—குல தர்மமுறை—இருப்பது போல் மேல் நாடுகளில் அடிமை முறை இருந்தது. இங்குள்ள சுயநலக் காரர்கள், இரக்கமற்றவர்களால் சாதிமுறை கடவுளால் ஏற்படுத் தப்பட்டது; மதத்தோடுதொடர்பு கொண்டது; சாதி ஒழிப்பு என் பது கடவுள் ஒழிப்பாகும் என்று ஏமாற்றுவதுபோல், அடிமை முறையும், ஆண்டவனால் ஏற்ப டுத்தப்பட்டது என்னும் அள வுக்கு விளக்கம் தந்தார்கள். அடிமை முறையைப் பாதுகாப் பது எங்கள் உரிமை என்று விளக்கம் தந்து, தோல்வியுற்று மதகுருக்களின் கூட்டோடு சேர்ந்து கடவுள் முற் பிறப்பில் செய்த பாவத்தால் கூலிகளை, அடிமைகளைப் படைக்கிறார்; புண்ணியம் செய்தவர்களை முத லாளிகளாகப் படைக்கிறார்; அந் தப் பாகுபாட்டை ஒழிப்பது என் பது தேவ ஆலயத்தை ஒழிப்ப தாகும்; மோட்சம்—நரகம் இல்லை என்று மத நிந்தனை செய்வ தாகும்;—என்று அடிமை முறை யையும், மதத்தையும் இணைத்து வைத்துக் காட்டினர். நல்லறி வாளர் இறைவன் மனிதனைப் பிறப்பால் தாழ்ந்தவன், பாவி என்று படைத்தால் அவனே அழி யட்டும்; அவனைத் துதி செய்யும் மதம் ஒழியட்டும் என்று எண்ணி னர். மனிதனை, மனிதனாக நடத்த அநுமதிக்காத மதம் நாட்டிலே இருக்கக் கூடாது. அவைகளை அழிப்பதுதான் சிறந்த வழி, முதல் வேலை என்று திட்டமிட்டனர். தங்கள் கருத் தைக் கூறினர். கடவுள் கருணை யுள்ளவர்; மன்னிக்கும் மாபெரும் பண்பு பெற்றவர் என்று சொல் லும்போது பாவபுண்ணியம் என் பவற்றை மனதில் கொண்டு, மோட்சம் நரகம் உண்டாக்கு வாரா? உயர்ந்தவன், தாழ்ந்த வன் என்று படைத்து ஏழையை மிருகத்தைக் காட்டிலும் கொடு மையாக நடத்த உடன்படுவாரா? அப்படி உடன்பட்டால் கடவுள் விருப்பு, வெறுப்பு இல்லாதவர் என்று கூறுவது முரணல்லவா, என்று எண்ணிப் பார்த்தனர். அதன் பயன், அடிமையாகக்

கொடுமைப் படுத்தப்படும் நாதியற்றவருக்கு அன்புக் கரத்தை நீட்டினர்; பாசத்தைக் காட்டினர். மதத்தின் மிரட்டலுக்கும், பணத்தின் உருட்டலுக்கும் சாவுமணியும், சமாதியும் கிடைத்தது. அடிமை முறை நாட்டில் இருப்பதே அவமானம் என்ற கருத்தை நிலைநாட்டினர். அடிமை முறை ஒழிந்தது. ஆண்டவனுக்கும் அடிமை முறைக்கும் இருந்த தொடர்பு துண்டிக்கப்பட்டது. மதத்தின்மேல், பணக்காரப் பசப்பு வார்த்தைகளின் மேல் எழுந்த அவனம்பிக்கை, அடிமைகள் விடுதலை பெறும் நல்ல வாய்ப்பை ஏற்படுத்தித் தந்தது.

உழைப்புக்குத் தக்க கூலி கேட்பது; மனிதனை மனிதனாக நடத்த வேண்டுவது, நீதி வேண்டுவது இதுபோன்ற செயல்களுக்குக் கூட அனுமதி யில்லை. பல பேர் துன்பப்பட்டால்தான் ஒருசிலர் இன்பம்பெறலாம் என்ற கொடிய புத்தி நிலவியது. செல்வரும், வாயடிக்காரர்களும், மதவழியின் துணையோடு தம் மனம் போன போக்கில் நடந்தனர். அல்லலுற்றவரின் கண்ணீருக்கு மதிப்பே யில்லை. மதத்தால், பிணைக்கப்பட்ட மக்கள், சிந்திப்பதே பாவம் என்று எண்ணி, ஆமைபோல் அடங்கி இருந்தனர். ஆனல் சிந்தனை வளரவே, வினு எழுப்பும் தன்மை வளர்ந்தது. ஐயம் வளர்ந்தது. மூடக் கொள்கைகள் மெல்ல, மெல்ல இடுகாடு நோக்கி இறுதிப் பயணத்தைத் தொடங்கின.

முடிவு

பிறப்புக்கு முன்பே தனது ஆரம்பத்தைத் தொடங்கிய மதம் மனிதன் மூப்பு எய்தி இறந்த பிறகும் அவனை விடாது துரத்திச் சென்று, வெகு தூரம் கடந்து தனது எல்லைக் கல்லை நாட்டி வருகிறது. அதனல் தொழில் துறையிலிருந்து தத்துவ விசாரணை வரையில் தனது ஆட்சிக்குட்பட்டதாகக் காட்டுகிறது. மனித சமுதாயம் திறம்பட வாழ வேண்டுமானல், பொருளாதாரத்துறையில் நிறைவு பெற்றுப் பொலிவுடன் திகழ்ந்து, அமைதியான அரசியல் முறைவகுத்து மன நிறைவு பெற்று மக்கள் சமுதாயம் இன்றும், நாளையும் ஏற்றத்தோடு வாழ வேண்டுமானல், எல்லாவற்றையும் தன்னகத்தே அடக்க நினைத்து வளர்ச்சியை ஒடுக்கும் சமுதாயக் கேடுகள் நீக்கப்பட வேண்டும். மக்கள் சிந்தனை வளரவே மதத்தில், அவநம்பிக்கை எழுந்தது. சமுதாயத்தின் மூலைமுடுக்குகளில் இருக்கும் கேடுகளையும், கொடுமையையும் கொடூரபுத்தியையும் நல்லமுறையில் விளக்கி, மதத்தின் உண்மை உருவத்தைக் காட்ட வேண்டும். மக்கள் மனதிலே எழும் ஐயத்திற்குத் தக்க முறையில் விடையிறுத்து அவர்களின் சிந்தனையை வளரச் செய்ய வேண்டும். வாழையடி வாழையாக வந்த சமுதாயக் கேடுகளை ஒழிப்பது என்பது முள் மரத்தின்மேல் விழுந்த துணியை எடுப்பது போன்ற கடினமான செயல்தான். அநீதியின் உருவமாக நின்ற ரஸ்புடீன்களும் ஜார்களும் பரிதாபத்துக்குரிய சாவை அடைந்தபோது சமுதாயக் கேடுகளை நீக்குவது என்பது முடியாத காரியமல்ல. நிச்சயம் முயற்சி திருவினை ஆக்கும்.

"ஞாலம் கருதினும் கைகூடும் [காலம்
கருதி இடத்தாற் செயின்"

"அஞ்சாமை அல்லால் துணை [வேண்டா எஞ்சாமை
எண்ணி இடத்தால் செயின்"

எனும் குறள் நெறிப்படி வழி நடந்தால் தேய்ந்துவரும் சமுதாயக் கொடுமை மாய்ந்தே போகும். ஆடிவரும் இன்பம் மிக விரைந்து ஓடி வரும். சமுதாயம் சிறப்புற்று வாழும். அறிவுக்கு ஒவ்வாத கருத்தின் மேல் கொண்ட 'அவநம்பிக்கை' என்னும் நெருப்பை அணையாமல் பாதுகாத்து வருவதை மறந்துவிடக்கூடாது. அதுதான் காய்ந்து வரும் நச்சுமரமாம் மூடக் கொள்கைகளை எரித்துச் சாம்பலாக்கிச் சமுதாயத்துக்கு நிரந்தர இன்பம் தரும் பேரொளி. அறிவு விளக்கு.

கலப்பு மணம்

"பிறப்பில் உயர்வு தாழ்வு கருதும் சாதிப் புன்மை நாட்டில் ஒரு நோயாகியது. அந்நோய்க்கு உரிய மருந்து எது? பலவகை மருந்துகள் பலரால் காணப்பட்டன. அவைகளால் நோய் முற்றும் நீங்கவில்லை. நோயை அவ்வப்போது சிறிது ஒதுக்கும் மருந்து தக்கதாகாது. சாதி நோயை அறவே நீக்க வல்ல மருந்து தேவை என்று நினைந்தேன்; நினைந்தேன்; பன்னெடு நாள் நினைந்தேன். ஒன்று கண்டேன். எது? கலப்பு மணம்.

சாதி நோயின் வேரை அறவே கல்லவல்ல மருந்து கலப்பு மணமே என்ற முடிவுக்கு வந்தேன். கலப்பு மணம் உலக முழுதும் நடைபெறுதல் வேண்டும். அதற்கென்று ஆங்காங்குள்ள தலைவர்கள் பல திற இயக்கங்களை நிறுத்திக் கலப்பு மணத்தில் கருத்திருத்தல் அறம். தலைவர்கள் குறிக்கோளெல்லாம் கலப்பு மண முயற்சியாதல் சிறப்பு. கலப்பு மண இயக்கத்துக்கென்று பல ஆண்டு ஒதுக்குவதும் தவறாகாது. பள்ளிகளும், அரங்கங்களும், மகாநாடுகளும், நகர சபைகளும், சட்ட சபைகளும், அரசுகளும் கலப்பு மண முயற்சிக்கு ஆக்கந் தேடும் காலமே நல்ல காலம். போதனைகளும், ஆடல்களும், பாடல்களும், தீர்மானங்களும், சட்டங்களும் பிறவும் கலப்பு மணத்தை உளங் கொள்வனவாதல் வேண்டும்."

—திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புக்கள்

பக்கம் : 778–779

கடிதங்கள்

அறிவுக்கு விருந்து

ஜூன் மாத 'குத்தூசி' இதழின் தலையங்கங்கள் இதய உணர்வுகளை, கொள்கைப்பிணைப்புகளை சுண்டி இழுக்கின்றன. மிகக் கவர்ச்சியாகவும், அறிவுக்கு விருந்தாகவும் அமைந்திருக்கின்றன. மடாலின் மர்ரே அவர்களின் ஆற்றலும் ஆக்க வேலையும் நம் போன்றோர்க்கு எவ்வளவு மனச்சாந்தியைக் கொடுக்கிறது! அந்தத் தலையங்கத்தின் முடிவில் கிண்டலும் நன்றியும், பேரார்வ உந்தலும் போட்டி போட்டு நடமிடுகின்றன. தங்கள் பேனாவிற்கே ஒரு தனித் தாளம்! அது வாழ்க! தலையங்கங்களுக்கு நன்றி! நன்றி!!

இரா. செந்தாமரை

(வழக்கறிஞர்–வேலூர்)

"கொள்கை கரைந்தது!"

பாண்டுரனாவிலிருந்து, சத்ய விருத ஆர்ய என்பவர் "சரிதா" என்ற இந்தி (ஜூலை 1964) இதழில் எழுதியுள்ள கடிதத்தின் ஒரு பகுதி:

"தேசிய நடவடிக்கைகளில் மதச் சார்பற்ற தன்மையைப் பார்ப்பதே அரிதாகி வருகிறது. மதச் சார்பற்ற இந்திய அரசின் வானொலி விடிந்தும், விடியாதது மாகப் பஜனையைத் தொடங்கி விடுகிறது. நீர்த்தேக்கம் அல்லது பாலத்தின்' திறப்பு விழாவின் போது வேத மந்திரங்களை உச்சரிப்பதற்காகப் பண்டிதர்கள் வந்து வடுகிறார்கள். நிலத்திற்குப் பூசை போடுவது என்ற பெயரில் போலிச் சடங்குகள் நடத்தப்படுகின்றன. இவ்வையெல்லாம் நமது மதச்சார்பற்ற தன்மையை நையாண்டி செய்வது போல் இல்லையா? பல அரசாங்கப் பணிமனைகளில், குறிப்பாக ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில், பொது வழிபாடு கட்டாயப் படுத்தப்பட்டுள்ளது. மதச் சார்பின்மை என்ற தன்மைக்கே இந்தியாவில் வழிகாட்டியாக விளங்கிய நேரு காலமானதும் அவரால் தனது வாழ்நாள் முழுவதும் எதிர்க்கப்பட்டு வந்த போலிச் சடங்குகளை அரசாங்கத்தின் தரப்பில் நடத்தியது, அந்தத் தத்துவத்தையே கிண்டல் செய்வது போல இல்லையா? அவருடைய மறைவிற்கு வருத்தம் தெரிவிப்பதாகச் சொல்லிக் கொண்டு வானொலியில் பதின்மூன்று நாட்களும் மதச் சொற்பொழிவுகளும், பஜனையும், இராமாயணமும் அல்லவா ஒலி பரப்பப்பட்டது? இது மட்டுமல்ல. மடமையைப் பரப்பும் சடங்குகளைச் செய்து கொண்டே அவருடைய அஸ்திகளை எல்லா நதிகளிலும் கரைத்திருக்கிறார்கள். இவ்வளவும், மூட நம்பிக்கைகளின் தீவிர எதிரியாயும், ஆத்மா, மறு பிறப்பு போன்ற பித்தலாட்டங்களை நம்பாமலும் வாழ்ந்து வந்த ஒருவரின் ஆத்ம சாந்திக்காக நடத்தப்பட்டுள்ளன! தனது மறைவிற்குப் பிறகு மதச் சடங்குகள் எதுவும் நடத்தக் கூடாது என்று அவர் தனது உயிலில் எழுதியிருக்கிறார். ஆனாலும் இதற்கு எதிராகவே எல்லாம் நடத்திருக்கின்றன. உண்மையில் நேருவிற்கு ஒரு ஆத்மா

இருக்குமானால் அது இந்தப் போலிச் சடங்குகளையெல்லாம் கண்டு அமைதி அடையுமா? நம்மை விட்டுப் பிரிந்து விட்ட அந்த மனிதரின் கடைசி விருப்பத்திற்கு மாருகவே நடந்து கொள்வது தான் நாம் அவருக்குச் செலுத்தும் மரியாதையா?''

தமிழாக்கம்: வியெஸ்ஜி
(பெங்களூர்)

x x x

கோல்ட்ஸ்மித்

வணக்கம். ஜூலை மாதத்திய குத்தூசி இதழில் ''பேனு மன்னர்கள்'' என்ற தொடரில் ஆலிவர் கோல்ட்ஸ்மித்தைப் பற்றி 'காதம்பரி' அவர்கள் ஒரு கட்டுரை எழுதியிருந்தார்கள். இதில் உள்ள ஒரு சில கூற்றுக்கள் நம்பத்தக்கன அல்ல. கோல்ட்ஸ்மித் பல்லாஸ் என்ற ஊரில் பிறந்ததாகவும், எல்பின் பகுதியில் பிறந்ததாகவும் இருதரப்பட்ட கருத்து வேற்றுமைகள் ருப்பதாக ஆசிரியர் குறிப்பிட்டிருந்தார். கோல்ட்ஸ்மித் பிறந்தது பல்லாஸில் தான். எல்பினில் அவரது தந்தையான சார்லஸ் கோல்ட்ஸ்மித் திருமணம் செய்து கொண்டு இல்வாழ்க்கையைத் தொடர்ந்தார் என்பது மட்டுமே உண்மையாகும். இரண்டாவதாக, அமெரிக்காவுக்குப் போக இருந்த கோல்ட்ஸ்மித்தைத் தடுத்து நிறுத்தி கணிதத்தில் பி.ஏ. பட்டம் பெற அவர் உறவினர் ஒருவர் உதவி செய்ததாக கட்டுரை ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். இது தவறு. பட்டம் பெற்ற பின்னர், அதாவது கோல்ட்ஸ்மித்தின் தந்தை இறந்த பின்னர் தான் ஆலிவர் அமெரிக்காவுக்குப் போக முயன்ருர். இறுதியாக, "கோல்ட்ஸ்மித் ஃபிரான்ஸ், ஜெர்மனி, சுவிஸ், இத்தாலி முதலிய நாடுகளை வலம் வந்தான்; அங்கங்கே பேரறிஞர்களைக் கண்டு பேசுவான்'' என்பதும் சரியல்ல. ஏனெனில், கோல்ட்ஸ்மித்தே தான் வால்டேரை பாரிஸில் பார்த்துப் பேசியதாகக் கூறியுள்ளார். ஆனுல் உண்மை என்னவென்ருல், கோல்ட்ஸ்மித் தன்னுடைய சுற்றுப் பிரயாணத்தின் போது வால்டேரை பாரிஸில் பார்த்திருப்பதற்கே வழியில்லை; ஏனெனில், வால்டேர் அப்போது பாரிஸிலேயே இல்லை! எனவே, இக்கூற்றும் நம்பத்தக்கதல்ல. ஆலிவர் கோல்ட்ஸ்மித்தைப் பற்றி முழுதும் அறிய வேண்டுமானுல்—அவர் எழுத்து வன்மையைப் பற்றியும் வாழ்க்கை வரலாற்றைப் பற்றியும் தெரிந்து கொள்ள வேண்டுமானுல்–வரலாற்று ஆசிரியரான Thomas Babington Macaulay என்பார் எழுதிய "Oliver Goldsmith" என்ற கட்டுரையைப் படித்தால் போதுமானது.

ஆர். கிருட்டினமூர்த்தி
(கல்லூரி மாணவர்) வேலூர்

உங்களுக்கு ஊக்கம் பிறக்க

[இங்குள்ள பொன்மொழிகளில் சிலவேனும் உங்களுக்குப் பொருந்தலாம். மிகப் பொருந்தக் கூடிய ஒன்றைப் பொறுக்கிக் கொள்ளுங்கள். அதைத் திரும்பத் திரும்பப் படியுங்கள்; மனப் பாடஞ் செய்யுங்கள்; பலதடவை நினைவுபடுத்திப் பாருங்கள்.—பிறகு நடத்தையில் *காட்டுங்கள்.*

மற்றப் பொன்மொழிகளை மற்ற நாட்களில் இப்படியே பயன் படுத்துங்கள்.

இவை பல பேரறிஞர்களால் கூறப்பட்டவை; சலித்து எடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் ஏதேனும் இரண்டு — மூன்று வரிகள் உங்கள் வாழ்க்கையி லேயே ஒரு திருப்பத்தை உண்டாக்கலாம்.]

"நேரத்தைப் பயன்படுத்துக; நல்ல வாய்ப்பை நழுவவிட வேண்டாம்."

—ஷேக்ஸ்பியர்

x x x

"தான் மகிழ்ச்சியோடு இருப்பதாகக் கருதிக் கொண்டா லொழிய எவனும் மகிழ்ச்சியுடனிருக்க முடியாது."

—மார்கஸ் அரீலியஸ்

x x x

"வாழ்க்கை என்பதே முயற்சியும் தோல்வியும் கொண் டதுதான். தவறே செய்யாதவர்கள் என்பவர் ஒன்றுமே செய்யாதவர்களே."

Alfred P. Sloan

x x x

"உலகம் உண்டானது முதல் உண்மையான உழைப்பு என்றுமே வீணானதில்லை. இது போலவே உண்மையான வாழ்க்கை எதுவும் தோல்வியடைந்ததில்லை."

R. W. எமர்சன்

x x x

"மகிழ்ச்சி கொண்ட மனம் உடலுக்கு உறுதி தரும்; சோர்வு கொண்ட மனம் நோயை உண்டாக்கும். 'இன்பமான நெஞ்சு மருந்தைப் போன்றது; உடைந்த உள்ளம் எலும்புகளை வரட்சியாக்கி விடும்' என்கிறது பழமொழி நூல்."

C. Harry Brooks

இராகு காலமும் சோதிடமும்

[உண்மையை யார் சொன்னாலும் ஏற்றுக் கொள்ள வேண்டும்; பொய்யையும் தீமையையும் எவர் கூறினாலும் கண்டிக்க வேண்டும். இது தான் அறிவியல் வாதிக்கு அழகு. இக்கட்டுரை பல ஆண்டுகட்கு முன்பு "கல்கி" (திரு. ரா. கிருஷ்ணமூர்த்தி)யினால் எழுதப்பட்ட தாகும்.]

'ராகு' வென்றால் என்ன வென்பது நீங்கள் எல்லோரும் அறிந்த விஷயமே. ராகு வென்பது ஒரு கிரகம் அல்லது ஒரு பாம்பு. அல்லது ஓர் இராட்சதன், அல்லது இராட்சதப் பாம்புக் கிரகம். இராகுவுக்குச் சில சமயம் திடீரென்று அகோரமான பசி உண்டாய் விடும்! பின்னர் அது என்ன செய்யும் தெரியுமல்லவா? பகலாயிருந்தால் சூரியனையும், இரவாயிருந்தால் சந்திரனையும் அப்பம் என்றெண்ணி விழுங்கி விட முயலும்! ஆனால் சூரியன் என்றால் இலேசா என்ன? சூரியனுடைய குறுக்களவு 1,00,00,00... மைல். (எவ்வளவு பூஜ்யம் என்பது நினைவில்லை. பூஜ்யம் எவ்வளவு போட்டால்தான் என்ன? இதே முறையில் எல்லாக் கிரகங்களின் அளவையும் கணக்காகச் சொல்லிவிடலாமென்பதை மட்டும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்!) பூமியிலிருந்து சூரியனுடைய தூரமோ ஒன்று போட்டுப் பதினாறு பூஜ்யம் மைல் என்று நினைக்கிறேன். இவ்வளவு தூரத்திலிருக்கும் சூரிய பகவான் வருடந்தோறும் நாம் கொடுக்கும் பொங்கல், வாழைப் பழம் முதலியவைகளைச் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போதே வெய்யில் மண்டை வெடிக்கின்றது. இப்படிப்பட்ட சூரிய பகவானை விழுங்க முயலுபவனின் கதி என்னவாகுமென்று சொல்ல வேண்டியதில்லை.

இப்படியாக, ராகு சூரியனையோ, சந்திரனையோ விழுங்கப் பார்த்து முடியாமல் திரும்பக் கக்கி விடுவதற்குத்தான் சூரிய சந்திர கிரகணங்கள் எனப் பெயர் என்பதை நாமெல்லோரும் அறிவோம். வாசகர்களின் காதோடு ஒரு சமாசாரம். இந்தக் கதையில் உண்மையாக உங்களுக்கு நம்பிக்கை கிடையாது. எனக்கும் நம்பிக்கை கிடையாது. முறையே, பூமி, சந்திரன் இவற்றின் நிழலினால் எப்படி சூரிய-சந்திர கிரகணங்கள் உண்டாகின்றன வென்பதை நாலாம் வகுப்பிலேயே நாம் படித்திருக்கின்றோம் அல்லவா? ஆனால் கிரகண தினத்தன்று மட்டும் இந்த விஞ்ஞான அறிவெல்லாம் நமக்கு மறந்து போய்விடுகிறது. அன்று, கடல் நீரிலோ குளங் குட்டையிலோ தலை முழுகித் தர்ப்பணம் முதலியவைகள் செய்ய நீங்களும் நானும் தவறுவதில்லை. இது குறித்து நாம் வெட்கப் படவேண்டிய அவசியமுமில்லை. வான சாத்திரத்தில் தேர்ச்சி பெற்ற எம். ஏ. பட்டதாரிகள் கூட அப்படித்தான் செய்கிறார்கள்! இது நிற்க.

எனது சோதனை

ராகுவைப் பற்றியும், கிரகணங்களைப் பற்றியும் இப்பொழுது நமக்கு நன்றாக உண்மை விளங்கி விட்டது. ஆனால் இந்த ராகு காலம்: அதன் இரகசியம்தான் எனக்குப் பிடிபடவில்லை. ராகுவுக்கும் காலத்திற்கும் என்ன சம்பந்தம் இருக்கக் கூடும்? ராகு காலத்திலும், ஞாயிற்றுக் கிழமை சாயங்காலம் வரும் ராகு காலம் மிகப் பொல்லாததாம்! ஒரு முறை ஞாயிற்றுக்கிழமை மாலை ஒரு காரியத்துக்காக நான் புறப்பட்டுச் சென்றேன். புறப்படும் போதே "ராகு காலத்தில் கிளம்புகிறோம்!" என்று நெஞ்சு அடித்துக்கொண்டது. அதற்கேற்றாற் போல் காரியமும் நடக்கவில்லை. சரி, சரி, ராகு காலப்பலன்தான் என்று தீர்மானித்துவிட்டேன். ஆனால் நான் கொஞ்சம் சந்தேகப் பிரகிருதி என்பது உங்களுக்குத் தெரியுமே. மறுபடியும் யோசனை வந்து விட்டது. நான் புறப்பட்ட நேரத்திற்கும் நான் பார்க்கச் சென்றவர் ஊரில் இல்லாததற்கும் என்ன சம்பந்தம் இருக்கக் கூடும்? ராகு காலத்திற்கு முன்னால் போயிருந்தாலும் அவர் இருந்திருக்க முடியாது. இவ்வாறு எண்ணி வேறொரு நாள் வேண்டுமென்றே ராகு காலத்தில் கிளம்பிச் சென்றேன். அன்று வேலை திருப்திகரமாய் நடந்தது. அதற்குப் பிறகு பல முறை ராகு காலத்தில் காரியம் தொடங்கிப் பார்த்தேன். சில முறை நடந்தது; சில முறை நடக்கவில்லை. ஆகவே காரிய சித்திக்கும் கிளம்பும் நேரத்துக்கும் சம்பந்தம் ஒன்றுமில்லை என்பது விளங்கிற்று. இக் கட்டுரையையும் நான் துணிந்து ராகு காலத்தில்தான் எழுதத் தொடங்குகிறேன்!

இதற்குள்ளாக, நேயர்களில் பாதிப்பேர் என்னை 'நாஸ்திகன்' என்றே தீர்மானித்திருப்பார்கள் என்றே நினைக்கிறேன். உண்மையில் நான் கடவுள் கட்சியில் சேர்ந்தவன்தான். நான் பிறந்ததிலிருந்து கடவுளுடைய கட்சியில் இருந்துவிட்டு இப்போது அவருக்கு ஆபத்து வந்திருக்கும் சமயத்தில், அவரைக் கைவிட்டு விடுவதென்றால் என் மனம் இடம் கொடுக்கவில்லை. அது நம்

சோவியத் நாடு

"பிற உலக நாடுகள் ஒரு தேக்கத்தில் சிக்கிக்கொண்டு தவிக்கும்போது, சில சங்கதிகளில் பின்னோக்கியும் சென்று கொண்டிருக்கும்போது, சோவியத் நாட்டில் நம் கண் முன்னே புதியதோர் உலகம் உருவாக்கப்பட்டு வருவதைக் காண்கிறோம். லெனினது பாதையில் செல்லும் ரஷ்யா எதிர் காலத்தை நோக்கியே தன் பார்வையைச் செலுத்துகிறது. ஆனால் பிற நாடுகளோ, செத்து மடிந்த கடந்த காலத்தின் மரத்துப் போன பிடியில் சிக்கி. உதவாக்கரைப் பழங்காலத்தின் மிச்ச சொச்சங்களை முரட்டுப் பிடியாகப் பிடித்துக்கொண்டிருப்பதிலேயே தங்கள் சக்தி முழுவதையும் செலவிடுகின்றன. குறிப்பாக, மிகப் பின்தங்கிய மத்திய ஆசியப்பகுதி சோவியத் ஆட்சியின் கீழ் அடைந்துள்ள மகத்தான முன்னேற்றங்கள் என்னைப் பெரிதும் கவர்ந்துள்ளன. சீர்தூக்கிப் பார்த்தால்,நான் ரஷ்யாவுக்கே ஆதரவானவன். இருண்ட உலகில், ஒளியும் உற்சாகமும் தரும் ஒரே நிகழ்ச்சி, சோவியத் ஆட்சி."

—நேரு: சுயசரிதை

பிக்கைத் துரோகமாகும் அல்லவோ? எனக்கு வயதோ இந்தியமக்களின் சராசரி வயதைவிட அதிகமாய்விட்டது. இன்னும் எத்தனை காலம் உயிர்வாழப் போகிறேனே தெரியாது. (ஜோதிடர்கள் 60 வயது என்று சொல்லி இருக்கிறார்கள் என்றாலும், என்னுடைய நண்பர்கள் சிலருடைய ஜோதிட அனுபவம் அவ்வளவு நம்பிக்கை யூட்டுவதாக இல்லை.) மனித காயம் அநித்யம். இன்றைக்கிருப்பாரை நாளைக்குக் காணோம். இந்த நிலையில் ஏதோ இருக்கும் வரையில் கடவுள் கட்சியிலேயே இருந்துவிட்டு உயிரை விடலாம் என்று உறுதியாகத் தீர்மானித்திருக்கிறேன்- ஆகையால் "நாஸ்திகன்" என்னும் பழியைத் தயவு செய்து என் பேரில் போட வேண்டாம்.

"அப்படியானல் நீர் ராகு காலத்தைப் பற்றிக் குறைசொல்கிறீரே! சொல்லலாமா?" என்று சிலர் கேட்கலாம். அப்படிக் கேட்பவர்கள் ராகு காலத்துக்கும் கடவுளுக்கும் என்ன சம்பந்தம் என்பதை முதலில் தெரிவித்தல் நலம். சம்பந்தம் எதுவும் இருப்பதாக நான் நினைக்க வில்லை. கடவுள் என்றால் எல்லாவற்றையும் கடந்து நிற்பவரென்று பொருள். எனவே, அவர் அறியாத் தனத்தையும் கடந்து நிற்க வேண்டுமல்லவா? ஆகையினுல்தான் மனிதனுக்கு ஆண்மையையும் அறிவையும், ஊக்கத்தையும் உறுதியையும் அளித்த பகவான், இவ்வளவும் பயன் படாமற்போக நடுவில் நாளையும் கிழமையையும் ராகு காலத்தையும் வாரசூலையையும் வைத்திருப்பார் என்று என்னால் நம்ப முடியவில்லை.

சோதிட பலன்

கடவுள் விஷயத்தை இவ்வளவு திருப்திகரமாகத் தீர்த்துவிட்டபடியால், இனிமேல் சோதிடத்தைப் பற்றி என்னுடைய அனுபவங்கள் சிலவற்றைத் தைரியமாகச் சொல்லலாமென எண்ணுகிறேன். "ஒரு ரூபாய்க்கு ஒரு வருஷ பலன்" விளம்பரங்களைப் பற்றி நேயர்களுக்குத் தெரிந்திருக்கலாம். என்னுடைய நண்பர் ஒருவர் இத்தகைய விளம்பரம் ஒன்றைக் கண்டு ஒரு ரூபாய் பணம் அனுப்பி வைத்தார். அதில் ஜோதிடம் கேட்ட மாதத்திலிருந்து பன்னிரண்டு மாதங்களையும் எழுதி ஒவ்வொரு மாதத்திற்கும் நேராக "நன்மை" "தீமை" "நிஷ்பலன்" என்று இவ்விதமாகப் பலன் குறிப்பிடப் பட்டிருந்தது. இக்கடிதத்தை அப்படியே பெட்டியில் வைத்துப் பூட்டிவிட்டு ஒரு வருஷம் கழித்துப் பரிசோதிக்கலாமென்று நான் அந்த நண்பருக்கு யோசனை கூறினேன். அவ்வாறே ஒரு வருஷம் சென்ற பிறகு ஒருநாள் அக்கடிதத்தைக் கொண்டுவந்தார் நண்பர். பலன்களைப் படித்துவிட்டுப் "பலே ஜோதிடம்! அவ்வளவும் சரியாயிருக்கிறது!" என்று அவர் கூறினர். "என்ன? என்ன?" என்று நான் ஆவலுடன் வினவினேன். அவர் கூறியதாவது:—

"நிஷ்பலன்" என்று இதில் காணப்படும் மாதத்தில் நான் 104 டிகிரி சுரம் அடித்து வைகுண்டத்தை எட்டிப் பார்த்துக்கொண்டிருந்தேன். "நன்மை" என்று இதில் காணப்படும் மாதத்தில் பரீட்சையில் தவறிப்போனேன். "தீமை" என்று இதில் போட்டிருக்கும் மாதத்தில் எனக்குக் கலியாணம் நடந்தது."

இவ்வாறு சொல்லி அவர் சிரித்தார். நானும் நகைத்தேன். ஆனால் சற்று யோசித்துப் பார்த்ததில் சோதிடம் சரி யென்றே தோன்றியது. எப்படியென்றால், முதலில் "நிஷ்பலன்'' மாதத்தை எடுத்துக்கொள்ளுவோம். அம்மாதத்தில் என் நண்பருக்குச் சுரம் அடித்தது உண்மையே. ஆனால் அது காரணமாக அவர் வைகுண்டத்தை எட்டிப் பார்த்தாரே ஒழிய வைகுண்டம் போய்ச் சேரவில்லை அல்லவா? அங்கே போயிருந்தால் அல்லவா சுரம் பலன் தந்ததாகும்? ஆதலின், அது 'நிஷ்பலன்'தான்! பின்னர், 'நன்மை' என்ற மாதத்தில் என் நண்பர் பரீட்சையில் தவறினர்! எனவே, உத்தியோகத்திற்கு அலையும் கவலை இன்னும் ஒரு வருஷத்திற்கு அவருக்கு இல்லாமற் போயிற்று. இது நன்மை அல்ல வென்றால் வேறு எதை நன்மை என்று சொல்லுவது? கடைசியாகக் கலியாணம்...கலியாணம் நன்மையா, தீமையா என்பதைப் பற்றி என் அபிப்பிராயத்தை இங்கே நான் எழுதப் போவதில்லை. நேயர்களில் கலியாணமானவர்கள் எல்லாருக்கும் அது தெரிந்த விஷயமே! பிரம்மசாரிகளாயிருக்கும் பாக்கியசாலிகள் தயவு செய்து தனித் தனியே கலியாணமானவர்களைக் கேட்டுத் தெரிந்துகொள்ளவும்!

"சப்தரிஷி வாக்கியம்" என்று சிலர் கேள்விப்பட்டிருக்கலாம். இது ஒரு பிரம்மாண்டமான சாஸ்திரம்! இவ்வுலகிலே ஆதிகாலத்திலிருந்து இன்றுவரைக்கும் இருந்தவர்கள், இப்போது இருப்பவர்கள், இனிமேல் பிறக்கப் போகிறவர்கள் ஆகிய எல்லாருடைய ஜாதகங்களுக்கும் பிரதிகளும் அவற்றிற்கு மிக நுட்பமான ஆயுள் பலனும் இந்த சாத்திரத்தில் உண்டாம்! என்னுடைய மாமன் ஒருவர் கொடிய தொரு நோயினுல் வருந்திக் கொண்டிருந்தார். அவர் மேற்படி சாஸ்திரம் வைத்திருந்த ஒருவரிடம் சென்று ஏழு ரூபாய் கொடுத்துப் பலன் கேட்டார். ஒரு அறையில் கட்டுக்கட்டாக கிடந்த ஓலைச் சுவடிகளை மூன்று நாள் புரட்டிப் புரட்டித் தேடிய பிறகு அவருடைய ஜாதகத்தைப் போன்ற ஜாதகமும் 200 பாட்டுக்களில் இந்த ஜாதகத்தின் பலன்களும் அடங்கிய சுவடிக் கட்டும் கிடைத்தது. மேற்படி பாட்டுகளுக்கு நகல் எடுத்துக்கொண்டு அவர் திரும்பிவந்து சேர்ந்தார். அதில் அவருடைய ஊர், பெயர் முதற்கொண்டு அன்றுவரை அவருடைய வாழ்க்கை நிகழ்ச்சிகள் எல்லாம் சிறிதளவும் மாறுமல் கூறப்பட்டிருந்தன. இது குறித்து, எல்லாம் மிக்க ஆச்சரியமடைந்தார்கள். ஆனல் எனக்கு வேறொரு விஷயம், அதைவிட ஆச்சரியமாயிருந்தது. "சப்தரிஷி வாக்கியம்'' பண்டைக் கால ரிஷிகளால் அருளிச் செய்யப்பட்டதாம். அதாவது பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் அது எழுதப்பட்டிருக்க வேண்டும். அதற்குப் பின் இன்றுவரை உலகத்தில் எவ்வளவோ கோடானு கோடி மனிதர்கள் பிறந்து இருக்கிறார்கள். அவ்வளவு பேருடைய ஜாதகப் பயன்களும் எழுதப்படுவதற்கு எத்தனை சுவடிகள் வேண்டும்? அந்தச் சுவடிகளையெல்லாம் வைப்பதற்கு எவ்வளவு பெரிய இடம் வேண்டும்? ஆனல் என்னுடைய மாமனர் ஒரு சிறு அறையில் கிடந்த சுவடிகளிலிருந்து தம்முடைய ஜாதகத்தைத் தேடிப் பொறுக்கி எடுத்ததாகக் கூறினர். இது சந்தேகத்துக் கிடமென்பதாக எனக்குத் தோன்றிற்று. பின்னல் சந்தேகமும் நீங்கிவிட்டது. சாஸ்திரம்

பார்த்துவிட்டு வந்ததற்குப் பிறகு ஒன்றுவது அதில் கூறியபடி நடக்கவில்லை. முப்பத்தினுலாவது வயதில் அவர் நோய் நீங்கிக் குணம் பெறுவாரென்றும், அதன் பின்னர் அவருக்கு சர்க்கார் உத்தியோகம் கிடைக்கும் என்றும், இரண்டு பெண் குழந்தைகள் பிறக்குமென்றும், ஐம்பத்தைந்தாவது வயதில் துவாதசி திதியில் காலை பத்து நாழிகைக்கு அவர் காலமாவார் என்றும் சாஸ்திரம் சொல்லிற்று. நல்ல வேளையாக அவர் இந்த விபத்துக்களுக்கெல்லாம் தப்பி, சாஸ்திரம் பார்த்த நாலாவது வருடத்தில் முப்பத்தி மூன்றும் வயதில் அமாவாசையன்று இரவு பன்னிரண்டு மணிக்கு மரண மடைந்தார். அந்த வயதிலே ஒரு சிறு கண்டமிருப்பதாகக் கூட சப்தரிஷி வாக்கியத்தில் சொல்லப்படவில்லை! "சப்தரிஷி வாக்கியத்தைக் காவல் புரிந்த கனவான் கவிபாடத் தெரிந்தவராய் இருக்கலாம் என்பது என்னுடைய ஊகம். சாஸ்திரம் பார்க்க வருவோர் ஏழு ரூபாயைக் கொடுத்துவிட்டு ஓலைச்சுவடிகளைப் புரட்டிக் கொண்டிருக்கும் போது இவர் அவர்களுடைய வரலாறுகளை விசாரித்து அறிந்து கவிபாடிச் சுவடியில் எழுதிக் கும்பலில் சேர்த்துவிடுகிருர் போலும்! ஆனுல் அவர் பேரில் நான் குற்றஞ் சொல்லுவதாக நினைக்க வேண்டாம். தமிழ் நாட்டில் தற்போது கவிகள் பிழைப்பதற்கு வேறென்ன வழி இருக்கின்றது? கவிகளுக்கு மனமுவந்து பணம் கொடுப்போர் யார் இருக்கிருர்கள்? ஒரு பாரதியின் பாடே எவ்வளவோ திண்டாட்டமாக இருந்தது. ஆகவே மேற்படி "சப்தரிஷி வாக்கியக்காரர்" மீது தவறு இருப்பதாக நான் சொல்ல மாட்டேன்!

மேலும் இரண்டொன்று!

இன்னும் இரண்டோர் அனுபவங்களைச் சொல்லுகிறேன். எங்கள் ஊரில் ஜோசியர் ஒருவர் வெகு காலமாகப் பிரபலமடைந்திருந்தார். தூர தூர இடங்களிலிருந்து அவரிடம் சோதிடம் கேட்கவும், கலியாணப் பொருத்தங்கள் பார்க்கவும் ஜனங்கள் வருவார்கள். அவருக்கு அருமையாக ஒரு பெண் இருந்தாள். அவளுடைய கலியாணத்தை மிகச் சிறப்பாக நடத்தினுர் ஜோசியர். கலியாணத்தின் நாலாம் நாள் இரவு மாப்பிள்ளைக்குக் காலரா வந்து மறுநாள் காலையில் பெண் விதவையானுள். இந்தப் பரிதாப சம்பவம் நடந்ததற்கு அடுத்த மாதத்தில் ஜோசியர் எங்கள் ஊரைவிட்டே போய் விட்டார்!

இதன் பிறகு மற்ருெரு பிரபல ஜோசியர் தற்காலிகமாக எங்கள் ஊருக்கு வந்திருந்தார். அவரிடம் விதை விதைப்பதற்கு நல்ல நாள் கேட்டுக்கொண்டு பெரிய மிராசுதார் பலர் சாகுபடிக்கு விதை தெளித்தார்கள். பதினைந்து நாளைக்கெல்லாம் கொள்ளிடம் உடைப்பெடுத்துக் கொள்ளவே நாற்றுக்களெல்

நம் நாடு

இந்தியா – தெற்கு வடக்கில் 2000 மைல்; கிழக்கு மேற்கில் 1850 மைல். கடற்கரையின் நீளம் 3535 மைல்.

நிலப்பரப்பு–12,61,697 சதுர மைல். மக்கள் தொகை 43 கோடியே 90 லட்சம்; கடந்த 10 ஆண்டுகளில் 21·5 சதவிகிதம் பெருகியுள்ளது. ஆயிரம் ஆண்களுக்கு 941 பெண்கள் விகிதம் உள்ளனர்.

லாம் அடியோடு நாசமாயின. பல நிலங்கள் மண் மேடிட்டுப் போயின. சர்க்கார் கிஸ்திகூட வஜா செய்யப்பட்டது என்றால், மகசூல் எத்தனை லட்சணமாய் இருக்குமென்று நீங்களே ஊகித்துக்கொள்ளலாம்!

லாபமென்ன?

ஒருக்கால் வாசகர்களின் சிலருடைய அநுபவம் வேறுவிதமாக இருத்தல்கூடும். அவர்கள் கேட்ட ஜோதிடம் ஒருவேளை பலித்திருக்கக் கூடும். எனினும், அதனால் அவர்கள் அடைந்த பலன் என்ன வென்பதைச் சிறிது சிந்தித்துப் பார்க்க வேண்டும். சோதிட சாஸ்திரமே பொய் என்பதாக நான் சொல்லவில்லை. அந்த சாஸ்திரத்தில் எனக்கு ஆராய்ச்சி கிடையாது. எனவே அது பொய்யென்றோ நிஜமென்றோ நான் சொல்லத் தயாராய் இல்லை. அது உண்மையாகவே இருந்தாலும் அதிகப் பயனில்லை என்றுமட்டுமே தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்குப் பத்து வருஷத்திற்குப் பிறகு ஒரு தீமைவரப் போவதாக வைத்துக்கொள்வோம். அதை இப்போதே தெரிந்து கொள்ளுவதால் நாம் அடையும் பயன் என்ன? தீமையைத் தடுத்துவிட முடியாது. முடியுமென்றால் ஜோசியம் பொய்யாகிவிடுகின்றது. ஆகவே அத்தீமையைப் பற்றி இப்போதிருந்தே எண்ணி எண்ணி வருந்துவதைத் தவிர வேறு லாபம் என்ன? வரப்போவது நன்மையாய்இருந்தாலும்அதைஅறிந்து கொள்ளவும் நான் விரும்ப மாட்டேன். திடீரென்று எனக்கு ஒரு புதையல் கிடைத்தால், அது ஒரு சிறு தொகையாய் இருந்தாலும் சந்தோஷப்படுவேன். புதையல் கிடைக்கப் போகும் விஷயம் முன்னமே தெரிவித்துவிட்டால் "சீ! இவ்வளவுதானா?" என்று வருத்தப்படுவேன். ஆகவே முன்கூட்டித் தெரிந்துகொள்ளுவதில் பயன் என்ன?

கடைசியாக ஜோதிடர்களுக்கு ஒரு வார்த்தை. இதைப் போல, நான் இன்னும் 9999 கட்டுரைகள் எழுதினாலும் உங்களுடைய பிழைப்புக்கு யாதொரு ஆபத்தும் வராது. ஆகையால் கவலையற்று இருங்கள்! இந்தக் கட்டுரை ராகு காலத்தில் தொடங்கி எங்கெல்லாமோ சுற்றி, ஜோதிடத்தில் வந்து முடிந்திருக்கிறது. ராகு காலத்தில் ஆரம்பித்ததன் பயனைப் பார்த்தீர்களா?

["கல்கி"—எழுதிய "ஏட்டிக்குப் போட்டி" என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டது.]

"எவ்வளவுக்கெவ்வளவு மிகுதியான சட்ட திட்டங்கள் இருக்கின்றனவோ, அவ்வளவுக்கவ்வளவு திருடர்களும் அயோக்கியர்களும் மிகுதியாக இருப்பார்கள்."

—IAO-TSE

அச்சிட்டோர் : திரு. ஏ. எம். பொன்னப்பா, மாணிக்கம் பிரஸ், சென்னை-29
ஆசிரியர் & வெளியிடுவோர் : சா. குருசாமி, 84, ஷெனாய் நகர், சென்னை-30

PANDYAN BRICK WORKS

MANUFACTURERS, CONTRACTOR AND LORRY OWNERS

"KASIMARI BUILDINGS"

295, T. H. ROAD, MADRAS-21

Phone: 51436

Specialist in:

Table Mould Bricks, Building Materials, Etc.

Prompt and Efficient Services Guaranteed.

ADMINISTRATIVE OFFICE:

2-28, JONES STREET, MADRAS-1.

Phone: 23109

FACTORY:

P. H. ROAD, MADURAIVOYAL.

Phone: 62107

IMPORTANT: Government of India have approved our Project to mechanise Brick Making. Speedy steps are afoot to go into production. 15 Million in the first year! No more shortage of bricks !!

MEENAKSHI GROUP OF MILLS.

MADURAI (South India).

Manufacturers of:

Single Yarn in counts 16s to 100s, carded and combed, in hanks and in cones for Weaving and Hosiery Factories and Grey Gada. Grey and Bleached Mulls, Long-Cloth, Dyed Cloth etc.

★

1. The Sree Meenakshi Mills, Ltd., Madurai.
2. The Sree Meenakshi Mills, Ltd., Paravai.
3. Thiakesar Alai Manaparai.
4. Alagappa Textiles (Cochin) Ltd., Alagappanagar.
5. Thiagarajar Mills, Kappalur.
6. Rukmini Mills Ltd., Silaiman.
7. Sree Sivakami Mills Ltd., Thenur.
8. Saroja Mills Ltd., Coimbatore.
9. The Coimbatore Kamala Mills Ltd., Coimbatore.
10. Sri Sarada Mills Ltd., Podanur.
11. Sree Rajendra Mills Ltd., Salem.
12. Loyal Textile Mills Ltd., Kovilpatti.
13. Virudhunagar Textile Mills Ltd., Sulakarai.
14. Parvathi Mills Ltd., Quilon.
15. Vijayamohini Mills Ltd., Trivandrum
16. Kerala Lakshmi Mills Ltd., Trichur.